Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් மார்ச். 16 - 22, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 654



## ஜெனீவாவில் வெடித்த துணைப்படை சர்ச்சை

எக்ஸ்ரே

தனிமைக்கு விடுதலை! – ஹொலிவூட் நடிகை

பக்கம் 08

வட - கிழக்கும் அபிவிருத்தியும்

மதியூகி

த்ரிஷாவின் இதயத் திருடன் யார்?

சினி விசிட்

சமாதானப் பாதை எதிர்கொள்ளும் தடைகள்!

இன்னொருவர் பார்வை

அடம் ஸ்மித் வியக்க வைக்கிறார்

உலகை வியக்க வைத்தவர்கள்

# ஆன்மீகம்



## குவலயம் போற்ற வாழ்வோம்

இறைவனைப் பிரார்த்தனை செய்யும் ஒவ்வொரு அடியாரும், உடலும் உள்ளமும் தூய்மையுடையவையாக இருக்கத் தங்களை முதலில் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆசார சீலராய் முடியுமானவரைத் தன்னை ஆக்கிக் கொள்ள வேண்டும். அறம் பிசகாது நெறி தவறாது கூடுமான வரை நன்மையே செய்யாவிடினும் கூட தீமை செய்யாது வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

மனிதன் ஆறறிவு கொண்ட அற்புத பிறவி பெற்றவன். ஐந்தறிவு பெற்ற மிருக நிலைக்கு படி இறங்கலாமா? கூடாது. அன்றாட வாழ்விற்கு அவசியமானது உழைப்பு, அதனை நேர்மையான முறையில் செய்து, முயன்று பொருளீட்டி வையகம் புகழ வள்ளுவன் குறளமுதத்துக் கொப்ப வாழ முயற்சிக்க வேண்டும். முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை.

நாம் மனிதப் பிறவி எடுத்து வாழும் சூழ்நிலையில் எத்தகைய இடர்கள் வந்தாலும் கூட மனம் தளராது திடமாக அதனை எதிர்கொண்டு கடவுள் திருவருளைக் கரம் கூப்பிப் பெற்று, நல்ல குணவானாகக் குவலயம் போற்ற வாழ்வதே மனிதனுக்கு அழகு.

*-சிவஸ்ரீஅ.அரசரெத்தினம், சேனையூர் - 06.*

## இது கிருபையின் காலம்

அன்பானவர்களே; நாம் வாழும் இந்தக் காலம் கிருபையின் காலமாகும். கிறிஸ்துவின் பிறப்பிலிருந்து அவரது இரண்டாம் வருகை வரையிலும் உள்ள காலம் கிருபையின் காலம் என்று அழைக்கப்படுகின்றது.

இந்தக் கிருபைக் காலத்தில் தான் ஆண்டவரின் இரட்சிப்பானது நமக்கு இலவசமாக தந்தருளப்படுகின்றது. கிறிஸ்து சிந்திய இரத்தம் நமக்காக மன்றாடிக் கொண்டிருக்கின்றது. இராஜியத்தின் சுவிஷேசம் உலகெங்கிலும் சகல ஜாதியினருக்கும் சாட்சியாக அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. திடீரென கர்த்தருடைய வருகை நிகழும்போது ஆயத்தமாக இருப்பவர்கள் அவரோடு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அதன்பின் கிருபையின் காலம் முடிவு பெறும். சுவிஷேச கதவுகள் அடைபடும். அப்போது கண்ணீரோடு மாறுதலைத் தேடினாலும் இரட்சிக்கப்பட முடியாது.

அன்பானவர்களே "கிருபையின் காலத்தை தவற விடாதீர்கள். இந்த கிருபையின் காலத்தில் மட்டுமே கிறிஸ்துவிற்காக சிலுவை சுமக்கிற பாக்கியம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. விசேடமாக இந்த லெந்து காலத்தில் எப்போதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" ஆண்டவர் தாமே ஆசீர்வதிப்பாராக.

*-எம்.ஷெரீன், உடுவில்.*

## அல்குர்ஆனின் சிறப்பு

அல்குர்ஆன் மனித குலத்தின் மகத்தான கலங்கரை விளக்காக விளங்குகின்றது. அதன் அழகு நடையும், ஆழிய கருத்துக்களும் உன்னத போதனைகளும் உயரிய ஒழுக்க நெறியும் ஆய்வாளர்களுக்கு அறிவூட்டுகிறது.

அண்ணல் நபி ஒரே ஒரு அற்புதத்துக்குத்தான் உரிமை கொண்டாடினார். அது அல்லாஹ்வின் அல்குர்ஆனே. இதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்கிறார் பாஸ்வொர்த் ஸ்மித் என்ற ஆராய்ச்சியாளர்.


சொல்லைவிட செயலை அதிகமாக வலியுறுத்தும் அல்குர்ஆன், வெறும் வேதமாக அல்ல மனித குலத்தையே தழைக்கச் செய்யும் நாதமாக விளங்குகிறது.

நபியே! நீர் கூறும் மனிதர்களும், ஜின்களும் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து இது போன்ற ஒரு அல்குர்ஆனை கொண்டுவர முயன்றாலும் இதைப் போல அவர்களால் கொண்டுவர முடியாது.

அல்குர்ஆன் 17:88

*-எம்.சி.கலீல், கல்முனை - 05.*


## கவிதைப் போட்டி இல.654



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.03.2006.

கவிதைப் போட்டி இல.654
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### கவிதைப் போட்டி இல.651



பரிசுக்குரிய கவிதை

### புரியவில்லை!

பாரெல்லாம் பறைசாற்றிய
வீரத்தமிழ் - இன்று
வீதியில் வீழ்ந்திருப்பது
விதியின் விளையாட்டா!
வீணர்களின் விஷமத்தனமா
புரியவில்லை...

*-கே.தேவிகா, யாழ்ப்பாணம்.*

### ஆச்சரியம்

புத்திஜீவிகள் விலைபோன
தேசத்தில்
புத்தகங்கள் வீசப்பட்டதில்
ஆச்சரியமில்லை -
ஆனால்
புத்திகெட்ட மனிதர்கள்
இன்னும்
அம்பலத்தில்
இருப்பதுதான்
ஆச்சரியம்...

*-என்.மயூரன், பதுளை.*

### நிஜம்!

வீதியோரம்
அநாதரவாக
வீசப்பட்டுக்
கிடப்பது
மாணவர்களின்
கைநூல்கள்
மட்டுமல்ல
மறுக்கப்பட்ட
தமிழினத்தின்...!
உரிமைகளுந்தான்!!

*-மீராமுகைதீன் ஹாலித், ஏராவூர்*

### பண நூல்

பாடசாலை இலவசப் புத்தகங்களும்
பதுக்கப்பட்டு இரகசியமாய்
பல பல விலைகளில் பணமாக்கப்படுகின்றன.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### கடத்தல்

போதைப் பொருட்களை
போதிய அளவிற்கு கடத்தினோம்
போதாத வேளை - இன்று
இலவசக் கல்விப் புத்தகங்களையும்
இலேசாக கடத்துகின்றோம்.

*-எஸ்.விவியன் றிச்சாட், கண்டி.*

### திரும்பிப் பார்

நாளைய தலைவர்களின்
நல்லாசான் நடுவீதியிலே
நாதியற்று கிடக்கிறதே
நடைபிணமாய் நடப்பவனே
திரும்பிப்பார் - ஒருமுறை.

*-எச்.எம்.பௌசி, காத்தான்குடி.*

### கிழிப்பு

கிழித்தெரியப்பட்டுக்
கிடப்பது
மஹிந்தவின்
சிந்தனையுமல்ல
பிரபாவின்
சிந்தனையுமல்ல.
மாற்றுக்கருத்துடை
யோரின்
நியாயமான
சிந்தனைகள்.

*-எம்.ஏ.எம்.றிபாஸ், கதுருவெல.*

### கல்விக் கண்!

பாடம்
சொல்ல
குரு இல்லை!

கூடம்
காண
குடியில்லை!

கல்விக்கண்
திறக்க
யாரும்
இல்லை!

*-ஏ.எம்.அப்துல், சிறாஜ்நகர்.*

### இழப்பு

தாயக வேட்டையில்
இறங்கியதால் தலையாய
கல்வியையும்
இழந்துவிட்டோம்!
உற்றுப் பாருங்கள்
தரையில் சிதறியவைகூட
தரம் எட்டின் தமிழ்ப் புத்தகங்களே!

*-ஆர்.பிரான்சிஸ், யாழ்ப்பாணம்.*

### புரியவில்லை?

சமாதானமற்ற
நாட்டில்
கல்வி எதற்கு
புத்தகங்கள்
எதற்கு என்பதற்காகவா
வீதியில் போட்டு விட்டீர்கள்.

*-பே.அருந்ததி, வவுனியா.*

### இன்றைய நிலை!

தெருவோரம்
சரிந்து கிடக்கும்
பாடநூல்களின்
பரிதாபநிலைதான்
இன்று கற்றவர்களுக்கும்!

*-எம்.எம்.மிஸ்ரியாஉம்மா, ஏறாவூர் - 03.*

# உங்கள் பக்கம்

## குடை பிடிக்க வைக்கும் குறுந்தூர ரயில் சேவை

**பல்வேறு** பொதுச்சேவைகளிலும் அபிவிருத்தி திட்டங்களிலும் புறக்கணிக்கப்பட்ட, பின் தங்கியுள்ள மலையக மக்களை இலங்கை புகையிரதச் சேவையும் வஞ்சித்து வருவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் ஹட்டனை நோக்கி தினமும் காலையும் மாலையுமாக இரு குறுந்தூர ரயில் சேவைகள் தற்போது நடாத்தப்பட்டு வருகின்றன. ஏனைய போக்குவரத்து வசதிகள் அற்று, அலுவலக மற்றும் பாடசாலை மாணவர்களின் பிரயாணத்திற்கு ஒரே மார்க்கம் இப்புகையிரத சேவையே. ஆயினும் போதிய அளவு ரயில் பெட்டிகள் இணைக்கப்படாமலும், இருக்கும் ரயில் பெட்டிகள் கூட நூதனசாலையில் வைக்கப்படும் அளவிற்கு தரமுடையனவாக காணப்படுவது மிகவும் கவலைக்குரியதாகும். மழை பெய்தால் ரயில் பெட்டிக்குள் குடை பிடிக்கும் அரிய காட்சியினை எவர் வந்தாலும் பார்வையிடலாம்.

கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் 'பவர் செற்' என்றும் புதிது புதிதாக எஞ்சின்கள், ரயில் பெட்டிகள் என சேவையில் ஈடுபடும்போது மலையகத்திற்கு மட்டும் ஏன் இந்த ஓர வஞ்சனை?

சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுப்பார்களா?

*-இரா.கீதா, கொட்டகலை.*


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk


# வாசகர் சாலை



வண்ண வண்ண தினமுரசே!
கனவெல்லம் நினைவெல்லம்
காலமெல்லாம்
நீயே என்றால் நம்புவாயா!
ஒரு வாரம் உனை பார்க்கா விடின்
எனக்கில்லை உறக்கம்! ஒரு நாள் நீ
பேசாவிடின் இதயம் அது
துடிக்கவில்லை
என்றால் நம்புவாயா! அது தான்
உண்மை
சொர்க்கம் நீ! சொந்தம் நீ
உயிரும் நீ! உணர்வும் நீ
உலகமும் நீ! நீ இதே போல் இன்னும்
உயரத்தில் கொடி கட்டிப் பறக்க
வேண்டும்.
உனக்கு என் மனமார்ந்த
வாழ்த்துக்கள்!

*-என்.மாலதி, புத்தளம்.*

### முடி சூடா மன்னன்

முடியுடை மூவேந்தர் வளர்த்த
தமிழை
முடிசூடா முரசு நீ வளர்த்து
வருகிறாய்
ஔவையும் கம்பனும் உமறும்
கவிதைகளால் வாழ வைத்த
உன்னை
இனிக்க இனிக்கப் பேசியும் எழுதியும்
வருகின்றோம். நாட்டின் நாளாந்த
தினசரி போலன்றி நடுநிலை நின்று
செய்திகளைத் தருகின்றாய்.
நூற்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களைத்
தரும்
நீ நீடூழி வாழ எம் ஆசிகள்.

*-எம்.எஸ்.நோபா ஸமா, மருதமுனை.*

அன்புடன் முரசிற்கு!
எக்ஸ்ரே ரிப்போட் நரனும்,
அரசியல் அலசல்
மதியூகியாரும், அதிரடி
ஐயாத்துரையாரும் காதில பூ
கந்தசாமியாரும்
ஒருவருக்கொருவர்
சளைத்தவர்கள் அல்லர்
என்பதை மீண்டும் மீண்டும்
நிரூபித்து வருகின்றனர்.
அரசியல் பக்கத்தில்
ஆர்வமுடைய என்
போன்றோருக்கு இவர்களின்
ஆக்கங்கள்
ஆவணப்படுத்தப்படும்
பொக்கிஷங்களாகும்.

*-இஸ்மைல் ஜுனைதீன், அட்டாளைச்சேனை.*

### ஒரு வார்த்தை சொல்லிவிடு

நான் நட்பு என்றேன்
நீ காதல் என்கிறாய்.
உனக்கும் இது புரியும்
ஊராருக்கும் இது தெரியும்
ஏன் என்னை வதைக்கிறாய்
அதில் என்ன சுகம் உனக்கு
எனக்குள் இருப்பதை - என்
முகத்தில் காணவில்லையா?
என்னை ஏமாற்றி பொய்யுரைத்து
ஏமாந்தது நீ என்பதை
நினைத்துப்பார் தவிப்பாய்
அப்போது ஏன் இந்த தவிப்பு
எதற்காக இப்படி
இனியாவது சொல்லிவிடு
ஒரு வார்த்தைதனில்...
நாமிருவரும் நண்பர் என்று.

*-எஸ்.கணேசமூர்த்தி, பூம்புகார்.*

# தமிழ் கட்சிகளின் வேட்பாளர்களையே
## துணைப்படை முக்கியஸ்தர்களாகக் காட்டியது புலி அமைப்பு

வடக்கிலும் கிழக்கிலும் ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி) ஆகிய தமிழ் கட்சிகளின் சார்பில் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்ட முக்கியஸ்தர்களின் பெயர்களையே சட்டவிரோத துணைப் படைகளின் பிரதேசத் தலைவர்களென்று ஜெனீவா பேச்சுவார்த்தையின் போது பட்டியலிட்டுச் புலிகள் சமர்ப்பித்திருக்கின்றனர். - இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, புளொட் இயக்கத்தின் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் தெரிவித்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி) தலைவர் வரதராஜப் பெருமாள் இந்தியாவிலிருப்பதால் அவருடன் தொடர்புகொள்ள முடியவில்லை.

ஆனால் மேற்படி அணியின் மட்டக்களப்பு முக்கியஸ்தரான இரா.துரைரத்தினத்திடம் இது குறித்துக் கேட்டபோது அவரும் அதே பதிலையே அளித்தார். தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், முதன்மை வேட்பாளர்கள் மற்றும் முக்கிய வேட்பாளர்களின் பெயர்களைத் துணைப்படை முக்கியஸ்தர்களாகப் பட்டியலிட்டு புலிகள் ஜெனீவாவில் சமர்ப்பித்துள்ளனரென்றும் அவர்கள் தெரிவித்தனர். ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இது பற்றிக் கூறுகையில் :

எமது கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ் அல்லது கிருபன் கொழும்பில் துணைப்படை முக்கியஸ்தராகச் செயற்படுகிறாரென்று புலிகள் தெரிவித்துள்ளனர். இவர் முல்லைத் தீவு மாவட்டத்திலுள்ள மாரிறைன்பற்று பிரதேச சபையின் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகிறார். எமது கட்சியின் தென்மராட்சி அமைப்பாளரான சார்ள்ஸ், மட்டக்களப்பில் சிவா மாமா, கொம்மாந்துறையில் ரவி, வாழைச்சேனையில் சிவா, வவுனியாவில் ரகு, காஸ்ட்ரோ, ரவி, லிங்கேஸ், மன்னாரில் ஹரிச்சந்திரா, திருமலையில் அன்ட்ரூ ஆகியோர் ஈ.பி.டி.பி.யின் துணைப்படை முக்கியஸ்தர்களாகச் செயற்படுகின்றனரென்று புலிகள் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். ஆனால் இவர்களனை வருமே பல்வேறு உள்ளூராட்சிச் சபைகளில் போட்டியிடு கின்றனர்.

கொழும்பில் ராகவன், யாழ்ப்பாணத்தில் ஜெயா மாஸ்டர், வவுனியாவில் பவான், மன்னாரில் சிவசம்பு, மட்டக்களப்பில் பாக்கியராஜன் ஆகி யோரான தமது இயக்க உறுப்பினர்களையே புளொட் துணைப்படை தலைவர்களென்று புலிகள் ஜெனீவாவில் தெரிவித்தனர். இவர் கள் புளொட் சார்பில் தேர்தல்களில் போட்டியிடுகின்றனர் புளொட் தலைவர் சித்தார்த்தன்

கொழும்பு ஸ்ரீதரன், மட்டக்களப்பு துரைரத் தினம் ஆகிய ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி உறுப்பினர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றனரென்று ஸ்ரீதரன் தெரிவித்தார். எம்மையே துணைப் படைகளென்று புலிகள் சுட்டிக்காட்டி யுள்ளனர் என்றார் அவர்.

இத் தமிழ்க் கட்சிகள் மூன்றுமே ஜனநாயக வழிக்குத் திரும்பியவை மட்டுமல்ல, இன்னமும் புலிகளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருப்பவையுமாகும். கருணா தரப்பு முக்கியஸ்தரொருவரிடம் இதுபற்றிக் கேட்டபோது -

நாம் தேர்தல்களில் போட்டியிடவில்லை. ஆனால், நாம் எவருக்கும் துணைப் படைகளாக இயங்கவில்லை. பிரபா அணிப் புலிகளிடமிருந்து பிரிந்து சென்றவர்களென்பதால் எமது பெயர், விவரங்கள், தொலைபேசி இலக்கங்கள் அவர்களுக்குத் தெரியும். ஆனால் எமது உறுப்பினர்களின் பழைய கையடக்கத் தொலைபேசி இலக்கங்களையே அவர்கள் ஜெனீவாவில் சமர்ப்பித்துள்ளனர் என்றார். 'ஜிஹாத்' அமைப்பு என்ற அமைப்பொன்று இல்லவே இல்லை என்றார்கள் கிழக்கு மாகாண முஸ்லிம் தலைவர்கள்.

## பிரபாகரன் எச்சரிக்கை

புலி இயக்கத் தலைவர் பிரபாகரன், அன்ரன் பாலசிங்கத்தைக் கடிந்து கொண்டாரென்று வன்னி, புதுக்குடியிருப்பிலிருந்து எமக்குக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. "ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைத் தமிழ் மக்கள் ஏன் ஆதரிக்கிறார்களோ தெரியவில்லை" என்று அன்ரன் பாலசிங்கம், இலங்கைத் தனியார் தமிழ் இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு சுவிற்சர்லாந்தின் செலிக்னியில் அளித்த பேட்டி தொடர்பாகவே பிரபாகரன் கண்டனம் தெரிவித்துள்ளார். அன்ரன் பாலசிங்கத்தின் கருத்து, புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளல்லர் என்ற அர்த்தத்தைக் கொடுப்பதாகவும் பிரபாகரன் தெரிவித்துள்ளார். 2002ஆம் ஆண்டு பிரபாகரன், வன்னியில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது, பிரபாகரனுக்குப் பிடிக்காத விதத்தில், முந்திரிக்கொட்டை போல் முந்திக்கொண்டு கருத்துத் தெரிவித்ததாலேயே அவர் சில காலம் ஓரங்கட்டப்பட்டாரென்றும் அதன் பின்னரே தமிழ்ச்செல்வனுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதென்றும் வன்னித் தகவல்கள் கூறுகின்றன. பிரபாகரனின் மொழிபெயர்ப்பாளராக அந்த ஊடக மாநாட்டில் பங்குபற்றிய பாலசிங்கம், வெளிநாட்டு ஊடகவியலாளரின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், "நான் சொன்னால் தலைவர் சொன்னதற்குச் சரி, தலைவர் சொன்னால் நான் சொன்னதற்குச் சரி" என்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியிருந்தார். இது பிரபாகரனுக்குப் பிடிக்காததாலேயே பாலசிங்கம் சில வருடங்கள் ஓரங்கட்டப்பட்டார். ஆனால் இம்முறை எச்சரிக்கையோடு மட்டும் சரி என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.



கச்சதீவு அந்தோனியார் தேவாலய உற்சவ யாத்திரீகர்கள் மத்தியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

## கருணா விவகாரத்தில் அரசு தலையிடாது

"புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அரசாங்கப் படைகள் செல்ல முடியாதென்று யுத்த நிறுத்த ஒப்பந்தம் தெளிவாகக் கூறுகிறது. எனவே அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் பிரபா அணிப் புலிகளுக்கும் கருணா தரப்பினருக்குமிடையில் நடைபெறும் மோதல்களில் தலையிடக் கூடிய நிலையில் அரசாங்கப் படைகள் இல்லை" என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, லண்டன் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். புலிகளின் உள்விவகாரங்களில் தலையிடும் நோக்கம் அரசுக்கு இல்லையென்றும் அவர் சொன்னார்.

## பெண்களை யுத்தத்தில் ஈடுபடுத்த வேண்டாம் -மகளிர் அமைப்பு கோரிக்கை

"கடந்த இரண்டரை தசாப்த கால யுத்தத்தின் விளைவாக வடக்கு - கிழக்கில் 25,000 திற்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாகியுள்ளனர். இதேயளவு பிள்ளைகள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். எனவே அர்த்தமற்ற இந்த யுத்தத்தை நிறுத்தி ஆக்கபூர்வமாகச் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க அரசும் புலிகளும் அர்ப்பண சிந்தையோடு முன்வர வேண்டும்" என்று யுத்தத்துக்கெதிரான வடக்கு - கிழக்கு மகளிர் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"புலிகளின் இயக்கம் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்களை யுத்தத்தில் ஈடுபடுத்தியிருப்பதாகவும் இப்போதும் பல பெண்களை வலுக்கட்டாயமாகப் பிடித்து ஆயுதப் பயிற்சி வழங்குவதாகவும் அறிகிறோம். சுமுகச் சூழலில் வாழ வேண்டிய இப் பெண்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவது மனித உரிமை - மீறலாகும். அத்துடன் தற்கொலைப் போராளிகளாகப் பெண்களையே அவர்கள் கூடியளவில் பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக இளம் பெண்களே இதற்குப் பயன்படுத்தப்படுகின்றனர். குண்டுகளை உடலில் மறைத்து வைப்பதற்கு பெண்களின் உடலமைப்பு வசதியாக இருப்பதாலும், சந்தேகம் ஏற்படாதவாறு இலகுவில் எங்கும் அவர்களை அனுப்ப முடியுமென்பதாலும் பெண்களை இந்த நாசகாரச் செயல்களில் ஈடுபடுத்துகின்றனர். இவை நிறுத்தப்பட வேண்டும்" என்றும் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளது.

## தப்பியோடிய சிறுவர்கள் யுனிசெப்பிடம் கையளிப்பு

சம்பூரிலுள்ள புலிகளின் பயிற்சி முகாமிலிருந்து தப்பியோடி கடற்படையினரிடம் சரணடைந்த சந்திரகுமார் என்ற 17 வயதுச் சிறுவனும் 16 வயதுப் புவனேசன் என்பவரும் பெற்றோர்களால் யுனிசெப் அமைப்பிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். இந்த இருவரும் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் பங்குபற்றியதால் ஆபத்தை எதிர்நோக்குவதாகவும், அவர்களின் பாதுகாப்புக் கருதி யுனிசெப் அதிகாரிகளிடம் கையளிப்பதாகவும் திருமலை நீதிவானிடம் பெற்றோர் தெரிவித்தனர்.

## கச்சதீவு உற்சவத்துக்கு தமிழக மக்கள் வருகை தருவதற்கு இருக்கும் தடைகளை நீக்குவேன் -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

"கச்சதீவு அந்தோனியார் தேவாலய உற்சவத்துக்கு இம்முறை குறைந்தளவு தமிழக மக்களே வருகை தந்துள்ளனர். தமிழக மக்கள் இங்கு வருகை தருவதற்குத் தமிழக பொலிஸார் தடை விதித்துள்ளதாலேயே யாத்திரீகர் தொகை குறைந்துள்ளதாகத் தெரிய வருகிறது. இது குறித்துத் தமிழக அதிகாரி களுடன் பேசி அடுத்த உற்சவத்துக்கு அதிகளவு மக்கள் வருகைதர ஆவன செய்வேன்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். கடந்த 12ஆம் திகதி நடைபெற்ற கச்சதீவு உற்சவத்திற்கு வருகை தந்த யாத்திரீகர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டிருக்கும் வசதிகளை நேரில் கண்டறிவதற்காக அங்கு திடீர் விஜய மொன்றினை மேற்கொண்ட அமைச்சர், தமி ழக யாத்திரீகர்கள் மத்தியில் பேசுகை யிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழக மக்களுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்குமிடையில் நீண்ட கால கலாசார, பாரம்பரிய, சமூகத் தொடர்புகள் உண்டு. நீங்கள் இங்கு வருகை தருவதற்கு இலங்கை அரசு எவ்விதத் தடையும் விதிக்காது. கடந்த காலங்களைப் போன்று தமிழக யாத்திரீகர்களும் இலங்கைத் தமிழ் யாத்திரீகர்களும் தங்குதடையின்றிக் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகளைச் செய்வேன் என்றும் அமைச்சர் கூறினார். யாத்திரீகர்களின் வசதி கருதி கட்டட வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பேன் என்றும் சொன்னார்.

## திரைப்பட விழா



'பெண்கள் தொடர்பு ஊடகங்களுக்கான கூட்டமைப்பு' என்னும் இயக்கம், மகளிர் சம்பந்தப்பட்ட தொனிப்பொருட்களைக் கருவாகக் கொண்ட ஹிந்தித் திரைப்படங்களைக் கொழும்பில் திரையிட ஒழுங்கு செய்துள்ளது. எதிர்வரும் 20, 21, 22ஆம் திகதிகளில் இத் திரைப்படங்கள் பிற்பகல் 2.30, மாலை 6.30 மணிக் காட்சிகளாக இல.10, சுதந்திர சதுக்க அவெனியூ, கொழும்பு - 07இல் அமைந்துள்ள ரஷ்ய நிலையத்தில் திரையிடப்படும். பிரவேசம் இலவசம். 'கமௌ பாணி' என்ற படத்தில் வரும் ஒரு காட்சியே மேலே தரப்பட்டுள்ளது.

## முஸ்லிம் காங்கிரஸும் அரசுடன்...

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒப்பந்தமொன்றினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்யவுள்ளதென்று மேற்படி கட்சியின் முக்கியஸ்தரான பசீர் சேகு தாவூத் தெரி வித்தார். "அரசுடன் இணையப் போகிறீர்களா?" என்று கேட்டதற்கு, "முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒப்பந்தமொன்றினைச் செய்துகொள்ளப் போகிறோம்" என்று கூறினார். சகல சமூகங்களினதும் அபிலாசைகளைத் திருப்திப் படுத்தக் கூடிய அரசியல் தீர்வொன்றினைக் காண ஜனாதிபதி அவர்களுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம் என்றும் அவர் சொன்னார்.

## கையெழுத்து இயக்கம்

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவியிலிருந்து கலாநிதி ரட்னஜீவன் கூலை அகற்றக் கூடாதென்று கோரி அப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கையெழுத்து இயக்கமொன்றினை ஆரம்பித்துள்ளனர். ஜீவன் கூலை அகற்றக் கோரியும், ஆதரவு தெரிவித்தும் அங்கு இயக்கங்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## வட - கிழக்கு மக்களின் உரிமைகளை நிலைநிறுத்துக! -ஜனநாயகப் பேரவை கோரிக்கை

"வடக்கு - கிழக்கிலுள்ள 71 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளை அரசாங்கமும் தேர்தல் திணைக்களமும் உரிய அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டும். ஆனால், கடந்த கால பாராளுமன்றத் தேர்தல்களிலும், கடந்த வருட ஜனாதிபதித் தேர்தலிலும் இடம்பெற்றதைப் போன்ற தேர்தல் மோசடிகள் இடம்பெறா வண்ணம் பாதுகாப்பு நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்" என்று வடக்கு - கிழக்கு ஜனநாயகப் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் கோரியுள்ளது. மேற்படி அமைப்பின் இணைச் செயலாளர்களான அ.கதிர்காமநாதன், செ.இராஜதுரை ஆகியோர் கூட்டாகக் கைச்சாத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"வடக்கு - கிழக்கிலுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் கடந்த பல வருடங்களாக இடம்பெறவில்லை. இது ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமைகள் ஆகியவற்றை அப்பட்டமாகவே மீறும் செயலாகும். இதனால் தமக்கு விரும்பிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வட - கிழக்கு மக்கள் பல வருடங்களாக இழந்துள்ளனர். அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளுக்கு தேர்தல் வேலைகளுக்கென ஊழியர்களும் பொலிசாரும் செல்ல முடியாத நிலை ஏற்படுமானால் அங்கு தேர்தல்களைத் தவிர்த்துக் கொள்வதே நல்லது. இல்லையேல் தேர்தல் தில்லுமுல்லுகள், மோசடிகள் இடம்பெறும். அரச கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் தேர்தல்களை நடத்த முடியவில்லையென்பதற்காக அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தேர்தல்களை நடாத்தாமல் விடுவதோ அல்லது ஒத்திப் போடுவதோ ஜனநாயக விரோத செயலாகும். 2002ஆம் ஆண்டு அம்பாறையிலுள்ள சிங்களப் பிரதேசங்களில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இப்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிராகரிக்கப்பட்ட நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆகக் குறைந்தது வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களிலாவது தேர்தலை நடத்துமாறு 'நுஆ' வின் செயலாளர் நாயகம் சேகு இஸ்ஸதீன் கேட்டுள்ளார். ஆனால் தமிழ்ப் பகுதிகளில் தேர்தல் மோசடிகள், தில்லுமுல்லுகளில் ஈடுபடுவது ஜனநாயக விரோத, ஏகபோக சக்திகளின் வாடிக்கையாகி விட்டதால் அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்" - இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்று 17ஆம் திகதி பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துத் தேர்தல் திணைக்களம் முடிவெடுக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடுத்த சுற்றுப் பேச்சில் துணைப்படையென்ற பேச்சே இல்லை

ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள யுத்த நிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது, துணைப் படைகளென்று கூறப்படும் விடயத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படமாட்டாதென்று இலங்கை அரசின் சமாதான செயலகப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். "யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8ஆவது பிரிவு துணைப் படைகளின் ஆயுதக் களைவு பற்றிக் கூறுகின்ற போதிலும், அதில் துணைப் படைகள் எவையென இனங்காட்டப்படவில்லை. துணைப் படைகளென்பது, சட்டபூர்வமான அரசாங்கப் படையுடன் இயங்கும் சட்டவிரோத ஆயுதக் குழுக்களாகும். அவ்வாறான ஆயுதக் குழுக்களெதுவும் அரச படைகளுடன் இணைந்து செயற்படவில்லை. அது தவிர, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடமாடும் சட்டவிரோத ஆயுததாரிகளின் ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்றே கடந்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது அரசும் புலிகளும் இணக்கம் கண்டன. இது இரு தரப்பும் வெளியிட்ட கூட்டறிக்கையிலும் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புலிகள் கூட அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதங்களுடன் நடமாட முடியாது. ஆனால், அரசியல் வேலைகளுக்கென அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதப் படையினரின் அனுமதியுடன் வந்த புலிகள் பலர் அத்துமீறல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆயுதங்களுடன் நடமாடுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப் பிடித்து நீதிமன்றங்களில் நிறுத்தி தண்டனை வழங்குமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது." - இவ்வாறு அவர் கூறினார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## ஒப்பந்த மீறல்களை ஒட்டு மொத்தமாகப் பாருங்கள்

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**இம்மாதம்** முப்பதாம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், அந்தத் திகதியில் நடக்குமா அல்லது இன்னொரு திகதிக்கு ஒத்திவைக்கப்படுமா என்ற கேள்வி எழத் தொடங்கியுள்ளது.

சில வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டது தொடர்பான வழக்குகளின் தீர்ப்பும், வழக்குகளும் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருப்பதும், சில தீர்ப்புகள் நிராகரிப்புக்கு எதிராகவும் வந்து கொண்டிருப்பதால், இந்தக் கேள்வி நியாயமானது தான்.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரை தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் சராசரிக்கும் அதிகமாக இருப்பதாகவே கருத இடமுண்டு. ஆனால் தமிழ் கூட்டமைப்பு தேர்தலை ஒத்திவைக்குமாறு வலியுறுத்தி வருகிறது. தமிழ் கூட்டமைப்பின் நேர் எதிர் போட்டியாளர்களான ஈ.பீ.டி.பீ.யினர், புலிகளின் தலையீடு இல்லாவிட்டால் சுமுகமான தேர்தல் நடைபெற சாத்தியம் இருப்பதாகக் கூறிவரும் அதேவேளை, அக்கட்சியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தற்போது யாழ்ப்பாணத்தில் நின்று மக்களைச் சந்தித்தும், தனது அமைச்சுக்கு உட்பட்ட வகையான வேலைத்திட்டத்தையும் விரிவுபடுத்தி செய்து வருவதும், மக்களின் தொகையான வருகையும் ஈ.பீ.டி.பீ.க்கு இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட இடைவெளியை ஈடுசெய்வதாக அமையும் என யாழ். அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. எது எப்படி இருப்பினும் எதிர்வரும் வாரமளவிலேயே வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா, இல்லையா என்பதை உறுதி செய்ய முடியும்.

அடுத்ததாக கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அவர்களின் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் சம்பவங்களானது இரண்டாம் கட்டப் பேச்சுக்களை பாதிக்குமா என்பது பற்றிய கவலையும் உருவாகி வருகிறது.

இவ்வாறான தாக்குதல்களை துணைப்படைகளும், இராணுவமுமே நடத்துவதாகவும், இது சமாதான முயற்சியைப் பாதிக்கும் எனவும் புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆனால் அந்தத் தாக்குதல்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும், புலிகள் தம்மீது குற்றம் சாட்டுகிறார்கள் என்றும், தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் எவரேனும் துப்பாக்கிகளுடன் நடமாடினால் அதை தாம் கட்டுப்படுத்துவதாகவும், இது புலிகளின் பகுதிக்குள் நடப்பதால் புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினை என்றும் படைத்தரப்பு கூறுகிறது.

குற்றச்சாட்டுகள் எவ்வாறானதாக இருந்தபோதும், தாக்குதல் ஒன்று நடைபெறுவதை எவரும் மறுக்க முடியாது. தாக்குதல்களையும் கொலைகளையும் ஒரே பார்வையில் கண்டிக்கும் எவருக்கும் இந்தச் சம்பவங்களும் கண்டனத்துக்குரியதாகும். அதேவேளை இதை விடவும் பாரிய தாக்குதல் ஒன்றை இதே சமாதான ஒப்பந்த காலத்தில் புலிகள், கருணா அணி மீது நடத்தியதையும் அதன் உறுப்பினர்களைத் தேடித்தேடி வேட்டையாடியதையும் எவரும் கேட்க முடியாது. ஏனெனில் அது தமது உள்ளியக்கப் பிரச்சினை; இதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று புலிகள் சர்வதேசத்துக்கும் அரசுக்கும் நியாயம் கற்பிக்க முயன்றதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் மறந்துவிடமுடியாது. உண்மையான சமாதானத்தை தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் விருப்பம் கொண்ட எவரும் கொலைகளிலோ, தாக்குதல்களிலோ ஈடுபடமாட்டார்கள். துரதிஷ்டவசமாக அவ்வாறானவராக ஒருவரை இனங்காட்டி சுட்டிக்காட்ட முடியவில்லை.

கிழக்கில் முஸ்லிம்கள் தாக்கப்படுவதும், தமிழ் மாற்று கருத்துக் கொண்டோர் சுடப்படுவதும், கடத்தப்படுவதுமாக விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இவை எல்லாமே ஒப்பந்த மீறல்கள்தான். அதுபோல புலிகளின் காவலரண்கள் தாக்கப்படுவதும் ஒப்பந்த மீறல்தான். இவற்றை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது? அதற்கான உத்தரவாதத்தை யாரிடம் பெற்றுக் கொள்வது? என்ற தசாப்தகால கேள்விகளுக்கு இன்னும் விடை தெரிந்தபாடில்லை. இதே நிலை தொடருமாயின் சமாதான முயற்சிகள் பின்னடைவையே காணும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

---

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# ஜெனீவாவில் வெடித்த துணைப்படைச் சர்ச்சை

**நரன்**

Paramilitary

A paramilitary organization is an illegal group that is organized like an army: a right-wing paramilitary group 2 helping the official army of a country : paramilitary police, such as the CRS in France.

**1.** a member of an illegal paramilitary group or organization **2.** a member of an organization that helps the official army of a country.

**ஒக்ஸ்போர்ட்** ஆங்கில அகராதியில் துணைப் படைகளுக்குத் தெரிவிக்கப்பட்ட வரைவிலக்கணத்தைத் தேவை கருதி அப்படியே ஆங்கிலத்தில் மேலே தந்திருக்கிறோம். புலிகளின் மதி உரைஞர் அன்ரன் பாலசிங்கம், தமிழ்மொழி மூல இலங்கைத் தமிழ் இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு துணைப் படைகள் என்று கூறப்படுவதை பற்றி விளக்கியபோதே மேற்கண்டவாறு ஒக்ஸ் போர்ட் அகராதியை ஆதாரம் காட்டினார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பைக் கீழே தருகிறோம்.

துணைப்படை : 1 துணைப்படையென்பது, இராணுவத்தைப் போல ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு சட்ட விரோதக் குழுவாகும்: ஒரு வலதுசாரித் துணைப் படைக் குழு : 2 நாட்டின் சட்டபூர்வ இராணுவத்துக்கு உதவுவது : பிரான்ஸிலுள்ள சீ.ஆர்.எஸ்.போன்ற துணைப் பொலிஸ் படை.

1 சட்ட விரோத துணைப்படைக் குழு அல்லது அமைப்பின் அங்கத்தவரொருவர் : 2 ஒரு நாட்டின் உத்தியோகபூர்வ இராணுவத்துக்கு உதவும் அமைப்பொன்றின் அங்கத்தவர்.

அன்ரன் பாலசிங்கம், கலாநிதிப் பட்டம் பெறவில்லையென்று பரவலாகக் குற்றச்சாட்டுக் கூறப்படுவதால், அவரைக் க(ல்)லாநிதியென்று சிலர் அழைக்கிறார்களென்பது ஒரு புறமிருக்கட்டும். 2002ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புலித் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் செய்து கொண்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 1.8ஆவது பிரிவு துணைப் படைகள் பற்றிக் கூறுவது உண்மைதான்.

"முப்பது நாட்களுக்குள் துணைப் படைகளின் ஆயுதங்கள் களையப்பட்டு, அப்படையினர் வடக்கு - கிழக்குக்கு வெளியேயுள்ள அரச படையணிகளில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்பதே அந்த விதி. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட

**இராணுவத்தைப் போல் ஒழுங்கமைக்கப்பட்ட சட்ட விரோதக் குழுவே துணைப்படையென்று ஒக்ஸ்போர்ட் - அகராதியை மேற்கோள் காட்டிப் பேசுகிறார் பாலசிங்கம். இலங்கை இராணுவத்துக்கெதிராக ஆயுதமேந்திய தமிழீழக் குழுக்கள் அனைத்தையும் தாக்கியழித்தவர்கள் புலிகளே. வே.பாலகுமாரனின் ஈரோஸைத் தவிர, ஏனைய அனைத்து இயக்கங்களையும் சேர்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் புலிகளால் வேட்டையாடப்பட்டனர். பிரேமதாசாவோடு கள்ளக் கூட்டுச் சேர்ந்து கொண்டு, பிரேமதாசாவிடம் ஆயுதங்களும் நிதியும் பெற்றுக் கொண்டு இந்தியப் படைகளுக்கெதிராக இலங்கை அரச படைகளின் துணைப்படையாகச் செயற்பட்ட பாரம்பரியம் புலிகள் இயக்கத்துக்கே உண்டு.**

போது கருணா அம்மான் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதியாக இருந்தாரென்பதும் அதற்குப் பின்னர் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளிலும் புலிகளின் தூதுகோஷ்டியில் ஒருவராக அங்கம் வகித்தாரென்பதும் இங்கு கவனிக்கக் கூடியது. புலிகளுக்குள் எழுந்த உட்கட்சிப் பிரச்சினை பூதாகரமாக முற்றி வெடித்ததையடுத்து 2004ஆம் ஆண்டு ஏப்ரலில் வன்னியிலிருந்து புறப்பட்ட பிரபா அணிப் புலிகள் வெருகல் ஆற்றைக் கடந்து, கருணா தரப்பினர் மீது சற்றும் எதிர்பாராத விதமாக நடத்திய தாக்குதலில், கருணா தரப்பு பல நூற்றுக் கணக்கானோரை இழந்து பின்வாங்கியமை குறிப்பிடத்தக்கது. அதாவது, கருணா அம்மான், சுமார் ஐயாயிரம் பேரைக் கொண்ட படையணிகளைக் கலைத்துவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்புவதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதே இத் தாக்குதலைப் பிரபா அணியினர் மேற்கொண்டனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கூடாக ஆயுதங்களுடன் முன்னேறி, கருணா தரப்பைக் கிழக்கில் அதாவது அவர்களின் சொந்த மண்ணில் தாக்குவதற்கு அரசும் படைகளும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் உதவியதாக சந்தேகம் அப்போது கிளப்பப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்குப் பின்னர், கருணா தரப்பினர் கொழும்பிலும் மட்டக்களப்பு - அம்பாறைப் பகுதிகளிலும் பொலநறுவையிலும் புலிகளால் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைத்தும் நீதிமன்ற வளாகத்திலும் பிரபா அணியினர் கருணா தரப்பினரைச் சுட்டுக் கொன்றனர். கருணாவின் சகோதரரான ரெஜி என்பவரும் புலிகளின் அதிரடித் தாக்குதலால் கொல்லப்பட்டார். ஆக, ஜனநாயக வழிக்குத் திரும்ப முனைந்த கருணா தரப்புப் புலிகளைப் பிரபா தரப்புப் புலிகள் தேடித் தேடிக் கொல்ல முனைந்ததால் தற்காப்புக்காக ஆயுதமேந்த வேண்டி வந்ததாகக் கருணா தரப்பினர் கூறுவதை நியாயமற்றதென்று நிராகரிக்க முடியாது.

'சண்டே லீடர்' என்ற ஆங்கில வாரப் பத்திரிகை கடந்த வருடம் மார்ச் மாதம் 22ஆம் திகதி கிழக்கில் தீவுச்சேனை என்ற காட்டுப் பகுதியில் கருணா தரப்பினர் முகாமிட்டிருப்பதாக கொட்டை எழுத்துக்களில் செய்தி வெளியிட்டதையடுத்து மறுதினமே அப் பகுதி பிரபா அணிப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. எனவே, கருணா தரப்பை துணைப் படையென்ற வட்டத்துக்குள் கொண்டு வரமுடியாது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கருணா தரப்புப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் பற்றி மட்டுமே புலிகள் பேச ஜெனீவாவுக்குச் சென்றார்களென்பதால் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத கருணா தரப்பின் ஆயுதங்களை பற்றிப் பேசுவதற்குப் புலிகளுக்கு அதிகாரமில்லை. பிரபாகரன் கூறியது போல் புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினையை அவர்களே தீர்க்க விட்டு விடுவது நல்லது. அல்லது கிழக்கில் அமைதி நிலவ வேண்டுமானால் ஒருவரையொருவர் தாக்கமாட்டோமென்று பிரபா தரப்பு - கருணா தரப்பு - அரச தரப்பு ஆகிய முத்தரப்பும் புதிய ஒப்பந்தமொன்றைச் செய்து, அப்பாவித் தமிழ் தமிழ் மக்களைப் பாதுகாக்க முன்வர வேண்டும். இதற்குப் பிரபா அணிப் புலிகள் முன்வருவார்களா?

புலிகளின் கருணா தரப்போடு சேர்த்து ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி), ஜிஹாத் என்ற முஸ்லிம் அமைப்பு ஆகியவற்றையும் அரசுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைகளாக க(ல்)லாநிதி பாலசிங்கம் ஜெனீவாவில் வர்ணித்துள்ளார். இவற்றில் ஜிஹாத் என்று கூறப்படும் அமைப்பைத் தவிர ஏனைய அனைத்தும் ஒரு காலத்தில் வடக்கு, கிழக்கில் தமிழீழம் கோரி, ஆயுதப் போராட்டம் நடத்தி வந்த அமைப்புகளாகும். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆயுதப் படைத் தளபதியாக விளங்கிய டக்ளஸ் தேவானந்தா, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஜனநாயக நீரோட்டத்துக்குத் திரும்பி, 1990களில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை ஆரம்பித்தார். இதில் ஜனநாயக நீரோட்டத்துக்குத் திரும்பிய முன்னாள் தமிழ் தீவிரவாத, இயக்கங்களின் அங்கத்தவர்களும் இணைந்து கொண்டனர்.

இராணுவத்தைப் போல் ஒழுங்கமைக்கப்பட்ட சட்ட விரோதக் குழுவே துணைப்படையென்று ஒக்ஸ்போர்ட் - அகராதியை மேற்கோள் காட்டிப் பேசுகிறார் பாலசிங்கம். இலங்கை இராணுவத்துக்கெதிராக ஆயுதமேந்திய தமிழீழக் குழுக்கள் அனைத்தையும் தாக்கியழித்தவர்கள் புலிகளே. வே.பாலகுமாரனின் ஈரோஸைத் தவிர, ஏனைய அனைத்து இயக்கங்களையும் சேர்ந்த பத்தாயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் புலிகளால் வேட்டையாடப்பட்டனர். பிரேமதாசாவோடு கள்ளக் கூட்டுச் சேர்ந்து கொண்டு, பிரேமதாசாவிடம் ஆயுதங்களும் நிதியும் பெற்றுக் கொண்டு இந்தியப் படைகளுக்கெதிராக இலங்கை அரச படைகளின் துணைப்படையாகச் செயற்பட்ட பாரம்பரியம் புலிகள் இயக்கத்துக்கே உண்டு. ஏனைய சகல தமிழீழ இயக்கங்களையும் ஜனநாயக வழிக்கு திரும்ப வைத்ததில் புலிகளுக்கும் பங்குண்டு. தமிழ் மக்களுக்கெதிரான பொருளாதாரத் தடையையும் இராணுவ அடாவடித் தனங்களையும் எதிர்த்து தமிழ் மக்களின் போராட்டத்துக்குச் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்த அமிர்தலிங்கத்தைக் கொன்றவர்கள் புலிகளே. சிங்கள ஆட்சியாளர்களின் துணைப்படையாகச் செயற்பட்டே அமிர்தலிங்கத்தைக் கொன்றொழித்தனர்.

துணைப் படைகளென்று புலிகளால் வர்ணிக்கப்படும் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி), புளொட் அணி ஆகிய அனைத்துமே வடக்கு கிழக்கில் ஜனநாயக ரீதியான அரசியல் இயக்கங்களாகச் செயற்படுகின்றன. வடக்கு - கிழக்கில் ஈ.பி.டி.பி. 25இற்கு மேற்பட்ட அரசியல் அலுவலகங்களை வைத்துள்ளது. இவற்றின் அலுவலகங்கள் அனைத்தும் பொலிஸ் பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதும் உண்மைதான். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் போக்குவரத்துச் செய்ய, அதிரடிப் படைப் பாதுகாப்புப் பெறுவது போல, இவை வெறுமனே பொலிஸ் பாதுகாப்பைத் தான் பெறுகின்றன. புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து, நான்கு வருட காலப் பகுதிக்குள் இந்த இயக்கங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்டோர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். வவுனியாவில் ஒரு மாதத்துக்குள் எட்டுப் புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். புலிகள், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்து எவருக்கும் அஞ்சாமல் அரசியல் போர்வையில் ஆயுத [illegible] செய்கிறார்கள். இதுதான் யதார்த்த நிலைமை.

புலிகள் தரப்பு ஜெனீவாவில் சமர்ப்பித்த பெயர் விவரப் பட்டியல் உண்மையானதுதான். ஆனால் ஒரேயொரு பொய்யை மட்டும் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, மேற்படி கட்சிகளின் அமைப்பாளர்களையும் அரசியல் பொறுப்பாளர்களையும் துணைப்படையினர் என்று வர்ணித்திருக்கிறார்கள்.

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் செயலாளரான கிருபன் துணைப்படைத் தலைவராகப் புலிகளால் வர்ணிக்கப்பட்டிருக்கிறார். இவர் மீது கடந்த வருடம் வாழைச்சேனையில் புலிகள் தாக்குதல் நடத்தினர். கொழும்பு, வெள்ளவத்தையில் அவரது வாகனமும் புலிகளால் குண்டு வைத்துத் தாக்கப்பட்டிருக்கிறது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். இத் தாக்குதல்கள் புலிகளால் தான் நடத்தப்பட்டன.

கடந்த டிசம்பர் முதல் இவ்வருடம் ஜனவரி வரையிலான ஆறுவார காலப் பகுதிக்குள் 117 அரசாங்கப் படையினரையும் அதற்கும் மேற்பட்ட மக்களையும் கொன்று குவித்தவர்கள் யார்? அரச படைகளோடு சேர்ந்து இயங்கும் துணைப் படைகளென்று புலிகளால் குற்றஞ்சாட்ட முடியுமா? "நாங்கள் கொல்லவில்லை. பொங்கு தமிழ் படையும் மக்கள் படையும் தான் கொன்றார்கள்" என்று புலிகளே கதையளந்தனர். அதாவது புலிகளின் துணைப்படைகளா இவை?

படையினரைப் படையினரோ அல்லது துணைப் படையினரோ கொன்றிருக்கமாட்டார்கள். க(ல்)லாநிதி பாலசிங்கம் ஜெனீவாவில் சமர்ப்பித்த பெயர்ப் பட்டியலில் உள்ளவர்கள் அனைவருமே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள். கிருபன் முல்லைத்தீவில் போட்டியிடுகிறார். ஈ.பி.டி.பி., புளொட், வரதர் அணி சார்பாகப் போட்டியிடும் முக்கியஸ்தர்கள் அனை வரையுமே துணைப் படையினரென்று புலிகள் கூறியிருக் கிறார்கள். இவர்களின் பெயர் விபரங்கள், போட்டியிடும் சபைகள் அனைத்துமே விலாவாரியாக வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருக்கின்றன. ஏதோ புலனாய்வு செய்து கண்டுபிடித்ததைப் போலக் கர்ஜித்திருக்கிறார் க(ல்)லாநிதி சிங்கம். வடக்கு - கிழக்கில் பல்வேறு பிரதேசங்களில் பொறுப்பாகச் செயற்படும் படை அதிகாரிகள் பெயர்கள் ஒன்றும் யாருக்கும் தெரியாததல்ல. சட்டரீதியாகப் போட்டியிடும் வேட்பாளர்களை சட்டவிரோத ஆயுதக்குழு அங்கத்தவர்களென்று புலிகள் கதையளந்திருந்தார்கள். அவ்வளவுதான்.

புலிகளால் குற்றஞ்சாட்டப்பட்ட சகல தமிழ் அரசியல் அமைப்புகளும் தமது கட்சி அலுவலகங்களில் பெயர்ப் பலகைகள் மாட்டியிருக்கின்றன. இவற்றின் புகைப்படங்களை பிடித்துவிட்டு, துணைப்படை அலுவலகங்களென்றும் ஜமாய்த்திருக்கிறார் அன்ரன் அண்ணாச்சி. கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குத் தான்.

ஊடக சுதந்திரம், ஊடக தர்மம் என்றெல்லாம் வாய் கிழியக் கத்தும் ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளிடம் ஒரேயொரு கேள்வி. துணைப் படைகளென்று அரசியல் கட்சி வேட்பாளர்களின் பெயர்களை சொல்வதைச் சொல்லும் பச்சைக் கிளிகளைப் போலப் புலிகளின் பச்சைப் பொய்களைப் பிரசுரித்தீர்களே. உங்களால் முடியுமா? வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப், வரதர் அணி, புளொட் ஆகியவற்றின் வேட்பாளர்களின் விபரங்களை வர்த்தமானியுடன் ஒப்பிட்டு உண்மைகளை வெளிக் கொணர. உங்களால் முடியாது. ஏனென்றால் நெற்றிப் பொட்டுகளுக்கு நேரே புலிகளின் துப்பாக்கிகள் என்றுமே தயாராக இருக்கின்றன. ஆங்கில ஊடகங்கள் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கின்றன.

■

---

# ஊரிலிருந்து....



மார்ச் 12ஆம் திகதி கச்சை தீவு புனித அந்தோனியார் கோயில் உற்சவத்தில் கலந்து கொள்ளும் பொன்னான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தொப்புள் கொடி உறவுள்ள இந்திய - இலங்கை பக்தர்கள் வருடத்திற்கு ஒரு முறை பக்தி பூர்வமாக கூடிக் களிக்கும் இடம். இம்முறை தடைகளையும் மீறி மூன்று 'அருட் தந்தையர்' உட்பட 108 இந்திய பக்தர்கள் கச்சை தீவில் காலடி வைத்தமை பகிரங்கப்படுத்தப்படாத ஓர் விடயம். ஓர் திருமண வீட்டில் நீண்ட காலத்தின் பின் சந்திக்கும் உறவினர்கள் அவர் வரவில்லையா? இவரெங்கே? என விசாரிப்பது போல ராமநாதபுரம், தனுஷ்கோடி, ராமேஸ்வரம், மன்னார், நெடுந்தீவு, யாழ்ப்பாண மக்கள் ஒருவரையொருவர் விசாரித்து ஆரத்தழுவிக் கொண்டது வியப்பா இருந்தது.

நல்லூர் கந்தசாமி கோயில், கதிர்காமம், சிவனொளிபாத மலை போல் உற்சவ காலத்தில் பிரகாசிக்க வேண்டிய திருத்தலம் சத்தமில்லாமல் மௌனமாக இருக்கிறது. அதிர்ஷ்டவசமாக அதன் அபிவிருத்தியின் முதலடியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்துள்ளார். எதிர்காலத்தில் தங்கு தடை இன்றி பக்தர்கள் செல்லமுடியுமா? இரு நாட்டு தொப்புள் கொடி உறவு வலுப்படுமா?

புனித அந்தோணியாரே கருணை காட்டும்!

# வட - கிழக்கும் - அபிவிருத்தியும்

அலசுவது **- மதியூகி -**

**யுத்தத்தினாலும்,** இயற்கை அழிவுகளினாலும் நாடு பாதிக்கப்பட்டிருந்தாலும் வடக்கு, கிழக்கில் அழிவுகளை இதுவரை சரியாக யாரும் மதிப்பீடு செய்ததாகவோ, அவை புனர்நிர்மாணத்தை நோக்கி நகர்த்தப்பட்டதாகவோ திருப்திகொள்ள முடியாது. கடந்த மூன்று தசாப்த கால யுத்தம் காரணமாகவும், மக்கள் இடம் பெயர்ந்ததன் காரணமாகவும் அபிவிருத்தி காணாமல் வடக்கு - கிழக்கு இருக்கிறது. எனினும் அரசாங்கமும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் விருப்பம் கொண்டு முன் வந்தபோதும் பாரியளவிலான அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முடியாமல் போயிற்று. இதற்குப் பிரதான காரணங்களாக அரசின் பிடியில் வடக்கு, கிழக்கின் சில பகுதிகள் இருப்பதும், பிடியில் இருக்கும் பகுதிகளிலும் அரச இயந்திரம் சீராக செயற்படுவதில் எதிர்நோக்கும் தடைகளையும் குறிப்பிடலாம். அதேபோல் புலிகளின் தடையும் அபிவிருத்திகளுக்கு விதிக்கும் தடையும் காரணமாக அமைகிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், அழிவுண்ட கட்டடங்களையும், காடு மண்டிப்போயிருக்கும் கட்டமைப்புகளையும் காட்டி, வெளிநாடுகளில் வாழும் எங்கள் உறவுகளிடம் பணம் அறவிடுவதும் புலிகளின் வேலையாக இருந்து வருகிறது. யாராவது கேட்டால், அது நமது அழிந்த தாயகத்தை மீளக்கட்டி எழுப்பத்தான் என்று கூறும் புலிகள், இது நாள் வரை பல கோடிக்கணக்கான ரூபாய்களை சேகரித்தார்களே தவிர, வடக்கு - கிழக்கில் எந்தவொரு மீள்கட்டுமானத்தையும் செய்யவில்லை. தங்களுக்கு உரிய நிர்வாகப் பணிகளுக்காகக் கட்டிக்கொள்ளும் கட்டடங்களை மக்களின் வேலைத்தளங்களாகவும் தேசியத்தின் கட்டுமானப் பணி என்றும் கூறிவருகின்றனர். குறிப்பாக சுனாமி தாக்கத்தின் பின்னர் வடக்கு - கிழக்கில் மீள்கட்டுமானப் பணிகளை தாங்களும் பங்குபோட்டுக் கொள்ள வேண்டும் என்று புலிகள் குழப்பியடித்ததால், இன்று வரை ஏற்பட்ட சேதங்கள், அழிவுகளின் வடுக்களாக இருக்கின்றன. நமது அடுத்த சந்ததிக்கு அழிந்துபோன வடக்கு, கிழக்கைக் காட்டி இதுதான் முன்னர் யுத்தம் நடந்த பூமி. இதுதான் யுத்தத்தின் போது அழிக்கப்பட்ட கட்டிடங்களும், வீடுகளும். இதுதான் பலி கொடுக்கப்பட்டவர்களின் சமாதிகள். இதுதான் சுனாமி அழித்த கரையோரப் பகுதி என்று காட்டி, கதை சொல்லத்தான் உதவப்போகிறது.

மீள் கட்டுமானம் செய்தால் நாங்கள்தான் கட்டுவோம்ரூ இல்லையென்றால், அழிந்தது அழிந்ததாகவே இருந்து விட்டுப் போகட்டும் என்று புலிகள், அரசுக்கும் - அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கும் இடையூறுகளை விளைவித்து வந்தாலும், அரசும் தொண்டு நிறுவனங்களும் தமக்குரிய கடமையை முடியுமான அளவில் செய்து வருவதை அவதானிக்க முடிகிறது. அதிலும் அரசின் மீள்கட்டுமானப் பணி திருப்தியான அளவில் இடம் பெறவில்லை என்றபோதும், அரசு கொண்டிருக்கும் திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள் என்பவையும் அரசிய் திட்டத்திற்கு நிதி வழங்கத் தயாராக இருக்கும் உதவி நிறுவனங்களின் ஒத்துழைப்பும் மிக அதிகமாகவே இருக்கின்றது.

அரசுடன் இணைந்து பணியாற்றும் வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள், புலிகளுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதில்லை. காரணம், புலிகள் இயக்கம் ஜனநாயகமயப்படுத்தப்படாததும், நிதி கையாடல்களில் ஏற்படக்கூடிய கபடத்தனங்களும் சமூக அமைப்புகளுடனும், மக்களுடனும் இணைந்து கலந்தாலோசித்து, அபிவிருத்தி தொடர்பான முடிவுகளை எடுக்காமல் புலிகள் தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதும், அரச, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் கண்காணிப்புக்கும், கேள்விக்கும் இடம் தராததும் போன்ற முக்கிய விடயங்கள் பிரதான குறைபாடுகளாக புலிகளிடம் காணப்படுகின்றன.

ஆனால், புலிகளுக்குப் பணம் பார்க்கக்கூடிய வேலைகளில் விருப்பம் இருக்கக் கூடும். வெறுமனவே விருப்பம் மட்டும் போதாது. மக்கள் பணிக்காக உண்மையாகவும், அர்ப்பணிப்போடும் பாடுபடுகின்ற கடினமான உழைப்பு அவசியமாகும். அதற்காக எந்தத் தரப்பிடமிருந்தும் மக்களுக்கான பணியில் நூற்றுக்கு நூறு வீதம் கடுமையான உழைப்பை எதிர்பார்க்க முடியாது என்பது யதார்த்தமாக இருந்தாலும், குறிப்பிடக் கூடியளவாவது இருப்பது அவசியமாகும். அது புலிகளிடம் இருக்கவில்லை என்பது தமக்கு ஏமாற்றமாக இருப்பதாகத் தெரிவித்துள்ள அரச சார்பற்ற வெளிநாட்டுத்தொண்டுநிறுவனங்கள் தமது விசனத்தையும் வெளியிட்டுள்ளன. இவ்வாறான காரணங்களைக் கூறிக்கொண்டோ அல்லது நியாயம் கற்பித்துக் கொண்டோ அழிந்த தேசத்தைக் கட்டி எழுப்புவதையோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கான மீள் வாழ்வளிப்பையோ, புனர் நிர்மாணங்களையோ தள்ளிப்போட முடியாது என்பதை ஒவ்வொரு தரப்பும் இனியேனும் சிந்திக்க வேண்டும்.

### யாழ்ப்பாண மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **உற்பத்தி பிரிவு** | **7** | **10.88** | **10.88** |
| விவசாயம், கால்நடைவளர்ப்பு | 2 | 3.88 | 3.88 |
| கைத்தொழில், வர்த்தகம் | 5 | 7.00 | 7.00 |
| **பொருளாதாரம் உட்கட்டமைப்பு வசதிகள்** | **4** | **18.83** | **18.83** |
| பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் | 4 | 18.83 | 18.83 |
| **சமூக உட்கட்டமைப்பு வசதிகள்** | **10** | **41.11** | **41.11** |
| கல்வி | 8 | 22.21 | 22.21 |
| சுகாதாரம் | 2 | 18.90 | 18.90 |
| **சமுதாயம், அபிவிருத்தி, கலாசார விளையாட்டு மற்றும் சமூக நலன்புரி** | **6** | **15.73** | **15.73** |
| கலாசார மற்றும் சமய அலுவல்கள் | 2 | 9.00 | 9.00 |
| ஏனைய சமுதாய நலன்புரி வசதிகள் | 4 | 6.73 | 6.73 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | **5** | 18.46 | 18.46 |
| அலுவலக கட்டிடங்கள் மற்றம் அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல் மறுசீரமைப்பு | 3 | 16.96 | 16.96 |
| ஏனையவை | 2 | 1.50 | 1.50 |
| மொத்தம் | 32 | 105.00 | 105.00 |

### முல்லைத்தீவு மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **உற்பத்தி பிரிவு** | 3 | 13.00 | 13.00 |
| கைத்தொழில், வர்த்தகம் | 3 | 13.00 | 13.00 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | 2 | 7.00 | 7.00 |
| அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல் மறுசீரமைப்பு மற்றும் அலுவலக விடுதிகள் | 2 | 7.00 | 7.00 |
| முழு மொத்தம் | 5 | 20.00 | 20.00 |

### அம்பாறை மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **சனத் தொகையை மீளக் குடியமர்த்துவதற்காக பூர்வாங்க வசதிகளை ஏற்படுத்தல்** | **3.3** | **35.28** | **27.29** |
| அணுகுபாதை | 27 | 33.16 | 26.42 |
| நீர் வழங்கல், சுத்தகரிப்பு | 6 | 2.12 | 0.97 |
| **உற்பத்தி பிரிவு** | **6** | **19.24** | **9.62** |
| நீர்ப்பாசனம் | 6 | 19.24 | 9.62 |
| **பொருளாதாரம் உட்கட்டமைப்பு வசதிகள்** | **8** | **2.24** | **2.24** |
| மின்வலுச்சக்தி | 8 | 2.24 | 2.24 |
| **சமூக உட்கட்டமைப்பு வசதிகள்** | **4** | **2.80** | **1.25** |
| கல்வி | 4 | 2.80 | 1.25 |
| **சமுதாயம், அபிவிருத்தி, கலாசார விளையாட்டு மற்றும் சமூக நலன்புரி** | **5** | **2.39** | **1.39** |
| கலாசார மற்றும் சமய அலுவல்கள் | 4 | 1.89 | 1.14 |
| பிற சமூக நலன்புரி வசதிகள் | 1 | 0.50 | 0.25 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | 1 | 10.00 | 10.00 |
| அலுவலக கட்டிடங்கள் மற்றம் அலுவலக விடுதியை நிர்மாணித்தல் மறுசீரமைப்பு | 1 | 10.00 | 10.00 |
| மொத்தம் | 57 | 71.95 | 51.89 |

### மன்னார் மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளை வழங்கல்** | 4 | **1.52** | **1.52** |
| அணுகு பாதை | 4 | 1.52 | 1.52 |
| **உற்பத்தி பிரிவு** | 1 | **2.00** | **2.00** |
| கைத்தொழில், வர்த்தகம் | 1 | 2.00 | 2.00 |
| **சமுதாயம் உட்கட்டமைப்பு வசதிகள்** | **5** | **5.91** | **5.91** |
| கல்வி | | | |
| **சமுதாயம், அபிவிருத்தி, கலாசார விளையாட்டு மற்றும் சமூக நலன்புரி** | 10 | **4.57** | **4.57** |
| ஏனைய நலன்புரி வசதிகள் | 10 | 4.57 | 4.57 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | 1 | 1.00 | 1.00 |
| அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல் மறுசீரமைப்பு மற்றும் அலுவலக விடுதிகள் | 1 | 1.00 | 1.00 |
| முழு மொத்தம் | 21 | 15.00 | 15.00 |

(தொடர்ச்சி 22 இல் பார்க்க....)

## அதிரடி அய்யாத்துரை



**கூல் கூல்** எண்டொரு விரிவான உரையாளர் யாழ்ப்பாண சர்வகலா சாலைக்கு அதிகாரமானவராலை நியமிக் கப்பட்டதுக்கு ரெண்டெழுத்தார் கடுமை யான தடையை விதிக்கப் பாக்கினம். மாணவர்கள் விரும்பமாட்டினம். அவர் வந்தால் நடக்கக் கூடாததெல்லாம் நடக்கும். அப்புடி நடக்கிறதை அதிகார மானவர் கூடத் தடுக்க முடியாமல் போகும் எண்டு இழவு வேந்தனாரும் தன்ர ஜால்ராவை சுருதி கூட்டி வாசிச்சி ருக்கார். என்னடாப்பா கூல் எண்டவரின்ர விவகாரம் உப்பிடி ஹொட்டா அடிபடுகுதே எண்டு துருவிப் பார்த்தால் 'முறிந்த பனை' எண்டொரு புத்தகம் எழுதி யூ.டி.எச்.ஆர் எண்ட அமைப்பு வெளியிட்டதும், அதின்ர படைப்பாளிகளில ஒருவரான ரஜினி திரணகம ரெண்டெழுத்தாராலை சுடப்பட்டதும் தெரியுமெண்டு நினைக்கிறன். ஏன் எண்டால் மனித உரிமை, சமூக உரிமை மீறல்கள் தொடர்பான விசயங்களை எழுதிறம் எண்டிட்டு, ரெண்டெழுத்தார் புரிஞ்ச உந்த ரெண்டு மீறல்களையும் அந்தப் புத்தகத்தில எழுதினதாலதான் அவா சுடுபட்டவா. அவவோடை அந்தப் புத்தகத்தை எழுதினதில உந்த கூலின்ர தமையன் கலாநிதி ராஜன் கூலும் பெரும் பங்காற்றினார். அதுமட்டுமில்லாம, அந்தப் புத்தகத்தை அப்போது அமெரிக்காவில ஹாவாட் சர்வகலாசாலையில விரிவுரையாளராக இருந்த உந்த கூல் தான் பிரிண்ட்போட்டு தமையனுக்கும் மனித உரிமை வாதிகளுக்கும் அனுப்பினவராம்.

அப்புடியானவரை திரும்பவும் விரிவுரையாளரா யாழ்ப்பாணத்துக்கு எடுத்தால் மாணவர்களைப் போராட்டத்தின்ர பேராலை வீதிக்கு இறக்கிறதிலையும், மனித உரிமை மீறல்கள் தொடர்பான தங்கட வண்ட வாளங்களை மனிசன் கிண்டி அச்சேத்திப்போடுவார் எண்ட தாலையும் தானாமுங்கோ உந்த எதிர்ப்புக் காட்டினமாம். சோழியன் குடும்பி சும்மா ஆடாதெண்டுவினம். அது சரிதானுங்கோ.

**வீணைக்** கட்சியின்ர தலைவர் தேவமானவர் எங்க போறார் என்ன செய்யிறார் எண்டது அவரோடை கூட இருக்கிறவைக்கே தெரியாது. ஆனால் கரைக்கட்டா போக வேண்டிய இடத்துக்கு, போக வேண்டிய நேரத்துக்குப் போயிடுறாருங்கோ. உவரின்ர உந்த அதிரடியான விசிட்டுகளைக் கேள்விப்படுகிற ரெண்டெழுத்தார் முடியைப் பிச்சுக் கொள்ளினமாம். நொமினேஸனை தாக்கல் செய்யிறதுக்கு பத்து மணிக்கு முதலில யாழ்ப்பாணத்துக்கும், வவுனியாவுக்கும் ஹெலியில பறந்து பறந்து போய் குறிப்பிட்ட நேரத்துக்குள்ள தாக்கல் செய்து பரபரப்பு ஏற்படுத்தினவர். போன வாரம் பன்னிரெண்டாம் திகதி கச்சதீவு அந்தோனியார் உற்சவத்துக்கு திடீரெண்டு போயிருக்காருங்கோ.

உங்கே போய் தேவாலயத்துக்கும் வாற பக்தர்களுக்கும் என்ன குறைபாடுகள் இருக்கெண்டதைக் கேட்டுத் தெரிஞ்சுகொண்டு அதுகளை நிவர்த்திக்க ஏற்பாடும் செய்தவராம். அவர் அங்கே போறதுக்கு ஹெலி ஒழுங்கு செய்யப்பட்டதாம். ஹெலியில போனால் தியானத்தில இருக்கிற பக்தர்களின்ர கவனம் சிதறிப் போயிடும் எண்டதாலை தானும் சாதாரண சனம் போறமாதிரி படகில தான் போவன் எண்டிட்டுப் போனவராம். குடிதண்ணியில்லாத தீவில தண்ணியும், மலசலகூட வசதியும் செய்து தந்த அமைச்சரே நேரடியாவும் வந்ததாலை பக்தர்களுக்கு இரட்டிப்பு தரிசனமாம் எண்டு சனம் சந்தோசத்தில சொல்லினமுங்கோ.

**பிச்சைக்காரனுக்குப்** பேர் கோடீஸ்வரன் எண்ட மாதிரி உதயமான பெயரோடை யாழ்ப்பாணத்தில செய்தி எழுதிறவை, சனத்துக்கு இருளுக்குள்ளதான் வழி காட்டினமாம். ரெண்டெழுத்தார் சொல்லுறபடியே செய்தி போடுறதுதான் தங்கட ஒரே கொள்கை எண்டால் அதை மாத்திக்கொள்ள ஏலாதுதான். அதுக்காக மற்றவை எல்லாம் சும்மா எண்ட கணக்கில கண்ணை மூடிக்கொண்டு செய்தி எழுதினம் எண்டு வாத்தியார் சொல்லுறாருங்கோ. நெடுந்தீவுல வீணைக் கட்சிக்காரர் கருவியளோடை நிக்கினம். அதாலை சனம் பீதியடைஞ் சிருக்கினம் எண்டு செய்தி போட்டிருக்கினம். பிறகு கண் காணிக்கிறவை போய் விசாரிச்சதில அப்புடியொண்டுமில்லை. உந்த செய்தி பொய் எண்டிச்சினம். அதில மூக்குடைபட்டும் உதயமான செய்திக்காரர் திருந்தின மாதிரியில்லையாமுங்கோ. கச்சைதீவுக்குப் போகேக்கையும் வீணைக் கட்சிக்காரர் கருவி வச்சிருந்தவை எண்டு கதை விட்டிருக்கினமாம் எண்டு வாத்தியார் சொல்லுறதைப் பாத்தால், குடா நாட்டில ஏக போகமா செய்தி எழுதிறமெண்டதுக்காக இருக்கிறதை இல்லையெண்டும், இல்லாததை இருக்கெண்டும் தங்கட இஷ்டத்துக்கு எழுதி பத்திரிகா தர்மத்துக்கு மேல பிச்சைக்காரன் சத்தி எடுத்த மாதிரி செய்யினமாக்கும். ஒருவேளை வாந்தி எடுத்து வாயிக்க போடுறவைக்கு இவை தான் அரிச்சந்திரன்மார் எண்டு நினைப்பாக்கும். வாழ்க பத்திரிகா தர்மம்...

**சுட்டுப்** போட்டாலும் பச்சைக்கும் - சிவப்புக்கும் ஒட்டாது. அதுக்காக சிவப்பு நீலத்தோடையும் நல்ல உறவோடை இருக்கிற மாதிரியும் தெரியல்லையே. தேர்தல் காலமெண்டால் ஏதாவது கையில அகப்படுகிற ஒரு பிரச்சினையைத் தூக்கிக் கொண்டு திரியினம். எல்லாம் சரி வந்து முன்னாள் அதிகார அம்மணியையும் அப்புறப்படுத்தினாப் பிறகு சிவப்புச் சட்டைக்காரர் என்ன சொல்லிக்கொண்டு திரியப்போகினம் எண்டு யோசிச்சு முடிக்க முன்னம், நோர்வேக்காரரை பீஸ் டோக்கில இருந்து அவுட் பண்ணுங்கோ எண்டு மல்லுக்கட்டினம். அதிகாரமானவர் நோர்வேயை கிளீன் போல்ட் பண்ண முடிஞ்சாலும் தேர்ட் அம்பயர்மார் கிராபிக்ஸில நொட் அவுட் ஆக்கிப் போடுவினம். அது மட்டுமே, தவறான அவுட் செய்கை எண்டு சலுகைகளையும் தடுத்து தடா பண்ணுவினம். உந்த நிலைமையில ராஜதந்திரமாத்தான் கையாள வேணும். நோர்வே எங்கட நாட்டுப் பிரச்சினையில ஆளுக்கொரு வர்ணம் பூசித்தான் முகத்தைக் காட்டுதெண்டது உண்மைதான். அதுக்காக அதைக் கையாளுற விதத்தை ஒற்றுமையாகவும், பொறுமையாகவும் செய்யிறதை விட்டுப் போட்டு அதிகாரமானவரிட்டை அவையை அவுட் பண்ணுங்கோ. இல்லாட்டில் சப்போர்ட்டை வாபஸ் வாங்கப் போறம் எண்டு டிமாண்ட் பண்ணினால் என்ன நடக்கப் போகுது. ஒண்டும் நடக்காதெண்டால் இது சும்மா. பொலிரிக்ஸ் ஸ்டண்ட் அதுவும் நடக்கப் போற எலக்ஷன் ஸ்டண்ட் எண்டு தானே சனம் யோசிக்கும் எண்டு சொல்லினமுங்கோ.

**மரக்** கட்சிக்காரரும், மண்வெட்டிச் சின்னக்காரரும், சேவல் சின்னக்காரரும் அதிகாரத் தரப்போடை சேரப்போகினம். அதுக்காக அமைச்சுப் பொறுப்புகளையும் ஏற்கப் போகினமெண்டு போன வாரம் கண்டபடி செய்திகள் அடிபட்டுது. என்ன ஏதெண்டு கேட்டால் மரக்கட்சிக்காரர் தனித்தரப்பு விஷயத்துக்குத்தான் ஒத்துழைக்கப்போறன். மற்றபடிக்கு அமைச்சுக்களெல்லாம் ஒண்டுமில்லை எண்டு மறுத்துப் போட்டிச்சினம். சரி நாளைக்கு நடக்கிறது நாளைக்கெண்டிட்டு மற்ற ரெண்டு பேரை நாடி பிடிச்சுப் பார்த்தால் அவையின்ர நாடித் துடிப்பு கொஞ்சம் வேகமாகவே அடிக்குதுங்கோ. "எலக்ஷனுக்காகத்தான் கூட்டு சேர்ந்த நாங்கள் மற்றபடிக்கு" எண்டு அவை சுவிங்கியமாட்டம் இழுக்கிறதைப் பாத்தால் அமைச்சுப் பொறுப்பு மேலை மூக்கு வேர்க்குது போலத்தான் இருக்கினம். சூடு கண்ட பூனை அடுப்படி நாடாதெண்டு சொல்லுவினம். ஆனால் இவை ருசி கண்ட பூனைகளுங்கோ. நாக்கு ஊறுறதிலையோ, மூக்கு வேர்க்கிறதிலையோ ஆச்சரியப்பட ஒண்டுமில்லையுங்கோ. அதிலையும் ஒருவருக்கு சொகுசு மச்சமுங்கோ. தோத்தாலும் வசதி; வெண்டாலும் வசதி எண்டு தண்ட வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கிறார். அவரின்ர வீட்டுக் கூரையில இரவு பகலெல்லாம் சேவல் கூவிக் கொண்டுதானுங்கோ இருக்குதாம். ஏதோ திருத் தங்களில இருந்து தவறுகளுக்குப் போகாமல், தவறுகளில இருந்து திருத்தங்களுக்கு வந்திச்சினமெண்டால் எல்லாருக்கும் நல்லதுங்கோ.

**மூதூரில** ரெண்டெழுத்தார் முதன் முறையா பொதுமக்கள் போக்குவரத்தை ஆரம்பிச்சிருக்கினமாமே, என்ன சங்கதி எண்டு குருவியாரிட்டை வாய் உளறிக் கேட்டுப் போட்டேனுங்கோ. என்ன கடுப்பில இருந்தாரோ குருவியார் தெரியல்லை. போக்குவரத்தோ, கவர்மெண்டின்ர ஜெனரேட்டர்களையும் ரான்ஸ் பம்மர்களையும் கடத்திக் கொண்டு போய் மின்சார வாரியம் நடத்திற மாதிரித்தான். கவர்மெண்டின்ர பஸ்ஸிகளைக் கடத்திக்கொண்டு போய் சுரண்டிக்கொட்டி பெயின்ட் அடிசுப்போட்டு பொதுப் போக்குவரத்து நடத்துகினம். உப்பிடி நடத்திறதெண்டால் ஊரில இருக்கிற எல்லாத் தெருச்சண்டியனும் கூட போக்குவரத்தும், கெப் சேவிசும் நடத்தலாமே...என்ன அவைக்கு வசதியாப் போட்டுதெண்டால்... காடெல்லாம் அவையின்ர தேசமெண்டதால அவைக்கு வாய்ப்பாப் போச்சுது. அது சரி, நான் தெரியாமத்தான் கேக்கிறன். தலைநகருக்கும், யாழ்ப்பாணத்துக்கும் போக்குவரத்து செய்யிற பல சொகுசு பஸ்கள் யாருடைவையாம் ஒரு சில சார சப்பட்டை பஸ்ஸுகள் வேணுமெண்டால் சாதரண சனத்தின்ரையா இருக்கலாம். அப்புடிப் பாத்தால் மூதூரிலில துவங்கினது அவையின்ர இரண்டாவது சேவையெல்லோ எண்டு கடுப்புக்குறையாமலே குருவியார் திருப்பிக் கேக்குறாருங்கோ. யார் கண்டது குருவி சொல்லிறதிலையும் உண்மை இருக்கும் போலத்தான் தெரியுது. ஓமோ...இல்லையோ...




# தென்றலின் ராகதீபம்

**என்னதான்** தனியார் வானொலிகள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு காட்டுக் கத்தல் கத்தினாலும் தென்றல் என்றுமே வானொலியுலகின் முடிசூடா மன்னனாகத்தான் திகழ்ந்து கொண்டிருக்கிறது இற்றைவரை! இதற்குத் தென்றல் வழங்கி வரும் நிகழ்ச்சிகளே ருசுவாகின்றன.

அதிலொன்றுதான் ஒவ்வொரு நாளும் இரவு 10.00 மணியிலிருந்து 11.00 மணி வரை தென்றல் தரும் ராகதீபம் என்னும் இதயத்தை வருடும் நிகழ்ச்சி.

பகல் பூராய் உழைத்துக் களைத்த இதயங்கள் உறங்கப் போகும் இவ்வேளையில் இதமாய்த் தாலாட்டி மயிலிறகால் வருடுகிறது ராகதீபம்.

அவ்வேளைகளில் வரும் அத்தனை அறிவிப்பாளர்களும் நிகழ்ச்சியைக் கடித்துக் குதறாமல், தமிழை வலுக்கட்டாயமாக உச்சரிக்காது, தமிழைக் கொலை செய்யாது, காலில் இறக்கை பூட்டாமல் மிகவும் பொறுமையாய் நிகழ்ச்சியை வழங்கும் விதம் மிக மிக அருமையாயுள்ளது.

பாடல்களைத் தெரிவு செய்யும் விதமும் அருமை. அத்தோடு அழைப்பை ஏற்படுத்துவர் மட்டுமே பாடலைக் கேட்க முடியுமென தென்றலின் விதியும் சூப்பர்!

ஒரே ஒரு குறை - ஒரு மணித்தியாலமென்பது மிகவும் குறுகிய நேரமாகவுள்ளதால் ஒன்றரை மணித்தியாலமாக்கி அதாவது, 10.30 - 12.00 வரைத் இரவின் மடியில் நிகழ்ச்சியை ஒலிபரப்பலாம். ஒரு மணியென்பது இதயத்துக்கு ஆசைகாட்டி மோசம் செய்வதாயுள்ளது. உரியவர்கள் ஏற்பரோ இவ்வேண்டுகோளை!

*–கலைமணி ஜாஹித், தாராபுரம்.*

## வாசகர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

# ஆனந்த இரவு

**சக்தி** எப்.எம் வானொலியில் சனிக்கிழமை இரவு வேளையில் ஒலிபரப்பாகும் ஆனந்த இரவு நிகழ்ச்சியான்து வேடிக்கையானதும், சுவாரஸ்யமுமான நிகழ்ச்சியாகும். கணாதீபனும் சுப்புக்குட்டியும் நிகழ்ச்சியை நடத்தும் விதமும் உரையாற்றும் பாணியும் சிறப்பாக உள்ளது. சிரிக்க மறுப்பவர்களையும் சிரிக்க வைப்பது இந்நிகழ்ச்சியின் தனித்துவம் எனலாம். எனினும் சில விடயங்களில் கேட்போர் முகத்தைச் சுளிக்க வைக்கும் விதமாகவும் இந்நிகழ்ச்சி அமைகிறது. உதாரணமாக சில நேரங்களில் குடும்பங்களின் அந்தரங்க விடயங்களை இரட்டை அர்த்தத்தில் பேசுவதும், தனிப்பட்ட சில விடயங்களை அநாகரீகமாகக் குத்திக்காட்டுவது போன்ற விடயங்களை தவிர்த்து நகைச்சுவை என்ற விடயத்தை அளவுகடந்த கேலிக்கூத்தாக மாறும் வகையில் நின்று கொள்ளாமல் நிகழ்ச்சி தயாரிப்பாளரும் அறிவிப்பாளரும் நடந்து கொள்வது அவசியமாகும். ஏனெனில் தரமான ஒரு நிகழ்ச்சியில் இத்தகைய ஒரு சில குறைபாடுகள் நிகழ்ச்சியின் தரத்தையும், மதிப்பையும் இழங்கச் செய்து விடும் என்பது எனது அபிப்பிராயம்

*–எஸ்.சங்கர், வவுனியா.*

# சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்

# தென்றலின் இம்சை....ஷை

**அண்மைக்கால** தென்றலிலே ஓர் அம்மணியின் ஆர்ப்பாட்டமான இம்சையை சகிக்க முடியாதுள்ளது. தென்றல் நிர்வாகத்தினர் தூங்கிக் கொண்டிருப்பதால் அம்மணியின் இம்சை விஸ்வரூபமெடுத்துள்ளது. ஒலியிலிருந்து ஒளிவரையும் இம்சை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஒலிவாங்கியை கையில் எடுப்பவர்கள் எல்லோரும் தரமான அறிவிப்பாளர்களாகி விடமுடியாது. வானலைகளில் அர்த்தமிழந்த வெற்று வார்த்தைகளை சரமழையாய் கொட்டுவதால் என்ன பிரயோசனம்? பேசப்படும் வார்த்தைகள் அற்ப சொற்பமாய் இருந்தாலும் அர்த்தமுள்ள வார்த்தைகள் என்றால் அதன் மவுசே வேறு.

தரமற்ற கரகரப்பாக ரசனையற்ற குரல்வளமுடைய இந்த அம்மணி தொடர்ச்சியாக வார்த்தைகளை வானலைகளில் அள்ளிக் கொட்டும் போது நேயர்களின் பொறுமைக்கும் சோதனை வந்துவிடுகிறது.

பயிற்சி பட்டறையில் முறையாய் பயிற்சி எடுத்திருந்தால் தன் குரல்வளத்தை தானே மதிப்பீடு செய்து தன் அறிவிப்பு முறையை மாற்றி அமைத்திருப்பார்.

கடந்த காலத்திலும் ஓர் அம்மணி சொல் வேக வீச்சாளராய் தென்றலில் களமிறங்கினாலும் நிர்வாகத்தினர் கடிவாளமிட்டதனால், பின்னர் தரமான அறிவிப்பாளராய் வலம் வந்து தற்போது பிரான்ஸில் குடியமர்ந்துள்ளார்.

அறிவிப்புத் துறையில் பெண்களுக்கு முன்னோடியாய் ஜெயலஷ்மி சந்திரசேகர், விசாலாட்சி ஹமீட், இராஜேஸ்வரி சண்முகம் போன்றோர் இன்னமும் உள்ளனர். இவர்கள் வானொலியினதும், வானலைகளினதும் பண்புகள் அறிந்ததால் தான் நிதானமாயும், அமைதியாகவும், ஆழமான வார்த்தைகளை பிரயோகித்து அறிவிப்பு செய்வது இன்னமும் நேயர்களின் இதயங்களில் நிறைந்துள்ளனர்.

26.02.2006 இசைத் தென்றலில் பாடல் வரிகளுக்காய் சக அறிவிப்பாளரின் காலை வாரிவிட எத்தனித்தார். இறுதியில் அவர் தன் மூக்குடைபட்டார். தன் முகத்திலே தானே சகதியை வாரியிறைப்பது தெரியாமல் இம்சை பண்ணும் இந்த அம்மணி இனியாவது திருந்தாரா? இவர் வழி வந்த பப்பவோ ரோஜாவும் இனி உஷாராகி விடுவார் என நினைக்கின்றேன்.

*–திரு.சு.நவரட்ணராஜா.*

# "தமிழ் கொல்லும் வைரஸ்" தென்றலிலா?

**தென்றலில்** "பரஸ்பரம்" ஆரம்பமாகி ஓராண்டு முடிவடைந்து விட்டது. ஆனால், இன்னமும் "பொன்னூஞ்சல்" நிகழ்ச்சிக்கு விமோசனம் கிடைக்கவில்லை. நேரத்தை வரையறுத்து குறிப்பிட்ட நேரத்திற்குள் இந்த நிகழ்ச்சியை ஒலிக்க விடுமாறு ஆயிரக் கணக்கான நேயர்கள் பரஸ்பரம் மூலமாய்க் கேட்டுள்ளனர். ஆனால், பணிப்பாளரோ தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற மாதிரி அழுங்குப் பிடியாய் ஒரே பதிலை பரஸ்பரத்தில் தருவது மனதிற்கு கஷ்டமாகவுள்ளது.

மணித்தியாலத்திற்கு ஒரு தடவை ஒலிக்க விடுவதற்கு இதுவென்ன தென்றலின் டூயட்டா? அன்றேல் தங்கப் புதையலா? நேயர்களின் பிரதிகளை பிய்த்து பிய்த்து தருவதில் இவருக்கென்ன இன்பம்? தென்றல் இவர் வீட்டுச் சொத்தா? அன்றேல், இவர் தான் தென்றலின் ஹிட்லரா?

இதை விடத் தென்றலில் "தமிழ் கொல்லும் வைரஸ்" என்ற நோய் தீவிரமாய்ப் பரவி வருகிறது பணிப்பாளர் தொடக்கம் பல அறிவிப்பாளர்கள் வரை இதன் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். தென்றலை இந்த வைரஸ் முற்று முழுதாய் ஆக்கிரமிப்பதற்கு முன்னர் உரியவர்கள் இதனை இனங்கண்டு சிகிச்சை அளிக்கவும்.

சனி "என் விருப்பம்" நிகழ்ச்சி கடந்த காலத்திலே இருந்த தரம் தற்போதில்லை அறிவிப்பாளர்களை அதிதியாய் அமைத்துவந்து என் விருப்பத்தை சிறப்பாய் தொகுத்தளித்த காலம் தென்றலின் பொற்காலம். இந்நிகழ்ச்சிக்கு ஏறுமுகமாய் இருந்தவரை தற்போது இறங்கு முகமாய் உள்ளார். விளம்பரதாரரும் இதனை கண்டு கொண்ட மாதிரி தெரியலை.

என் விருப்பத்திலே முத்திரை பதித்தவர், மற்றும் ஜபீர் போன்றோரின் கரங்களில் இந்நிகழ்ச்சி செல்லுமாயின் இதன் தரமே வேறு.

*–வவுனியா, பொம்மி.*

# தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் D.D. Enterprises என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் "Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- (E-mail):- murasu@sltnet.lk

# மலையக நாடோடிப் பாடல்கள்


ஒவ்வொரு முறையும் மலையக நாடோடிப் பாடல்களை தந்துவரும் நாம் இம்முறையும் பிரமிளா செல்வராஜா எழுதிய இந்த மலையக நாடோடிப் பாடல்களை உங்களுக்காகத் தருகிறோம்.

மேலாதிக்க சக்திகளின் காம இச்சைக்கு இணங்காத பெண்களை கொழுந்து நிறைகுறைப்பு, வேலைநேரகுறைப்பு, நாட்குறைப்பு, குடும்பத்தலைவனுக்கு வேலை நிறுத்தம் போன்ற வழிகளில் பழிவாங்கும் மேலதிகாரிகள் பற்றியும் பாடுகின்றார்கள்.

கல்லாறு தோட்டத்திலே
கண்டாக்கு பொல்லாதவன்
மொட்ட புடுங்குதுன்னு
முணாள வெரட்டிப்புட்டான்

ஓடி நெர புடிச்சி
ஒரு கூடே கொழுந்தெடுக்க
பாவி கணக்கப்புள்ள
பத்து ராத்த போடுறானே.

பொழுதும் எறங்கிருச்சி
பூமரமும் சாஞ்சிரிச்சி
இன்னமும் இரங்கலையோ
எசமானே உங்க மனம்
அவசரமா நான் போறேன்
அரப்பேரு போடாதீங்க.


நவசித்தர் மாந்தீரீகம்

ஓம் குருவே நம: கர்ம வினைகளினால் தீய சக்திகளால் ஏற்பட்ட தீராத துன்ப துயரங்கள், வீட்டில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டு பிரயாணத் தடை, காதல் பிரச்சினை, காதலர்கள் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்ய, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிரச்சினைகள் தீர வேண்டாதவரை பிரிக்க, கிரக தோஷ நிவர்த்தி செய்து வீட்டில் லட்சுமிகரம் ஏற்பட, வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு கடல் கடந்து பலன் அளிக்கக் கூடியவாறு விசேடமாக செய்து கொடுக்கப்படும். இன்னும் அநேக காரியங்களுக்கு மட்டக்களப்பு பரம்பரை மஹா சக்தி உபாசகர் சித்த ஆயுள்வேத மாந்திரீக விஷ மருத்துவர்.

Dr.T.Murukuppillai (S.A.M.P), Main Street, Pandiruppu - 01. Kalmunai. (Sri Lanka) Tel: 067 - 2224077, வெளிநாடு: 0094672224077







மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com

இன்னொருவர் பார்வையில்

**'இலங்கையில் சமாதானம் எதிர்கொள்ளும் தடைகள்' என்ற தலைப்பில் அரசியல் ஆய்வாளர் ரோஹிணி ஹென்ஸ்மன் எழுதி 'த ஐலண்ட்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சுருக்கம் இங்கே தமிழில் தரப்படுகிறது.**

# சமாதானப் பாதை எதிர்கொள்ளும் தடைகள்

**இலங்கை** அரசுக்கும் புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் 2006 பெப்ரவரியில் நடைபெற்ற சமாதானப் பேச்சுகள், மரணதண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்குக் கடைசி நிமிடத்தில் தண்டனை ஒத்திவைக்கப்பட்டதைப் போன்ற ஒன்றெனச் சிலர் கருதுகின்றனர். இதற்கு முந்திய இரண்டு மாதங்களிலும் இடம்பெற்ற பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தில் பலர் பாதிக்கப்பட்டனர். இவர்களைப் பொறுத்த வரை உண்மையிலேயே இது மிகத் தரமறிந்து வழங்கப் பட்ட ஒத்திவைப்பாகும். எனினும் முற்றுமுழுதான யுத்தம் தவிர்க்கப்பட்டமைக்காக நாம் நன்றி கூறக் கடமைப்பட் டுள்ளோம். இதற்கு முன்னரும் இவ்வாறான நிலைமைகள் எழுந்துள்ளன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவையும் இவ்வாறு நிம்மதிப் பெருமூச்சு விடும் சந்தர்ப்பம் ஏற்படும்போது, நீடித்து நிற்கக்கூடிய சமாதானம் தொடருமென்ற நம்பிக்கை ஏற்படு கிறது. ஆனால், ஒவ்வொரு தடவையும் இச் சந்தர்ப்பம் நழுவ விடப்படுகிறது. ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் இதே மாதிரியான நிலைமை ஏற்படுமென்றால், சமாதானத்துக்கான தடை களை இனங்கண்டு, ஒவ்வொன்றாக அவற்றை நீக்க வேண்டியது அத்தியாவசியமாகும். பிரபாகரனும் அவரது ஆதரவாளர்களும் தனித்து விடப்படும்வரை தடைகளை இனங்கண்டு அகற்ற வேண்டும். இவை அப்புறப்படுத் தப்படுவதற்கு முடியாத கடினமான தடைகளென்பதையே இன்று வரையிலான எமது அனுபவங்களனைத்தும் எடுத்துக் காட்டுகின்றன. தடைகள் அகற்றப்பட்டால் பிரபாகரனும் அவரது ஆதரவாளர்களும் சமாதானப் பாதையில் இணைந்து கொள்ள வேண்டும். அல்லது விலகிச் செல்ல வேண்டும்.

### யதார்த்தத்தை மறுதலித்தல்

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டு மென்றால் அரசாங்கப் பேச்சுவார்த்தையாளர்கள், தன்னார் வத் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் சமாதானத்துக்காகப் பிரசாரம் செய்யும் தாராளவாதிகளும் கண்களை அகலத் திறந்து நிலைமைகளைப் பார்க்க வேண்டும். அதாவது கீழ்வரும் யதார்த்த நிலைமைகளை அங்கீகரித்துத்தானாக வேண்டும்.

அ) வடக்கு, கிழக்கின் சில பகுதிகளில் ஏற்கனவே தனிநாடு இயங்கி வருகிறது. இதனை யுத்த நிறுத்த ஒப் பந்தமும் குறிப்பிடுகிறது. நன்கு ஒழுங்கு செய்யப்பட்ட இராணுவம், அடிப்படையான விமானப்படை, பொலிஸ், வரி அமைப்பு முறை, வெளிநாட்டுக் கொள்கை ஆகிய வையும் இத் தனிநாட்டுக்கு உண்டு. இப் பிரதேசங்களில் அரசாங்கம் எவ்வகையிலும் ஆட்சி செலுத்தவில்லையென்ற போதிலும் நிதி வழங்குகிறது. (ஆ) பிரபாகரன் தனக்கெனத் தனிநாட்டைத் தவிர வேறெந்தத் தீர்வையும் ஏற்றுக் கொள்ளமாட்டார். அவரைப் பொறுத்தவரை யுத்த நிறுத்தங் களும் பேச்சுவார்த்தைகளும் மேலும் ஆயுதங்களை திரட்டவும் படையணிகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளவும் மேலும் போராளிகளைப் பயிற்றுவிக்கவும் புலிகளை விமர்சிக்கும் தமிழர்களையும் எதிரிகளையும் அழித்தொழிக்கவுமே பயன்படுத்தப்படுகின்றன. (இ) கடந்த நான்கு வருடங்களிலும் இந்த இலக்குகளில் பெரும்பா லானவற்றை ஈட்டியுள்ள நிலையில், தனிநாட்டுப் பிரதேசங்களை விஸ்தரிப்பதே அவருடைய தற்போதைய நோக்கமாகும். அவருடைய தனித் தமிழ் அரசு விவகாரங்களில் வெளியார் தலையீட்டைத் தவிர்க்கும் வகையில் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற அவர் முயற்சி செய்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்குத் தலை யிடியாக இருக்கும் கருணாவை அழிக்க அவர் முயற்சிக் கிறார். (ஈ) இத் தமிழீழ அரசில் பிரபாகரனே சகல அதி காரங்களையும் கொண்டிருக்கக்கூடிய பாசிஸ சர்வாதிகாரி யாக இருப்பார். ரஜினி திராணகம, சரோஜினி யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட ஆயிரக் கணக்கான மாற்றுக் கருத்துக் கொண்ட மக்களைக் கொல்வதற்கு இப் பாசிஸ சர்வாதிகாரத்தை அவர் பயன்படுத்தியுள்ளார். கருத்துச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் மற்றும் நீதியான, நியாயமான தேர்தல்கள் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல் ஆகியன எல்லாம் இத் தமிழீழ அரசின் கருத்துகளுக்கு எதிரானவையாகும்.

இந்த யதார்த்த நிலைமைகள் பேச்சுவார்த்தை களின்போது கவனத்தில் எடுக்கப்படத் தவறினால் முன் னைய பேச்சுவார்த்தைகளைப் போன்று மோதல் தொடரவே வழிவகுக்கும்.

### ஜனநாயக விரோத வழிமுறைகள்

மக்கட் பிரிவினரை விட்டுவிட்டு அரசியல் தலைவர் களுக்கிடையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தமே சமா தானமென்று பேச்சுவார்த்தையாளர்களிலிருந்து தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் வரை மிகப் பலர் கருது கின்றனர். இது ஜனநாயக விரோதமானது மட்டுமல்ல நியாயமற்றதுமாகும்.

உண்மையான சமாதான மென்பது நீதி, சமத்துவம், பரஸ்பர மதிப்பு ஆகியவற்றில் தங்கியுள்ளது. இதற்குச் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரின் கருத்துகள் பெறப்பட வேண்டும். சமாதான முயற்சிகளுக்காகத் தென்னிலங்கையின் இணக்கப் பாட்டைக் கட்டியெழுப்புவது, சரியான பாதையில் எடுக்கப் பட்ட நல்ல சமிக்ஞையாகும். அரசாங்கம் தென்னிலங் கைக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்குமே அரசாங்கமாகும். ஏதோ ஒரு வகையில் வடக்கு - கிழக்கு மக்களின் பிரதிநிதித்துவம், சமாதானப் பேச்சுகளில் இடம்பெற வேண்டி யது மிக முக்கியமானதாகும். நீண்ட காலமாக நீதியான, நியாயமான தேர்தல் மூலம் வடக்கு - கிழக்கு மக்கள் தமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதைப் புலிகள் இயக்கம் தடுத்து வருகிறது. எனவே பல்வேறு அரசியல் கட்சிகளை யும் தொழிற்சங்கங்கள், தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் போன்ற சிவில் சமூகத்தையும் பேச்சுவார்த் தைக்கு அழைக்க வேண்டியது அவசியமானதாகும். யுத்த நிறுத்தப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் புறந்தள்ளப்பட்ட பிரச்சினைக்கும் இதன் மூலம் தீர்வு காண முடியும். முஸ்லிம்கள் ஆயுதப் பிணக்கோடு சம்பந்தப்பட்ட தரப்பு இல்லையென்பதால், யுத்த நிறுத்தம் சம்பந்பமான பேச்சு வார்த்தையில் அவர்கள் தனித்தரப்பாகக் கலந்து கொள்ள வேண்டிய தேவையில்லை. ஆனால் இறுதிச் சமாதானத் தீர்வை வடிவமைப்பதில் அவர்களின் பங்களிப்பு அவசியமானதாகும்.



### தமிழீழத்துக்கு ஆதரவு வழங்கும் சிங்களப் பேரினவாதிகள்

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் நீதியையும் சமத்துவத்தையும் எதிர்பார்க்க முடியுமென்று அரசாங்கம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்குமானால், புலிகள் இயக்கத்துக்குக் கிடைத்துவரும் அரசியல் ஆதரவு இல்லாமல் போய்விடும். அரசாங்கம் வலுவான நிலையி லிருந்து புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்த விரும்பினால், சகல மக்கள் பிரிவினரதும் அபிப்பிராயங்களைப் பெற வேண்டும்.

இலங்கையில் ஒற்றையாட்சியைத் தவிர வேறெ தனையும் கவனத்திலெடுக்க மறுப்பது பேரினவாதிகளின் பிந்திய தந்திரோபாயமாகும். சமஷ்டித் தீர்வு, நாட்டுப் பிரிவினைக்கு ஒரு படிக்கல்லாக அமைந்து விடுமென்று அவர்கள் வெறுமனே வாதிடுகின்றனர். இந்தியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களுக்கு கூடுதல் சுயாட்சி வழங்கப்பட்டிருக்குமானால் பாகிஸ்தான் பிரிந்திருக்க மாட்டாது. பின்னரும் போதியளவு சுயாட்சி வழங்கப்படாததால் கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து பங்களாதேஷாகியது. இலங்கையில் கூட சிங்களப் பேரினவாதிகள் நடைமுறைப்படுத்திய ஒன்றையாட்சியினால் வடக்கு - கிழக்கின் சில பகுதிகளில் ஈழத்தனியரசு நிலவுகிறது. இந்தியா, சமஷ்டித் தன்மை கொண்ட நாடாக இருந்திருக்காவிட்டால் அது பல துண்டுகளாகப் பிரிந்திருக்கும். சிங்களப் பேரினவாதிகள் கூறுவதற்கு மாறாக, சமஷ்டியே நாட்டை ஐக்கியப்படுத்தும், அதிகமான மத்தியஸ்துவமே பிரிவினைக்கு வழிவகுக்கும். ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்கள் பட்ட அவஸ்தைகளே அவர்கள் சமஷ்டித் தீர்வை விரும்புவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இலங்கை அரசாங்கம் ஒற்றையாட்சிக்குள் தீர்வென் பதில் ஒட்டிக் கொண்டிருக்குமானால் தமிழ் மக்களின் ஆதரவையும் இந்திய அரசின் ஆதரவையும் இழந்து விடும்.

### யுத்த நிறுத்தத்தை மீறும் நோர்வே மத்தியஸ்தர்கள்

நோர்வே மத்தியஸ்தர்களுக்கு ஞாபக மறதி போலிருக்கிறது. 2002ஆம் ஆண்டு பிரபாகரனும் கருணாவும் ஒரு தரப்பிலும் இலங்கை அரசாங்கம் மறு தரப்பிலுமாக யுத்த நிறுத்தத்துக்கு அவர்கள் தலைமை வகித்தனர். அரசாங்கம் கருணா தரப்பினரை நிராயுதபாணிகளாக்க வேண்டுமென்று வலியுறுத்தும் வலுவான அறிக்கை யொன்றினை, 2006ஆம் ஆண்டு ஜனவரி மாத மத்தியில் நோர்வே விடுத்தது. மாத்தையாவுக்கும் அவரது ஆதர வாளர்களுக்கும் நடந்ததைப் போன்ற ஒன்றே இது. கருணா தரப்பினரைக் கொன்றொழிப்பதற்கான செயலே இது. இதனைத் தெரிந்து கொண்டுதான் பிரபாகரனின் ஆட்களை



நிராயுதபாணியாக்கினால் மட்டுமே ஆயுதங்களைக் கைவிடுவேனென்று கருணா கூறியுள்ளார். இன்னொரு வார்த்தையில் சொல்வதானால், கருணாவோடு யுத்தம் நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நோர்வே மத்தியஸ்தர்கள் தூண்டுகிறார்கள். தமிழீழத்துக்கு முற்றுமுழுதான நிலைப்பாட்டை எடுத்திருக்கும் தனது இரு எதிரிகளும் மோதி அழிவதைப் பிரபாகரன் புன்சிரிப்போடு வரவேற்பார். மூல யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக இருந்த கருணா துணைப்படையாக மாறியது எவ்வாறு? புலிகளை விமர்சித்த மக்கள் உட்பட அவர்களால் கொல் லப்பட்ட அனைவருக்குமே அவர்கள் துணைப்படையென்று பெயரிட்டனர். புலிகளின் உள்வீட்டுப் பிரச்சினையென்று கூறி, முன்னர் அரசாங்கத்தைத் தலையிட வேண்டாமென்று வலியுறுத்திய புலிகள் இப்போது தலையிடக்கோருவது ஏன்? யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறி அரசாங்கத்தை யுத்தத்தில் ஈடுபடுமாறு அவர்கள் வலியுறுத்துவது ஏன்?

நோர்வே மத்தியஸ்தர்கள், பிரபாகரனின் யுத்தநிறுத்த மீறல்களையும் யுத்தக் குற்றங்களையும் மறைத்துக் கொண்டே பிரபாகரனின் பாக்கட்டுக்குள் இரண்டரைக் கோடி நோர்வே குரோனர்களைப் போட்டனர். கருணா பிரிந்து சென்றபோது அதனை உட் பிரச்சினையென்றும் அரசாங்கத்தைத் தலையிட வேண்டாமென்றும் தன்னால் கருணா தரப்பை அழித்தொழிக்க முடியுமென்றும் பிரபாகரன் கூறினார். கருணா தரப்பைக் கொல்வதற்கு பொதுஜன முன்னணி அரசு அனுமதித்தது. கருணா தரப்பைப் பிரபாகரனால் இலகுவில் அழித்தொழிக்க முடியாமல் போனதால், இப்போது அவர்களைத் துணைப்படையென்று நாமம் சூட்டுகின்றார். உள்வீட்டுப் பிரச்சினையில் தலையிடுமாறு அரசாங்கத்தைக் கோருகிறார்.

நோர்வே மத்தியஸ்தர்களுக்கு உண்மையிலேயே சமாதானம் தேவையென்றால், மாற்றம் பெற்றுள்ள இன்றைய நிலைமைக்கேற்ப முத்தரப்பை உள்ளடக்கும் புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தமொன்று வேண்டுமென்று வலியுறுத்தியிருக்க வேண்டும். அத்துடன் மனித உரிமை ஷரத்தினையும் ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும். அதாவது அப்பாவிக் குடிமக்களுக்கு தொந்தரவு கொடுப்பதில்லை அல்லது கொலை செய்வதில்லையென்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்க வேண்டும்.

புலிகளினதும் நோர்வேயினதும் கோரிக்கைக்கேற்ப பிரபா தரப்பினரை நிராயுதபாணியாக்காமல் கருணா தரப்பி னரை நிராயுதபாணிகளாக்க அரசாங்கம் முனையுமானால் அது யுத்தநிறுத்த ஒப்பந்த மீறலாகும். கருணா தரப்பினர் துணைப் படைகளென்றால் பிரபா தரப்பினரும் துணைப் படைகளே. பழைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இரு தரப்புகளுமே ஆயுத தரப்புகள்தான். வலுவான மனித உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தம் வேண்டும்.

### சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டத்தை அசட்டை செய்தல்

ஆயுதப் படையினர் தற்பாதுகாப்புக்காக நடவடிக்கை யில் ஈடுபடுவது சட்டபூர்வமானது என்ற போதிலும், எந்த வகையிலாவது மக்களுக்குத் தொந்தரவுகள் கொடுப்பது குற்றமாகும். அவ்வாறு மக்கள் பாதிக்கப்படும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று படையி னருக்கு எச்சரிக்கை செய்யப்படவேண்டும். பொலிஸா ருக்கும் இவ்வாறு எச்சரிக்கை விடப்பட வேண்டும். அத்துடன் அந்த எச்சரிக்கை கடுமையாக அமுல்படுத்தப்படவும் வேண்டும். அரசாங்கம், தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனித உரிமைகளைப் பாதுகாக்க மேலும் முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரச தரப்பில்லாத மற்றத் தரப்பு, பிள்ளைகளைக் கடத்திச் செல்லுதல், ஆட்களைக் கடத்துதல், மிரட்டிக் கப்பம் பெறுதல், படுகொலைகள் ஆகியவற்றைப் புரிதல் போன்றவற்றைத் தடுக்க அரசு கடும் முயற்சியெடுக்க வேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசாரணைகளை நடத்தவோ சந்தேக நபர்களைக் கைது செய்யவோ முடியவில்லை யென்ற சாட்டுப் போக்குகளைச் சொல்லக் கூடாது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களைப் பாதுகாப்பதற் கான முயற்சிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கான ரோம் ஒப்பந்தத்தைப் படித்து, ஆராய்ந்து அதனை அங்கீகரித்து அரசு அதில் கைச்சாத்திட வேண்டும். அப்போதுதான் கடந்த காலங்களில் தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கெதிராக மேற் கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்களுக்கு எதிராகவும் மனிதாபிமானத்துக்கெதிரான குற்றங்களை இல்லாமல் செய்யவும் அரசு கடப்பாடு கொண்டுள்ளதென்பதை நிரூபிக்க முடியும். பிரபாகரன், புலிகள் இயக்கத் தலைவ ரென்ற வகையில் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமை, கிழக்கில் முஸ்லிம்களைக் கொன்றமை போன்ற யுத்தக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர். படுகொலைகள், பிள்ளைகளைக் கடத்துதல், சித்திரவதை போன்ற குற்றங்களுக்கும் அவர் பதில் சொல்ல வேண்டியவராவார்.

சர்வதேச சமூகம் விரும்பினால், இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய சக்தி அதற்கே உண்டு. புலிகள் வலுக் கட்டாயமாக வயது குறைந்த பிள்ளை களைப் பிடித்துச் செல்வது பற்றிய புகார்கள், இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, யுனிசெப், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றுக்குத் தெரிவிக்கப் படும்போது, அவை பிள்ளைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு மேலும் கஷ்டங்களையே கொடுக்கின்றனரென்று சர்வதேச மன்னிப்புச் சபை அண்மைய தனது அறிக்கையில் குற்றஞ்சாட்டியிருந்தது. பெற்றோர்கள் தெரிவிக்கும் புகார்கள் புலிகளின் கவனத்துக் குக் கொண்டுவரப்படும்போது, தமது பிள்ளைகளை உயிருடன் பார்க்க விரும்பினவர் சர்வதேச சமூகத்துக்குப் புகார்கள் தெரிவிக்கக் கூடாதென்று புலிகள் மிரட்டுகின்றனர். இதனால் பெற்றோர் வாய்மூடி மௌனிகளாகி விடுகின்றனர். உண்மையிலேயே இவ்வாறான புகார்களை விசாரித்து நடவடிக்கையெடுக்க சுயாதீனமான சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட வேண்டுமென்று சர்வதேச மன்னிப்புச் சபை சிபார்சு செய்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இவ்வாறான கண்காணிப்புக் குழுவொன்றினை நிறுவி, அத்துமீறல்களின் ஈடுபடும் புலி இயக்கத்தின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.


சமாதானம் சாத்தியமாகக் கூடியவொன்று. ஆனால் அதனையடைவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

*நன்றி :- 'த ஐலண்ட்'*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**அக்னி** ஹோத்திரம்
திரு.ராமானுஜதாத்தாச்சாரியார்;
அறிஞர் பெருந்தகை
பேராசிரியரும் என் அருமை
நண்பருமான திரு. அ.ச.
ஞானசம்பந்தம் ஆகிய
சான்றோர்கள் அந்த
நிகழ்ச்சியில் பங்கு பற்றி
ஆதிசங்கரரின் அவதார மகிமை
குறித்தும், அத்வைத தத்துவம்
குறித்தும் ஆழமாகவும்
அகலமாகவும்
விரிவுரையாற்றினார்கள்.



மாலைப் பொழுதில் கவியரசர்
திரு.கண்ணதாசனின்
'அர்த்தமுள்ள இந்து மதம்'
விரிவுரையும் விசேஷமாக
நடந்தது. அதைத் தொடர்ந்து
என் தலைமையில் ஒரு
கவியரங்கமும்
ஏற்பாடாகியிருந்தது.

கண்ணதாசன் முன்
வரிசையில் அமர்ந்து என்
கவியரங்கத்தைக் கேட்டார்.

கீழ்க்கண்டவாறு நான்
பாடினேன்.

'சாக்கடையில் விழுந்தாலும்...
சந்தனத்தில் விழுந்தாலும்...
எதுவுமே -
ஒட்டிக் கொள்ளாமல்
உள்ளது உள்ளபடியே
எழுந்து வருகிறது -
என்னுடைய நிழல்.
நிழலுக்கு இருக்கும் - இந்த
நிட்காமிய ஞானம் - என்
உடலுக்கும் வாய்க்குமாயின்.....
ஆதிசங்கரரைப் போல்
அடியேனுக்கும் -
கள்ளும் ஒன்று;
காய்ச்சிய ஈயமும் ஒன்று'

மேற்கண்ட கவிதையை நான் பாடியவுடன், முன் வரிசையில் அமர்ந்திருந்த கண்ணதாசனின் திருமுகத்தில் வியப்பும், மகிழ்வும் குமிழியிட்டடிப்பதை கவனித்தேன். தொடர்ந்தும் பாடினேன்.


மரம்
பட்டை உரிக்கிறது;
பாம்பு
சட்டை
உரிக்கிறது;
தன்னைப்
புதுப்பித்துக் கொள்ளப்
பிரியப்படாதவன்
மனிதன் மட்டுமே.
தாத்தா சொல்லிய
தத்துவம் என்று -
ஊத்தைக்
கருத்தைப் படிப்பான்;
அப்பன்
வெட்டிய கிணறு
என்று -
உப்புத்
தண்ணீரைக் குடிப்பான்.
கர்த்தர் சொன்னாலும் -
கௌதம
புத்தர் சொன்னாலும் -
பதினெட்டுச்
சித்தர் சொன்னாலும்
தன்னைப்
புதுப்பித்துக் கொள்ளப்
பிரியப் படாதவன்
மனிதன் மட்டுமே.'

- பத்து நிமிஷங்கள் மட்டுமே தான் இருந்து என் கவியரங் கத்தைக் கேட்க இயலும் என்று தனக்கு வேறு பணி எட்டுமணியளவில் இருக்கிறது என்றும் என்னிடத்தில் சொன்ன திரு.கண்ணதாசன் முழுக் கவியரங்கமும் உட்கார்ந்து கேட்க முடிவு செய்துவிட்டதை அவர் முகம் காட்டிற்று. என் கவிதையும் தொடர்ந்தது :

'ஆடு -
மாடு -
நாய் -
நரி....
இன்ன பிற -
பிராணிகளெல்லாம்
இனச் சேர்க்கைக்குப்
பருவம் பார்க்கின்றன.
மனிதன் மட்டுமே -
இதை
மலஜலம் கழிப்பது போல்...
அன்றாட வேலையாக
ஆக்கி வைத்திருக்கிறான்.
அதனால்தான்...
ஆச்சார்ய ரஜனீஷ் அலறுகிறார்;
முதலில்
அந்த வேலையை
அலுத்துப் போகும்வரை
செய்து முடி;
பிற வேலைகளைப்
பிறகு பார்க்கலாம் என்று.
அப்படியானால் -
புலனடக்கம் என்பது
சவ அடக்கத்திற்குப்
பிறகுதானா?

(தொடரும்.......)




**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**

**ஹோல்டரில்** வாயில் வைக்கின்ற பாகத்தில் இடைவெளி நிறைய இருக்கும். இந்தப் பகுதிக்குள் மெல்லிய காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட வரை படத்தையும் ஏனைய இரகசியக் குறிப்புக்களையும் ஒளித்து வைத்துவிடலாம். உளவாளி பிடிபட்டுவிட்டால் சிகரட் பிடிக்க எவரும் அனுமதி மறுக்கமாட்டார்கள். ஹோல்டரில் சிகரட்டை வைத்துப் பிடித்துக் கொண்டே இருந்தால் உள்ளே உள்ள அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிடும். உளவாளி என்பதற்கான தடயத்தை அழித்துவிட இது ஒரு வழி.

சாதாரணமாக ஒற்றர்கள் பயணிகள் செல்லும் மார்க்கங்களில் பயணம் செய்யமாட்டார்கள். சில சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே முக்கியமான பாதைகளைத் தவிர்த்து சுற்றான வழிகளில் செல்ல வேண்டிய கட்டாயமும் அவர்களுக்கு ஏற்படலாம். இந்தச் சந்தர்ப்பங்களில் அவர்கள் உணவருந்துவதற்கு உணவுச் சாலைகள் கிடைக்காது. அல்லது உணவு அருந்துவதற்கு அவகாசம் இருக்காது. அதற்கும் ஹட்டன் ஒரு ஏற்பாடு செய்தார். டூத் பேஸ்ட் ட்யூப் போல் ஒன்றை தயார் செய்தார். டூத் பேஸ்ட் போலவே அதில் பசை அடைக்கப் பட்டிருக்கும். இது உணவுச் சத்துக்கள் அடங்கிய பசை. கொஞ்சம் நாக்கில் தடவி உமிழ் நீரோடு கலந்து விழுங்கிவிட்டால் போதும். தேவையான ஆகாரச் சத்துக்கள் அனைத்தும் அதில் அடங்கியிருப்பதால் பசிக்காது. களைப்பும் ஏற்படாது.

எதிரிகளின் பிராந்தியத்துக்கு ஒரு போர் வீரன் ஒற்றனாக நுழைகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனிடம் ஒரு பேனா தரப்படும். அந்தப் பேனாவில் மூன்று அறைகள் இருக்கும். முதல் அறையில் வழக்கமான நீல மை இருக்கும். மற்ற இரண்டு அறையிலும் வண்ணப்பொடிகள் இருக்கும். இந்த வண்ணப்பொடிகளால் உடைகளின் நிறத்தை வேண்டியவாறு மாற்றிக் கொள்ளலாம். அல்லது சிவிலியன் போல தோற்றமளிக்கின்ற விதத்திலும் உடையின் நிறத்தை மாற்றிக் கொண்டு விடலாம்.

பாதுகாப்புக்கான எளிய கருவிகளும் ஒற்றர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அந்தக் கருவி சாதாரண பேனா போல இருக்கும். ஆனால் அதை பின்புறமிருந்து அழுத்தினால் கூர்மையான எஃகு அம்புகள் கடுமையான வேகத்துடன் பாயும். அருகாமையில் உள்ளவனின் கண்களைக் குருடாக்கி தப்பித்துச் செல்ல இந்தப் பேனா உளவாளிகளுக்கு கொடுக்கப்பட்டது. கேமராக்கள், டிரான்சிஸ்டர் ரேடியோக்கள் ஆகியவற்றின் பாகங்களில் வெடிகுண்டுகளை மறைத்து வைக்கும் முறையும் இரண்டாவது உலகப் போரின்போது உளவாளிகளால் சர்வ சாதாரணமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

## தனிமைக்கு விடுதலை



**ஒஸ்கார்** விருது பெற்ற நடிகையான நிக்கொலே கிட்மேன் தற்போது தனது காதலனுடன் பகிரங்கமான இடங்களில் நடமாடி வருகிறார். அண்மையில் நடந்து முடிந்த கிரெமி திரைப்படவிழாவுக்கு அவர் தனது புதிய காதலர் கீத் அர்பனுடன் சமுகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது இவர்கள் இருவரும் கரங்களைக் கோர்த்த வண்ணம் இணை பிரியாத ஜோடியைப் போல் காட்சியளித்தமை பலரது விழிகளுக்கு விருந்தாக அமைந்தது.

கிட்மேனுக்கும் கன்ட்ரி பாடகரான கீத் அர்பனுக்கும் இடையில் நெருக்கமான தொடர்புகள் இருப்பதாக சில வருடங்களாக செய்திகள் அடிபட ஆரம்பித்தும் இவர்கள் இருவரும் பகிரங்கமாக அதனை வெளிப்படுத்திக் கொள்ளவில்லை.

நிக்கொலே கிட்மேன் இதற்கு முன்னர் பிரபல நடிகர் டொம் குருஸை திருமணம் முடித்து2002ஆம் வருடம் விவாகரத்துப் பெற்றவர்.

இதன் பின்னர் டொம் குரூஸ் பல காதலிகளுடன் காலத்தைக் கழித்து வரும் அதே சமயம், கிட்மேன் தனிமையில் வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

தனிமை - நீடிக்கவில்லை.



## வளர்ந்து வருதல்

**வளர்ந்து**வரும் ஹொலிவுட் நடிகைகளிடையே கீரா நைட்லி முன்னணியில் இருக்கிறார். இம்முறை ஒஸ்கார் விருதுக்காகவும் இவரது பெயர் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

ஸ்காலட் ஜோன்சனும் வளர்ந்துவரும் நடிகர்களிடையே முன்னணி வகிக்கும் நடித்தராவார்.

20 வயதான நைட்லியும் 21 வயதான ஜோன்சனும் இணைந்து ஹொலிவூட்டின் வருடாந்த வெளியீடான 'வெனிட்டிவெயார்'. விசேட மலருக்காக தாராள குணத்துடன் வழங்கியுள்ள தோற்றம் இது. ஸ்காலட் ஜோன்சனும் இம் முறை ஒஸ்கார் விருதுக்காக சிபாரிசு செய்யப்பட்டிருந்தார்.

இப்படித் தோன்றினாலாவது ஒஸ்கார் விருது கிடைக்கும் என்று இருவரும் நினைத்தார்களோ தெரியாது....

ஆனால் அப்படி எதுவும் கிடைத்ததாகத் தெரியவில்லை.


## வளைந்து கொடுத்தல்



**மேனி** சிலிர்க்கும் இந்தக் காட்சியை அண்மையில் கொழும்பில் நடாத்தப்பட்ட சீன ஸ்சர்க்கஸின் போது காண முடிந்தது.

சீன சர்க்கஸ் குழுவொன்று 40 வருடங்களுக்குப் பின்னர் இலங்கை வந்திருந்த போதே இந்தக் காட்சியை நம்நாட்டு விழிகள் நேரடியாகக் கண்டுப்பூரித்தன!

வளைந்து கொடுக்க வேண்டும், வளைந்து கொடுக்க வேண்டும் என அடிக்கடி கூறப்படுவது இதுதானோ?



## மல்லிகாவின் மர்மம்



**பொலிவுட்** திரைப்படத் துறையில் மல்லிகா ஜெராவத்துக்கு ஒரு தனி இடம் இருக்கிறது. அதாவது இளைஞர்களின் விழிகளை அகலமாக்கும் தன்மை அவரிடம் இருக்கிறது.

உடல் மொழி (Body Language) பற்றிய அவரது அறிவுதான் இதற்குக் காரணம் எனப் பலர் கூறுகின்றனர்.

இந்த உடல் மொழியை அறியும் ஆசையில் பிரபல பொலிவுட் திரைப்பட இயக்குநர் ராம் கோபால் வர்மா இறங்கினார். அவரது Darna Zaroori Hai எனும் திரைப்படத்தில் மல்லிகாவுக்கும் ஒரு பாத்திரத்தை இவர் வழங்கியதற்குக் காரணம் இவரது உடல் மொழியை கற்பதற்கான ஆசை தான் என்பதில் சந்தேகமில்லை.

இது ஒரு மர்மத் திரைப்படம் என இயக்குநர் கூறினார்.

ஆமாம், மல்லிகா ஷெராவத்தை தேர்ந்தெடுத்திருப்பதன் மூலம் நிச்சயமாக இது 'மர்மத்' திரைப்படமாகத் தான் இருக்கும் என்பதை திரைப்படத்தைப் பார்த்தா தெரிந்துகொள்ள வேண்டும்?

## நிர்வாணத்தின் விலை

**கெமருன் டயஸ்** - பிரபலமான நடிகை. சார்ள்ஸ் ஏஞ்சல்ஸ் இரண்டாம் பாகத்தில் நடித்த மைக்கா மிக அதிகமான ஊதியத்தைப் பெற்றுக் கொண்டவர். அதாவது இருபது மில்லியன் அமெரிக்க டொலர்களை இவர் இத்திரைப்படத்திற்காக ஊதியமாகப் பெற்றவர்.

அண்மைக்காலமாக கெமருன் டயஸ் ஒரு மொடல் அழகியாகவும் வலம் வருகின்றார்.


இவர் மொடல் அழகியாக வந்த ஆரம்ப கால கட்டத்தில் நிர்வாணமாக சில காட்சிகளில் தோன்றியுள்ளார். இந்த நிர்வாணப் படங்களை வைத்து ஜோன் ரூடர் எனும் புகைப்படக் கலைஞர் இவரை மிரட்டி வருவதாக கெமருன் அண்மையில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்தப் புகைப்படங்களுக்கு ரூடர் பேசியுள்ள தொகை மூன்றரை மில்லியன் டொலர்களாகும்.

வழக்கின் தீர்ப்புக்காக கெமருன் காத்திருக்கிறார்..

அந்தப் புகைப்படங்கள் வெளிவருமா? என அவரது ரசிகர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்!

# ஒரு மூத்த போராளியின் முடிவும் சில ஞாபகத் துளிகளும்



ஒன்பது பேர். அழகான கூடு மாதிரி இருந்தது, வீடு. அந்தக் கூட்டை நானேதான் கலைத்துவிட்டு என் மனைவியோடு பிரான்ஸுக்கு வந்தேன். இதோ 24 ஆண்டுகளாகி விட்டன.

உலகத்தில் எந்த மூலையில் சுற்றி அலைந்தாலும், தாயகக் கனவு என்னை அலைக்கழித்துக்கொண்டேதான் இருந்தது.

தாய் மண்ணைத் தொலைத்து, புதிய சூழலில், புதிய உறவுகளை நாங்கள் தேடிக் கொண்டோம்.

"கடந்த ஜனவரி மாதம், பொங்கல் அன்று எனக்குக் கடுமையான வயிற்றுவலி அதை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இரண்டு நாள் கழித்து மீண்டும் மிகக் கடுமையான வலி வயிற்றைப் பிடுங்கி எடுக்க, பிரான்ஸில் உள்ள மருத்துவமனைக்குப் போனேன். டாக்டர் என்னைச் சோதித்து விட்டு, 'உங்களுக்கு வேண்டியவர்கள் எங்கிருக் கிறார்கள்?' என்று கேட்டார். எனக்கு என் நிலைமை புரிந்துவிட்டது. பின் "உங்கள் கல் லீரல் புற்றுநோயால் முழுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கிறது' என்றார். என் மனைவியும், குழந்தைகளும் கதறி அழுதார்கள். என் முப்பத்தைந்து வயதில்,

"**யாழ்ப்பாணம்** மயிலிட்டிதான் என் சொந்த ஊர். எழுபதுகளின் துவக்கத்தில் சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறைகளை எதிர்கொள்ள, ஈழத்தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நோக்கித் திரும்பிய காலம். சிங்கள ஆதிக்கத்தை எதிர்க்க அஹிம்சை உதவாது, ஆயுதம் தான் உதவும்'

## இறுதி நாட்களில் சிகிச்சை பெறுவதற்காக இந்தியாவுக்கு வருகை தந்திருந்த போது புஷ்பராஜா தெரிவித்தவை

என்று முடிவெடுத்து, அதுவரை நான் இருந்த தமிழரசு கட்சியிலிருந்து விலகி, தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்பை நானும், சிவகுமாரன், சத்யசீலன் போன்ற சில நண்பர்களும் சேர்ந்து துவக்கினோம்.

ஈழவிடுதலை ஆயுதப் போராட்டத்தை

> **ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவர் புஷ்பராஜா. பின்னர்தான் வெவ்வேறு பெயர்களில் இயக்கங்கள் உருவாகின. ஆக தாய் இயக்கம் புலிகள்தான் என்று அன்ரன் பாலசிங்கம் கூறியது அப்பட்டமான பொய்யாகும்.**

முதன்முதலாகத் துவக்கி வைத்தது மாணவர் பேரவைதான். பின்னர், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினராகவும் போராளியாகவும் இருந்தேன். அதே கால கட்டத்தில் ஈரோஸ், டெலோ, ஈ.என்.டி.எல்.எப். தமிழ் புதிய புலிகள் என ஏழெட்டு அமைப்புகள் ஈழத்தில் முளைத்தன.

எல்லோரும் ஈழ விடுதலைக்காகப் போராடினோம். எனினும் நாங்களும் மற்ற ஆயுதக்குழுக்களும் விடுதலை பற்றிய தத்துவக் கோட்பாட்டில் தெளிவில்லாமல் இருந்தோம்.

இது சகோதரக் கொலையில் கொண்டு போய் எங்களை நிறுத்தியது.


எங்களுக்குள் முரண்பாடுகள் இருந்தன. வேறு வேறு குழுக்கள் வேறு வேறு தத்துவங்களைக் கொண்டு இருந்தன. ஆனால், அடிப்படைக் கொள்ளை ஒன்றுதான்... அது, தமிழ் ஈழம் அடைவது.

எண்பதுகளில் தொடங்கி இன்று வரை ஈழத்தில் சகோதர யுத்தத்தில் கொல்லப் பட்டவர்கள் மட்டும் கிட்டத்தட்ட 6,000பேர் சுடப்பட்டும், மின்சாரக் கம்பங்களில் தொங்கவிடப்பட்டும் கொலை செய்யப்பட்ட இந்தப் போராளிகளெல்லாம் யார்? சிங்களவர்களா? இலங்கை இராணுவத்தினரா? இல்லை, சுதந்திரத் தமிழ் ஈழத்துக்காகத் தங்களின் வீட்டை, சொந்தங்களைத் துறந்து, ஆயுதம் தரித்தவர்கள்!

இப்படி ஒரு சூழலில்தான் நானும் கொலை செய்யப்படுவேன் என்று பயந்தேன். ஒன்று, என் எதிரிகளால், இன்னொன்று, ஆயுதம் தரித்த என் நண்பர்களால். 'இது கொலைக்காரங்க பூமி ஆயிடுச்சு. நாம இனிமே இங்கே இருக்க வேண்டாம். வேற எங்காவது போயிடலாம்' என்று என் காதலி சொன்னாங்க.. அதற்கு அடுத்த நாள், அதாவது 82ஆம் ஆண்டு மே மாதம் திருமணம் செய்து கொண்டோம். என் உடன்பிறந்தவர்கள் என் அம்மாவும், அப்பாவும் இறந்தபோதுகூட நான் என் தாய்நாட்டுக்குப் போனது கிடையாது. போக வேண்டும் என்ற எண்ணம் கூட வந்தது கிடையாது. மயிலிட்டி இப்போது எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியாது. என் எண்ணம் முழுக்க வேறொன்றிலிருந்தது.

ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய வரலாற்று நூலை எழுதும் முயற்சி அது. 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்கிற நூலை எழுதியிருக்கிறேன். அடுத்ததாக இன்னும் இரண்டு நூல்களை எழுதலாம் என்று நினைத்திருந்தேன். ஒன்று, ஈழப் போரட்டத்தில் பெண்களின் பங்கு. இன்னொன்று, சிங்கள ஆட்சியாளர்கள் காலங்காலமாகத் தமிழர்களின் உரிமைகளை எப்படியெல்லாம் காலில் போட்டு மிதித்தார்கள் என்பதை எழுத ஆசைப்பட்டேன். அதற்கு குறைந்த பட்சம் இன்னும் எட்டு மாதங்களாவது நான் உயிரோடு இருக்க வேண்டும்.

மருத்துவரீதியாக இப்போது சில முயற்சிகளை எடுத்திருக்கிறேன். அது வெற்றி பெறுமா, தோல்வியுறுமா.... தெரியவில்லை. நான் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை. என் வீட்டார் கடவுளை நம்புகிறார்கள். இதுதான் உலகம், இப்படித்தான் வாழ்க்கை என்று விவரம்



தெரியத் துவங்கிய காலத்திலிருந்தே எனக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாது நான் பெரியாரிஸ்ட்....!

தேதியை நிச்சயித்தபடி வரும் மரணத்தில் சில சௌகரியங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அடுத்து நாம் செய்ய வேண்டிய பணிகளைத் திட்டமிட்டு, துரிதமாக முடிக்கலாம்.

எழுத விரும்புவதை எழுதலாம். சந்திக்க விரும்பும் நண்பர்களைச் சந்தித்து அளவளாவி மகிழலாம். ஆனால், என்ன ஒன்று... இன்னும் கொஞ்ச நாள்தான் இருக்கப் போகிறேம். என்பதால், ஆசை கட்டுக்கடங்காமல் நீண்டு கொண்டே போகிறது. இத்தனை ஆசைகளும் இவ்வளவு நாள் எங்கே இருந்தன என்று தெரியவில்லை இறுதித் தேர்வை எழுதும் மாணவன் போல் என்னை உணர்கிறேன்.

எழுதலாம் என்று அமர்ந்தால், சோர்வாக இருக்கிறது. ஆனாலும், நான் விடாப்பிடியாக எழுதிக்கொண்டு இருக்கிறேன்.

> **'இயக்கங்கள் தமது கொள்கைகளை வகுக்கும்போதும் சரி, அதை நடைமுறைப்படுத்தும் போதும் சரி, எந்த மக்களின் விடுதலைக்காகப் போராடப் புறப்பட்டார்களோ அந்த மக்களைக் கருத்தில் எடுக்கவில்லை. ஆயுதங்களை முன்னிலைப்படுத்தியும், தலைமையை வழிபட்டும் இயக்கத்தை வளர்க்கும் போக்கு தலை தூக்கியதும் போராளிகள் கதாநாயகர்கள் ஆனார்கள். தமது சக போராளிகளையும், தமது மக்களையும், எதிரியைவிட மோசமாக அடக்கி ஒடுக்க, கொன்றுவீச அவர்கள் தயங்கவில்லை. இயக்கங்களைக் கண்டு மக்கள் பயம் கொள்ளும் நிலையை ஏற்படுத்தினார்கள். தாங்கள் இழைக்கும் தவறுகள் எவ்வளவு தூரம் போராட்டத்தைப் பாதிக்கும் என்பதனை அவர்கள் உணர மறுத்தார்கள். முடிவு, மக்கள் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டார்கள்; போராட்டத்தை வெறுத்தார்கள்...'**

(தொடர்ச்சி 22ஆம் பக்கம் பார்க்க....)

# அதிரும் கொலையாளி ஆட்டோ சங்கர்

அதிர்வு 07





### கருணை மனு

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஆட்டோ சங்கரும், எல்டினும் ஜனாதிபதிக்குக் கருணை மனு அனுப்பினார்கள்.

அவை தள்ளுபடி செய்யப்பட்டன. எனவே, சேலம் ஜெயிலில் ஆட்டோ சங்கரை 27.04.1995 அன்று காலை 5.30 மணிக்கும், எல்டினை மதுரை மத்திய சிறையில் 28.4.1995 அன்று காலை 5.30 மணிக்கும் தூக்கில் போட உத்தரவிட்டது.

தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று இருவர் சார்பிலும் கவர்னர் சென்னாரெட்டியிடம் மனு கொடுக்கப்பட்டது.

இது தவிர ஆட்டோ சங்கர் மனைவி ஜெகதீஸ்வரி, எல்டின் மனைவி சாந்தி ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் வக்கீல் நடராஜன் மூலம் இரு 'ரிட்' மனுக்களைத் தாக்கல் செய்தனர். அதில், 'இருவரையும் தூக்கில் போட தடை விதிக்கவேண்டும். தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கவேண்டும்' என்று கூறி இருந்தனர்.


இந்த மனுக்கள் நீதிபதி சிவராஜ்படேல் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. அரசு தரப்பு வக்கீல் ஜோதி, எதிர்த்தரப்பு வக்கீல் ஏ.நடராஜன் ஆகியோர் ஆஜராகி வாதாடினார்கள்.

### மனு தள்ளுபடி

பிறகு இரு மனுக்களையும் நீதிபதி தள்ளுபடி செய்தார். தீர்ப்பில் நீதிபதி கூறியதாவது :-

தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றவேண்டும் என்ற கோரிக்கைக்கு, ஐகோர்ட்டில் மனு செய்ய முடியாது. அரசியல் சட்டம் 32ஆவது பிரிவின் கீழ் சுப்ரீம் கோர்ட்டில் தான் மனு செய்யவேண்டும்.

மேலும் மனுதாரர்கள் கூறும் காரணங்கள் போதுமானதாக இல்லை.



பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தூக்கு தண்டனை பெற முதல் ஆட்டோ சங்கர்.

தூக்கில் போடுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கமுடியாது"

இவ்வாறு நீதிபதி தீர்ப்பில் கூறினார்.

### மனைவி சந்திப்பு

ஆட்டோ சங்கர் தூக்கில் போடப்படுவதற்கு இரு தினங்களுக்கு முன்பு அவனுடைய மனைவி ஜெகதீஸ்வரி, குழந்தைகளுடன் சென்று சந்தித்தாள். "ஆட்டோ சங்கர் துயரமிகுதியால் கண்ணீர் வடித்தான். குடும்பத்தினர் கதறி அழுதனர்.

பிறகு இரவு 7 மணி வரை தனது கடைசி ஆசை, உயில் ஆகியவை பற்றி குடும்பத்தினருடன் பேசினான்.

இலவச சட்ட ஆலோசனை உதவிக் குழுவை சந்திக்க ஆட்டோ சங்கர் விரும்பினான். இதன்படி இந்தக் குழுவினர் ஜெயிலுக்குச் சென்று பார்த்தனர். அப்போது "நான் இறந்த பிறகு எனது கண்களைத் தானம் செய்ய விரும்புகிறேன்" என்று கூறினான். அதில் சில சட்டப் பிரச்சினை இருந்ததால் அவனது கோரிக்கை ஏற்கப்படவில்லை.

### ஏக்கப் பார்வை

சேலம் ஜெயிலில் ஆட்டோ சங்கர் தனி அறையில் அடைக்கப்பட்டிருந்தான். கோர்ட் மூலம் தடை உத்தரவு வந்து விடும் என்று 26ஆம் திகதி மாலை 6 மணி வரை எதிர்பார்த்து இருந்தான். ஆனால் தகவல் எதுவும் வராததால், மறு நாள் தூக்கில் போடப்படுவது உறுதி என்பதை தெரிந்து கொண்டான். யாருடனும் பேசவில்லை. இரவில் தூங்கவும் இல்லை.

அதிகாலை 4.30 மணி அளவில் ஜெயில் அதிகாரியும் பொலிஸ் அதிகாரியும் அவனிடம் சென்றார்கள்......

(கொலைகள் தொடரும்....)

# 3ஆம் உலகப் போர்

07

**ஏராளமான** ஆயுதங்களும் அழிந்தன. ஜப்பானுக்கு ஏற்பட்ட உயிர் சேதம் 5 ஆயிரம் மட்டுமே. ஜப்பான் படைகள் பர்மாவையும் (தற்போதைய மியான்மர்) தாக்கின. பர்மா தலைநகருக்கு 40 மைல் தூரத்தில் உள்ள பெரு என்ற நகரம், ஜப்பானியர் வசம் ஆகியது. பர்மாவில் இருந்த இங்கிலாந்து இராணுவத்தினர், திறமையானவர்கள் அல்ல. எனவே, அவர்களை ஜப்பானியர் எளிதாக முறியடிக்க முடிந்தது.

உலகப் போரில், இங்கிலாந்து படையில் இந்தியர்கள் பங்கு கொண்டார்கள். போர் முனையில் வீர தீரச் செயல்களில் ஈடுபட்டார்கள். இந்தியா மீது ஹிட்லருக்கு ஒரு கண் இருந்தது. இந்திய மக்கள் இங்கிலாந்து ஆதிக்கத்தை எதிர்த்து சுதந்திரப் போராட்டம் நடத்தி வந்தனர்.

உலகப் போரின் போதும், இந்தப் போராட்டம் நீடித்த ஜெர்மனியை அடக்குவது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், ரஷ்ய அதிபர் ஸ்டாலின் மூவரும் சந்தித்து பேசினர்.

இந்திய மக்களின் நம்பிக்கையைப் பெற்று விட்டால், இந்தியாவை சுலபமாகக் கைப்பற்றிக் கொள்ளாலாம் என்று நினைத்தார் ஷிட்லர். ஆனால் அவருடைய முயற்சி பலிக்கவில்லை.

"இந்தியா இங்கிலாந்து ஆதிக்கத்தில் இருந்து கஷ்டப்படுகிறது. நாங்கள் இந்தியாவை விடுவிப்போம்" என்று 1942 ஏப்ரலில் ஜப்பான் அறிவித்தது.

அதற்கு உடனடியாக நேரு பதில் அளித்தார். "இந்திய மக்கள் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்வார்கள். அதற்கான வீரமும், விவேகமும் இந்திய மக்களுக்கு உண்டு. எனவே இந்திய மக்களின் விடுதலைக்கு ஜப்பான் உதவி தேவை இல்லை" என்று அறிவித்தார். இந்தியாவுக்கு இங்கிலாந்து எதிரி என்றபோதிலும் ஹிட்லரும், ஜப்பானும் உலகத்துக்கே எதிரிகளாக இருந்தார்கள். எனவேதான் ஜப்பான் உதவி தேவை இல்லை என்று நேரு கூறினார்.


பர்மாவைக் கைப்பற்றிக் கொண்ட ஜப்பான் இராணுவம், 1944 மார்ச் மாதத்தில் இந்தியாவை நோக்கித் திரும்பியது. மார்ச் 30ஆம் திகதி இம்பால் நகரத்தை முற்றுகையிட்டது. (இம்பால் நகரம் இப்போது மணிபுரி மாநிலத்தில் உள்ளது). இம்பாலில் இருந்த இங்கிலாந்து படையில் இந்தியர்களும் இருந்தார்கள். அவர்கள் ஜப்பானியரை எதிர்த்து வீரப் போர் புரிந்தனர்.

இதனால் இம்பால் நகருக்குள் ஜப்பான் படை நுழைய முடியவில்லை. ஆனாலும், எப்படியாவது இம்பாலைப் பிடித்துவிட்டு, இந்தியாவுக்குள் நுழைந்து விட வேண்டும் என்ற உறுதியுடன் ஜப்பானியர்கள் 2 மாத காலம் முற்றுகையிட்டனர். இந்த சமயத்தில், இம்பாலுக்குள் சிக்கியிருந்த இங்கிலாந்து வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள், மருந்துகள் முதலியவற்றை பிரிட்டிஷ் விமானங்கள் கொண்டு வந்து போட்டன.

ஆனால் முற்றுகையிட்டிருந்த ஜப்பானிய படைகளுக்கு உணவுப் பொருட்களோ, மருந்துகளோ கிடைக்காததோடு, வெடி பொருட்களும் தீர்ந்து போய் விட்டன. இதன் காரணமாக, ஜப்பான் படைகள் தோல்வியைத் தழுவின. இம்பாலை தாக்கிய ஜப்பான் வீரர்கள் எண்ணிக்கை 85 ஆயிரம், அவர்களின் பெரும்பான்மையோர் போரில் பலியாகிவிட, மீதிப்பேர் பின்வாங்கிச் சென்றார்கள். ஏற்கனவே மொஸ்கோவை கைப்பற்ற முயன்று, ரஷ்யாவிடம் மூக்கறுபட்ட ஹிட்லர் - ரஷ்யாவை எப்படியாவது அடிபணியச் செய்ய எண்ணி, ஸ்டாலினின் கிராட் நகரத்தை தாக்குமாறு தன் படைகளுக்கு உத்தவிட்டான். 1942 ஜுலை மாதத்தில், ரஷ்யாவில் உள்ள ஸ்டாலின் கிராட் நகரத்தை ஜெர்மனி படைகள் சூழ்ந்து கொண்டன.

(தொடரும்....)






விண்டு ரைக்க அறிய அரியதாய்
விரிந்த வான் வெளியென - நின்றனை
அண்ட கோடிகள் வானில் அமைத்தனை
அவற்றில் எண்ணற்ற வேகஞ் சமைத்தனை

- சுப்பிரமணிய பாரதியார்

# புத்திசாலி ஆரவல்லி!



பாப்பாபட்டி என்ற ஊரில் அருள்மணி என்ற ஏழைத் தொழிலாளி இருந்தான். கிடைத்த வருவாயைக் கொண்டு அவனால் தன் மனைவி, மக்களைக் காப்பாற்ற முடியவில்லை; வறுமையில் வாடினான்.

எனவே, தன் மனைவி, மக்களை உறவினரிடம் ஒப்படைத்துவிட்டுப் பக்கத்து நாட்டை நோக்கிப் பயணமானான். அங்கே அவனுக்கு நகரைத் தூய்மை செய்யும் துப்பரவுப் பணி கிடைத்தது. மாதத்திற்கு இரண்டு பணம் ஊதியம். அவனும் உண்மையாக உழைத்தான். நகர மக்களும் அவ்வப்பொழுது அவனுக்கு அன்பளிப்பாகச் சிறு தொகை தந்தனர். சில மாதங்களுக்குள் அவனிடம் பத்துப் பணம் சேர்ந்து விட்டது. நூறு பணம் சேர்ந்ததும் ஊருக்குத் திரும்ப நினைத்தான்.

'தன்னிடம் உள்ள பணத்தை யாராவது திருடிவிட்டால் என்ன செய்வது? எங்கே பாதுகாப்பாக வைப்பது?' என்று சிந்தித்தான். எல்லோராலும் நல்லவர் என்று புகழப் பெறும் பணக்காரர் சந்திரனின் நினைவு வந்தது.

அவரிடம் சென்ற அவன், தன்னிடம் இருந்த பத்துப் பணத்தைத் தந்து, தான் திரும்ப ஊருக்குச் செல்லும் போது தருமாறு வேண்டினான். முதலில் மறுத்த அவர், வேண்டா வெறுப்பாக ஒப்புக் கொண்டார். 'எப்படியும் இவனை ஏமாற்றி விடலாம். நம் பேச்சைத்தான் ஊரார் மதிப்பர்' என்று நினைத்தார். அவனும் தான் சேர்த்த பணத்தை எல்லாம் அவரிடம் தந்து வந்தான். நூறு பணம் சேர்ந்தது. ஊருக்குச் செல்லலாம் என்று நினைத்த அவன் சந்திரனிடம் சென்றான். தான் சேமித்த பணத்தைத் திருப்பித் தருமாறு கேட்டான்.

"நீ யார்? இங்கு எதற்காக வந்தாய்? என்னை ஏமாற்ற நினைக்கிறாயா? இன்னும் சிறிது நேரம் இங்கேயே நின்றால் என் வேலைக்காரர்களை விட்டு உதைத்துச் சிறையில் அடைக்கச் செய்வேன். ஓடிப்போ" என்று கத்தினார் அவர். இதைக் கேட்ட அவனுக்கு உலகமே இருண்டுவிட்டது போல் தோன்றிற்று.

"ஐயோ! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிப் பாடுபட்டுச் சேர்த்த பணம் ஆயிற்றே! இவரிடம் தந்தேன் என்றால் யார் நம்பப் போகிறார்கள்?" என்று அழுதுகொண்டே அங்கிருந்து சென்றான். வழக்கமாக அவன் குப்பை வாரும் தெருவில் இருந்த பணக்காரப் பெண் ஆரவல்லி சோகத்துடன் இருந்த அவனைக் கண்டாள்.

"என்ன நடந்தது? ஏன் இப்படி அழுது கொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டாள் ஆரவல்லி. இவள் மிகுந்த புத்திசாலி.

அவன் நடந்ததை எல்லாம் சொல்லி அழுதான். அவன் மீது இரக்கங் கொண்ட அவள், "நீ கவலைப்படாதே! இன்று மாலை நான் அந்தப் பணக்காரரின் வீட்டிற்குள் செல்வேன். நீ சிறிது நேரம் கழித்து அங்கே வா. அவரிடம்

**பாப்பா முரசு சிறுகதை**

'நான் தங்களிடம் தந்த நூறு பணத்தைத் தாருங்கள்' என்று கேள். அவரும் தந்து விடுவார். நீ உன் ஊருக்கு மகிழ்ச்சியோடு செல்லலாம்," என்றாள். அவனால் இதை நம்ப முடியவில்லை. மாலை நேரம். ஆரவல்லி தன் வேலைக்காரியிடம் ஏதோ சொல்லிவிட்டு பணக்காரரின் வீட்டை நோக்கி நடந்தாள்.

அவளை வரவேற்ற பணக்காரர், "உங்களுக்கு என்ன உதவி வேண்டும்?" என்று கேட்டார்.


"இவ்வூரிலேயே தாங்கள் தான் நேர்மையானவர். என் கணவர் வெளியூர் சென்று பல நாட்கள் ஆகின்றன. ஏனோ அவர் இன்னும் திரும்பவில்லை. அவரைக் காண்பதற்காக நானும் ஊருக்குச் செல்ல முடிவு செய்து விட்டேன். என்னிடம் உள்ள விலை உயர்ந்த நகைகளை யார் பொறுப்பில் வைத்துவிட்டுச் செல்வது என்று சிந்தித்தேன். தங்கள் நினைவு வந்தது" என்று நகைப் பெட்டியைத் திறந்து காட்டினாள். அதில் இருந்த நகைகள் ஒளி வீசின. அப்போது அவரால் ஏமாற்றப்பட்ட தொழிலாளி வந்து நின்று, "ஐயா!" என்று குரல் கொடுத்தான். இவன் வேறு இந்த நேரத்தில் வந்து நாம் ஏமாற்றிய விஷயத்தைக் கூறி விட்டால் இவள் நம்மை நம்பமாட்டாள். அத்துடன் அந்தப் பெண்மணிக்கு தன் மீது நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்தார் அவர்.

"வாப்பா வா! எங்கே உன்னைக் காணோம். இந்தா நீ என்னிடம் கொடுத்த நூறு பணம்" என்று பெருமையாகக் கூறியபடி அவனிடம் தந்தார். அவனும் அதைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியாகச் சென்றான்.

"இந்த நூறு பணத்தை பல நாட்களாக இவன் என்னிடம் கொடுத்து சேர்த்து வந்தான். இவனை முன்னே நான் எப்பொழுதும் பார்த்தது இல்லை. என் மீது நம்பிக்கை வைத்து சிறுகச் சிறுக என்னிடம் தந்து சேமித்தான். நூறு பணம் சேர்ந்ததும் என்னிடம் பெற்றுக்கொண்டு செல்கிறான்" என்று தன் நேர்மையைப் பற்றிச் சொன்னார் பணக்காரர். அப்பொழுது அந்தப் பெண்மணியின் வேலைக்காரி அங்கே வந்தாள். "அம்மா! அம்மா! முதலாளி வந்து விட்டார். உங்களை உடனே வரச் சொன்னார்" என்றாள். இதைக் கேட்ட ஆரவல்லி, "ஐயா! உங்கள் வீட்டிற்கு வந்த நேரம் நல்ல நேரம். எங்க வீட்டுக்காரரே வந்துவிட்டார். இனிமேல் நகையை நான் யார் பொறுப்பிலும் விட்டு வைக்க வேண்டிய தேவையில்லை. நன்றி" என்று கூறிவிட்டு, பெட்டியுடன் புறப்பட்டாள்.

'ஐயோ! இவள் நகையை ஏமாற்றலாம் என்ற எண்ணத்தில் ஏமாற்றிச் சேர்த்த நூறு பணத்தையும் இழந்தேனே' என்று வருந்தினார் செல்வந்தர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 21.03.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 636**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 634

**பரிசுக்குரியவர்:**
**எம்.ஏ.எஸ். கதீஜா,**
**53/1, பாடசாலை வீதி, கொடபிடிய, அகுறஸ்ஸ.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பா.அபிலாஷி, தரம் 2, வெவில்டன், 18, அடைவீதி, திருகோணமலை. | யோகராசா கலாசருசினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. |
| ர.நிரஞ்சனா, மட்/செங்கலடி மத்திய கல்லூரி, தரம் 11சி, டி.வி.கே.மில் வீதி, செங்கலடி -30350. | ரி.சிவதர்சினி, தரம் 07, இல.114 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். |
| ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | டேவிட் ஆன்டிலுக்ஷி, 82, நியூ செட்டி தெரு, கொழும்பு - 13. |
| திவாணி நவக்குமார், தரம் 03, 92ஏ, வட்டாரந்தன்னை பெசேஜ், கண்டி. | ஜெ.எப். ஹுஸ்னா, 322/A, எஸ்.எம்.ரி.எச். வீதி, ஓட்டமாவடி - 01 |
| செல்வி சகானுஜா தியாகேசன், 55, மேல்மாடி வீதி, மட்டக்களப்பு. | என். மாலதி, 275, மாரியம்மன் கோயிலடி, மன்னார் வீதி, புத்தளம். |

# ஆத்திசூடி

## நேர்பட ஒழுகு

நீ வாழ்க்கையில் எத்தகைய இன்னல்கள் வந்தாலும் நேர்மையைக் கைவிடாது நீதி நெறி பின்பற்றி வாழப் பழகு.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# ஆட்டைக் கட்டி வளர்ப்போமே!




மை மை என்கிறான் தம்பிமணி
மருண்டு குதிக்குது ஆட்டுக்குட்டி
மை மை என்னுது தாய் ஆடு
மடியை ஊட்டும் குட்டியைப்பார்.

வேலியிற் தாவுது தாயாடு
வளைத்துக் குழையைத் தின்னுதுபார்
வளவுக் காரர் துரத்துகிறார்
வளைந்து ஓடுது தாயாடு.

ஆடுகள் தின்னும்
பயிரெல்லாம்
அழிந்து பட்டுப்
போய்விடுமாம்
ஆட்டைக் கட்டி
வளர்ப்போமே
அதிகம் பாலும் கறப்போமே.

# அதிசய உலகம்

## தாகம் தீர்க்கும் தர்பூசணி



தர்பூசணி பழத்தின் அமைப்பே அப்படித்தான் உள்ளது. எனவே தான் இந்தப் பழம் வெயில் காலத்தில் நம்முடைய தாகம் தீர்க்கும் தாக சாந்தியாக உள்ளது. இதன் கொடிகள் தரையில் படர்ந்து வளரும் தன்மை உடையவை.

தர்பூசணி பழத்தின் உள்ளே அமைந்துள்ள செல்கள் தண்ணீரை உறிஞ்சி வைத்துக் கொள்ளும் தன்மை கொண்டவை. இந்தச் செல்களுக்கு, பபுள் செல்கள் என்று பெயர்.

## பணம்




பணம் தான் எல்லா சிக்கல்களுக்கும் காரணம் என்று அனைவருக்கும் தெரியும். அதனை நாட்டு மக்கள் மறக்காமல் இருக்க ஒரே நாடு மட்டும் உறுதியாக உள்ளது. அது வாடிகன் சிட்டிதான். அந்த நாட்டு நாணயத்தில் 'எல்லா துன்பங்களுக்கும் இதுதான் காரணம்' என்று பொறிக்கப்பட்டுள்ளது.

# உங்கள் பொது அறிவு எப்படி?

## முக்கிய பொருட்கள், இடங்களின் முக்கியத்துவம்

| | |
|---|---|
| 01. ஈழத்திலே தமிழில் தோன்றிய முதற் பத்திரிகை? | உதயதாரகை. |
| 02. கிரிக்கெட் பந்தடிக்கும் மட்டை செய்யப்படும் மரம்? | விரோ. |
| 03. இலங்கையில் உள்ள நாட்டுப் பாடல்களைத் தொகுத்த பெருமைக்குரிய இரு பெரியோர்கள்? | மு.இராமலிங்கம், தி.சதாசிவ ஐயர். |
| 04. 'விம்பிள்டன்' எந்த விளையாட்டுடன் தொடர்புள்ள நாடு? | டெனிஸ். |
| 05. மனித சரீரத்தில் உள்ள எலும்புகள்? | 206. |
| 06. இலங்கையில் தம் ஆட்சிக் காலத்தில் டச்சுக்காரர்கள் வெளியிட்ட நாணயத்தில் அச்சிடப்பட்ட எழுத்துக்கள்? | வீ.ஓ.சி. |
| 07. இலங்கையில் வனவிலங்குகளுக்கென பாதுகாப்பாக ஒதுக்கப்பட்ட தேசிய வனப் பிரதேசம்? | வில்பத்து, யால. |
| 08. கனடாவின் புதிய தேசியக் கொடியின் மத்தியில் காணப்படும் சின்னம்? | மாப்பில் இலை. |
| 09. பொஸ்ரன் தேநீர் விருந்து எந்நாட்டின் சரித்திரத்துடன் தொடர்புடையது? | அமெரிக்கா. |
| 10. இந்து மதத்தைச் சார்ந்த மண்ணினால் ஆளப்படும் நாடு? | நேபாளம். |




# அவரை விட நல்லவர்!



**கொஸ்டரிகாவின்** கில்பர்டோ ஷேடன் செல்லப் பிராணியாக வளர்ப்பது 'போவோ' என்ற முதலையை. 15 அடி நீளமான போவோவுடன் நீரில் இறங்கி விளையாடுவது அவருக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்கு. 'உங்களுக்கு இதனுடன் விளையாடுவதில் பயமில்லையா?' என்று யாராவது அவரைக் கேட்டால், அவர் சொல்வது இதுதான் "நான் இதனுடன் விளையாடுவதை விட மனைவிக்கே பயப்படுகிறேன்."


## உயர்ந்தவரும் அதிகாரம் படைத்தவரும்



**இவர்களில்** குள்ளமானவர் தான் அதிகாரம் படைத்தவர். அதாவது இவர்தான் உக்ரேன் ஜனாதிபதி விக்டர் யுஸ்வேன்கோ. ஜனாதிபதிக்குப் பக்கத்தில் இருக்கும் லியோனிட் ஸ்டெட்னிக் தான் உலகிலேயே உயர்ந்த மனிதராகக் கருதப்படுபவர். அவரின் உயரம் 8 அடி 4 அங்குலமாகும்.

## பூஜை

**மந்திர,** சூனிய வேலைகளுக்குப் பெயர் போன ஒரு நாடு இந்தியா. அதே போல் கிரிக்கெட்டையும் கடவுளாகக் கருதுபவர்கள். அண்மையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்றுக்கு முன், தமது அணிக்கு வெற்றி கிடைக்குமாறு வேண்டி இரசிகர்கள் சிலர் அணி வீரர்களின் புகைப்படங்களுக்குப் பூசகர்களைக் கொண்டு பூஜை செய்த காட்சியே இது.







**பிரித்தானியாவின்** கலைஞரான டேனியன் ஹர்ஸ்ட்டினால் மேசைக்கடியில் நிர்மாணிக்கப்பட்ட ஆதாம் - ஏவாள் ஓவியமே இது. இக்கண்காட்சி அண்மையில் மெக்சிக்கோவில் நடைபெற்றது.


**புகையிரதங்களின்** கூரையில் உட்கார்ந்து பயணம் செய்வது மிகவும் ஆபத்தான செயலாகும். ஆனால், பல்வேறு நாடுகளில் சன நெருக்கடி காரணமாக ஆபத்தையும் துச்சமென மதித்து பயணம் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்தோனேஷியாவின் நெரிசலான அலுவலக நேரமொன்றில் பயணிகள் இவ்வாறு கூரையை இருக்கையாக்கிக் கொண்டனர்.




## நகரை உண்டனர்

லண்டன் நகரில் செல்ப்ரிப்ஸ் விற்பனைத் திடலில் நிர்மாணித்திருந்த இந்த விளையாட்டு நகரத்துக்கு 72,000 பிஸ்கட்களைப் பயன்படுத்தியிருந்தனர். கண்காட்சி முடிந்தவுடன் பார்வையாளர்கள் நகரை உண்டு முடித்ததாகத் தகவல்.





சத்யராஜ் - வடிவேலு
கோவை பிரதர்ஸ்


# சிவாஜி சமாச்சாரம்!

சிவாஜி படத்தில் ஸ்ரேயா தவிர, ஐஸ்வர்யா ராயையோ, ராணி முகர்ஜியையோ நடிக்க வைக்க ஒருபுறம் முயற்சி நடந்துகொண்டிருக்கிறது. இதற்கிடையே ஷங்கருக்கு ஒப்புக்கொள்ளாத ஐஸ்வர்யா ராய், மணிரத்தினத்தின் புதிய ஹிந்திப் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருப்பதாக ஒரு தகவல் வந்து கொண்டிருக்கிறது. ஷங்கரின் 'பாய்ஸ்' படத்தில் நீதிபதியாக நடித்து காமெடி பண்ணிய பட்டிமன்றப் புகழ் சாலமன் பாப்பையா, சிவாஜியிலும் நடித்திருக்கிறார். வில்லனாக நடித்த சத்யராஜை கேட்டபோது, அவர் மறுத்துவிட்டார். ராஜ்கிரணை கேட்டபோது, நெகட்டிவ் கேரக்டர்கள் செய்வதில்லையென்று நான் ஆரம்பத்திலிருந்தே ஒரு பாலிஸி வைத்திருக்கிறேன். ஸாரி எனச் சொல்லிவிட்டார்.

இப்போது மோகன்லாலைக் கேட்டுக் கொண்டிருப்பதாக ஒரு தகவல் வந்துகொண்டிருக்கிறது. பிரகாஷ்ராஜூம் நடிக்கிறார்.

இந்நிலையில் ஹைதராபாத்தில் ரஜினி சம்பந்தப்படாத சில காட்சிகள் இரண்டாவது ஷெட்யூலில் எடுக்கப்பட்டு வருகின்றன. இறைச்சிக்காக மாடுகளை வெட்டும் கொலை சாலை செட்-அப்பில் ஒரு காட்சி. இதற்காக ஒரு டன் அதாவது 1000கிலோ மாட்டிறைச்சி வேணும் என ஷங்கர் சொல்லியிருக்கிறார். அலைந்து திரிந்து வாங்கி வந்தது 250 கிலோதான். இந்த இறைச்சி பத்தாது...பார்க்கவே பிரமாண்டமாக இருக்கணும். அதனால் இன்னும் 750 கிலோ வாங்கி வாருங்கள் எனச் சொல்லிவிட்டார். தயாரிப்பாளர் எம்.எஸ்.குகனோ இருந்ததையெல்லாம் வாங்கி வந்துவிட்டோம் எனச் சொல்லியிருக்கிறார். இதில் டென்ஷனான ஷங்கர், அப்படியென்றால் கறி கிடைக்கிறபோது ஷூட்டிங் செய்துகொள்ளலாம். இப்போது கேன்சல் செய்யலாம் என்றாராம்.

உடனே குகன், தனது அப்பா ஏ.வி.எம்.சரவணனுக்கு போன் போட்டிருக்கிறார். அவரோ, எப்படியாவது அலைந்து திரிந்து வாங்கிக்கொடுங்கள் எனச் சொல்லிவிட்டார். அதன் பிறகு நாலைந்து கார்களை எடுத்துக்கொண்டு சிட்டிக்கு வெளியே ரவுண்ட் அடித்து ஒரு 500 கிலோ இறைச்சி வாங்கி வந்திருக்கிறார்கள். அதன் பிறகு ஷூட்டிங் நடந்திருக்கிறது.



நயன்தாரா
தலைமகன்

# ரம்யா மாமி

படுவேகக் குத்துப் பாட்டு, மின்னல் வேக டான்ஸ், செக்ஸியான மூவ்மெண்ட் என பாட்டுக்களில் பயமுறுத்துபவர்கள் டோலிவுட்காரர்கள். எல்லாமே அவர்களுக்கு வேகமாகவும் ஸ்கீரீன் புல்லாக கலர் புல்லாகவும் இருக்க வேண்டும்.

நம்மூர் நடிகைகள் பலர் தெலுங்கில் சோபிக்க முடியாமல் போவதற்கு இந்த வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் போவதும் ஒரு முக்கியமான காரணம்.

அதேபோல வித்தியாசமான கதையைப் பின்னிப் படமெடுப்பதிலும் தெலுங்குக்காரர்களை பீட் பண்ணவே முடியாது. முன்பு சிரஞ்சீவி நடித்த ஒரு படம் வந்தது. அதில் ரயிலில் சிரஞ்சீவி, அவரது மனைவி, மாமியார் ஆகியோர் பயணம் செய்வார்கள். திடீரென ரயிலில் கரண்ட் போய் விடும் (போயிருமே). கரண்ட் வந்த பின்னர் பார்த்தால் சிரஞ்சீவி அவரது மாமியாரைக் கட்டிப் பிடித்தபடி உட்கார்ந்திருப்பார்.

இப்படிப்பட்ட அட்டகாசமான கதைகளை அங்கே மட்டும்தான் பார்க்கலாம். இப்போது அப்படி ஒரு படம் வெளியாகி சக்கை போடு போட்டுள்ளது. அப்படத்தை "மதுரை மாப்பிள்ளை" என்ற பெயரில் டப் செய்துள்ளனர். இப்படத்தில் ரம்யா கிருஷ்ணன் கொடுமைக்கார மாமியாராக வருகிறார். அவருக்கு ஜோடியாக நடித்திருப்பவர் சுமன்.

இவர்கள் தவிர ஜூனியர் என்.டி.ஆர். நாயகனாக நடித்துள்ளார். அவருக்கு ஜோடிகளாக ஜெனிலியா (நம்ம ஹரிணி தான்) மற்றும் ஷ்ரேயா ஆகியோர் நடித்துள்ளனர். மேலும், நாசர், கோட்டா ஸ்ரீனிவாசன் ஆகியோரும் படத்தில் உள்ளனர்.



ஸ்ரீகாந்த் - மீராஜஸ்மின்
மெக்கூரிப்பூக்கள்


படத்தின் கதைதான் இங்கே ரொம்ப முக்கியம். கதைப்படி ரம்யா கிருஷ்ணன் கொடுமைக்கார மாமியார். புருஷனை மதிக்காத புண்ணியவதி. அவரது மகள்கள் ஜெனிலியா, ஷ்ரேயா. ரம்யாவின் குணம் பிடிக்காமல் அவரிடமிருந்து பிரிந்து விடுகிறார் சுமன். இருவரையும் சேர்க்க மகள்கள் இருவரும் படாத பாடு படுகிறார்கள். அவர்களுக்கு உதவ வருகிறார் ஜூனியர் என்.டி.ஆர்.

இந்த முயற்சியில் ஜூனியர் என்.டி.ஆர். மீது காதல் கொள்கிறார்கள் இரு சகோதரிகளும். இருவரது காதலையும் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளும் ஜூனியர் என்.டி.ஆர்., ரம்யா கிருஷ்ணன் மீதும் மோகம் கொள்கிறார்.

வயதானாலும் கட்டுக் குலையாமல் கிண்ணென்று இருப்பவர் ரம்யா. இது போதாதா, காதல் பிறப்பதற்கு? மூன்று பேரிடமும் தனது அன்பைப் பொழிந்து தள்ளுகிறார் ஜூனியர் என்.டி.ஆர்.

கடைசியில் ஜூனியர் என்.டி.ஆர். யாரைக் கல்யாணம் செய்கிறார், ரம்யா என்ன ஆகிறார் என்பதுதான் கதையாம். எப்படி கீது கதை? இப்படிப்பட்ட கதை பிளஸ் கதையம்சத்துடன் கூடிய இப்படம் விரைவில் 'மதுரை மாப்பிள்ளை'யாக தமிழ் பேச வருகிறது.

இதில் ஜெனிலியா, ரம்யாவுக்குப் போட்டியாக கிளாமரில் பயமுறுத்தியுள்ளார் ஸ்ரேயா.



சிபிராஜ் - நமீதா
கோவை பிரதர்ஸ்

## சி னி

## 'சிவாஜி' - சில தகவல்கள்

* சிவாஜியில் ஆயிரம் கிலோ மாட்டிறைச்சியைத் தொங்கவிட்டு ஒரு காட்சி பிரமாண்டமாக எடுக்கப்பட்டு வருகிறது.

* ஷங்கரின் 'பாய்ஸ்' படத்தின் நீதிபதியாக நடித்த பட்டிமன்றப் புகழ் சாலமன்

* பாப்பையா சிவாஜியிலும் ஒரு முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார்.

*சாலமன் பாப்பையாவின் பட்டிமன்ற குழுவில் இருக்கும் நகைச்சுவைப் பேச்சாளர் ராஜ சிவாஜியில் நாயகி ஸ்ரேயாவின் அப்பாவாக நடிக்கிறார்.

* ரஜினியின் அம்மாவாக வடிவுக்கரசி நடிக்கிறார்.

* ரஜினியின் அப்பாவாக மணிவண்ணன் நடிக்கிறார்.

* ரஜினியின் நண்பராக விவேக் கலகலப் பூட்டுகிறார்.

* ஏழையாக இருந்து, பணக்காரராக உயரும் ரஜினி, படத்தில் பென்ஸ் கார் உபயோகப்படுத்து கிறார்.

* ஸ்ரேயாவை பெண் கேட்டுப் போகும் இடத்தில் ரஜினியை பொலிஸார் கைது செய்வது போன்ற காட்சி சமீபத்தில் கீழ்ப்பாக்கம் கார்டன் பகுதியில் அரச குடியிருப்பு ஏரியா ஒன்றில் எடுக்கப்பட்டது.



ஆர்யா
கலாபக் காதலன்

# மங்கும் நிலா

**அஜலகுஜலா** 'அ...ஆ' நிலா இப்போது ஆள் அட்ரஸே இல்லாமல் போய்விட்டார். ஹைதராபாத்தே அவரது நிரந்தர வசிப்பிடமாக மாறியுள்ளது. (அவ்வப்போது சென்னைக்கு வந்து போகிறார்). எல்லாம் ஜாம்பவானால் வந்த வினை!

அன்பே ஆருயிரேவில் நிலா அறிமுகமாகியபோது, அடுத்த சிம்ரன் என எல்லோரும் வரிந்து கட்டி எழுதினர். ஆனால் படத்தில் நிலாவைப் பார்த்தபோது, சிம் எங்கே, நிலா எங்கே என்று கடுப்பாகி விட்டனர்.

ஆனால் நிலாவின் இன்றைய நிலை கோலிவுட்டில் படு மோசமாகி உள்ளது.

ஜாம்பவான் படப்பிடிப்பில் தகராறு, சொல்லாமல் கொள்ளாமல் ஓடிப்போனது என ஏகப்பட்ட குழப்பங்களில் சிக்கிய நிலாவுக்கு, புதிதாக தமிழில் நடிக்கத் தடை போட்டு விட்டனர். இதனால் ஹைதராபாத்தில் தங்கியிருந்து தெலுங்குப் படத்தில் நடித்து வருகிறார் நிலா.

ஆனால், அதிலும் அவ்வப்போது முரண்டு பிடிப்பதால் கோலிவுட்டில் அவரை புதிதாக யாரும் புக் செய்ய முன் வரவில்லை.

தமிழ் போனா என்ன, தெலுங்கு இருக்கே என்று தைரியமாக இருந்தவருக்கு அங்கேயும் நேரம் சரியில்லை.

இப்போது அவரது கையில் ஒரே ஒரு தெலுங்குப் படம் மட்டுமே இருக்கிறதாம். புக் ஆன இன்னொரு படத்தில் இருந்து நிலாவைத் தூக்கி விட்டார்கள்.

இதனால் நிலா பெரும் அப்செட். இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் வழக்கம் போல அல்டாப்பாகத்தான் வலம் வந்து கொண்டுள்ளார் அம்மணி.


படங்கள் ஏதும் இல்லாத நிலையிலும், ஜம்பத்தை சற்றும் குறைத்துக் கொள்ளாத நிலா, 40 குடுங்கோ, 50 குடுங்கோ என்று தன்னைத் தேடி வரும் தயாரிப்பாளர்களிடம் லட்சங்களை சாதாரணமாகக் கேட்டு அவர்களை ஓட ஓட விரட்டுகிறாராம்.

இவருக்கு இத்தனை சம்பளத்தையும் கொடுத்து, நொம்பலத்தைக் கூட சேர்த்துக் கொள்ள நாங்கள் என்ன இனா வாயர்களா என்று கேட்கிறார்களாம் தெலுங்குத் தயாரிப்பாளர்கள். இதனால் புதிய படம் ஏதும் இல்லாமல் ஒரே படத்திலேயே நடித்துக் கொண்டிருக்கிறார் நிலா.

ஷூட்டிங் போரடித்தால் அப்படியே பிளைட்டைப் பிடித்து சென்னைக்கு வந்து விடும் நிலா, இங்கு சூர்யாவுடன் லைட்டாக இளைப்பாறிவிட்டு மறுபடியும் ஹைதராபாத் போய் விடுகிறார்.

நிலா மெல்ல மெல்ல மங்கி வருவது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.





## புலி படுத்தது; முரசு எப்போது ஒலிக்கும்?

**ஆதி** எதிர்பார்த்த அளவிற்குப் போகாததால் விஜய்க்கு உடனடி ஒரு வெற்றி தேவைப்படுகிறதாம். இதனால் 'திருப்பாச்சி', 'சிவகாசி' ஆகிய வெற்றிப் படங்களை தன் மகன் விஜய் நடிக்க, இயக்கிய பேரரசுவை அணுகியிருக்கிறது எஸ்.ஏ.சந்திரசேகரன் தரப்பு. ஏவி.எம். தயாரிப்பில் அஜீத் நடிக்க உருவாகிவரும் 'திருப்பதி' படத்தில் பிஸியாக இருக்கும் பேரரசு இப்போதைக்கு உடனடியாக விஜய் நடிக்க ஒரு படத்தையும் இயக்குவது என்பது தன்னால் இயலாத காரியமெனவும், வேண்டுமானால் தான் கதை தருவதாகவும், திரைக்கதை - வசனம் கூட எழுதித் தருவதாகவும், தன் உடன்பிறந்த தம்பியும், தனது அசோசியேட் இயக்குநருமான முத்துவடுகு இயக்கட்டும்; நான் இயக்க மேற்பார்வையும் செய்கிறேன் எனவும் கூறியிருக்கிறார். இத்திட்டத்திற்கு விஜய் டபுள் ஓ.கே. சொல்லிவிட்டார் என்றாலும் விஜய்யின் தந்தைக்குலம் யோசித்து வருவதாகத் தெரிகிறது. (அப்பச்சன் தயாரிப்பில் முத்துவடுகு இயக்கவுள்ள படத்திற்கு 'முரசு' எனப் பெயர் வைத்துவிட்டதாகவும் ஒரு தகவல்.) ஆனாலும் எப்படியும் அடுத்த படம் வெற்றிப்படமாக அமைய வேண்டும் என்பதில் அப்பாவும் பிள்ளையும் உறுதியாக இருக்கின்றனர் என்பது மட்டும் நிச்சயம்.

டைரக்டர் முத்துவடுகுவின் படத்தில் நடிப்பது இன்னும் உறுதிசெய்யப்படாத நிலையில்...எஸ்.ஏ.சூர்யாவை வைத்து 'திருவிழா' என்றொரு படத்தை இயக்கவிருக்கிறார் முத்துவடுகு.

இதெல்லாம் சரி...அப்பச்சன் தயாரிப்பில் விஜய் நடிக்க, எஸ்.ஜே.சூர்யா இயக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட 'புலி' ஏன் கைவிடப்பட்டது?



கமல்ஹாசன் - கமலினி முகர்ஜி
வேட்டையாடு விளையாடு

கதையில் எஸ்.ஏ.சந்திரசேகர் சொன்ன மாற்றங்களை எஸ்.ஜே.சூர்யா செய்ய மறுப்பதால்தான் அந்தப் படம் கைவிடப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

நாம் மேலும் தோண்டித் துருவியதில் புலி படத்தின் கதையையும் விஜய் தரப்பு படத்தை நிராகரித்ததற்கான காரணமும் தெரியவந்தது.

புலி என்ன கதை என்று பார்ப்போமா?

அப்பா ராஜ்கிரண். மகன் விஜய். அப்பாவுக்கு தான் எப்படியாவது பொலிஸ் வேலையில் சேர்ந்துவிட வேண்டும் என்பதில் சிறுவயதிலிருந்தே ஆசை, லட்சியம். ஆனால் சூழ்நிலை சந்தர்ப்பங்களால் அந்த ஆசை நிறைவேறவில்லை. தன்னால் முடியாததை தன் மகனையாவது செய்யவைப்போம் என முடிவு செய்த அப்பா, மகனை பொலிஸ் ஆக்க முயற்சிக்கிறார். இதுதான் கதை. இந்தக் கதையில் திரைக்கதை என்பது முழுக்க முழுக்க காமெடியாகவும், கிளுகிளுப்பாகவும் செய்யப்பட்டிருந்தது. இதில் விஜய் தரப்புக்கு உடன்பாடில்லை. விஜய்யின் இரசிகர்கள் பலரும் நீங்கள் அதிகாரியாக ஒரு படத்தில் நடிக்கவேண்டும் என நச்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். பொலிஸ் அதிகாரி படம் என்றால் விஜயகாந்த், சத்யராஜ் படங்கள் போல் பரபரப்பாக இருக்க வேண்டும். மிகப் பொரிய ஆக்ஷன் அதிரடியாகவும் அமையவேண்டும். அதனால்தான் பொலிஸ் கதை என்றதும் ஒப்புக்கொண்டார் விஜய். ஆனால் எஸ்.ஜே.சூர்யா சொன்ன பொலிஸ் 'புலி' கதையோ, பாக்யராஜின் 'அவசர பொலிஸ்' டைப்பில் காமெடியாக இருந்ததால் கதையை சீரியஸாக மாற்றச் சொன்னார். இந்தப் படம் ஜெயிக்கும். அதற்கு நான் உத்தரவாதம். அதனால் இப்படியே நடியுங்கள் என எஸ்.ஜே.சூர்யா சொல்லியிருக்கிறார். இதில் விஜய்க்கு விருப்பமில்லை. அதனால்தான் 'புலி' படம் கைவிடப்பட்டது.

அதற்குப் பதிலாக டைரக்டர் ஹரியை வைத்து பண்ணுவதற்கும் ஏற்பாடு நடந்தது. ஆனால் ஹரியின் 'ஆறு' பெரிய அளவில் இல்லாததால் அதிலும் விஜய தரப்புக்கு யோசனை.

முத்துவடுகு இயக்கத்தில் 'முரசு' ஒலிக்குமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## வி சி ட்





ஜீவன் - நாவ்யாநாயர்
அமிர்தம்

## காட்ஃபாதர் ரகசியம்

வில்லன் என்ற டைட்டில் வைத்துக்கொண்டு ஹீரோவாக ஜெயிக்கக்கூடிய வல்லமை கொண்டவர் அஜீத்.

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் அஜீத் நடித்த 'வில்லன்' படம் ஆங்கிலப் படங்களுக்கு இணையாகப் பேசப்பட்டது.

மீண்டும் அஜீத் - கே.எஸ்.ரவிக்குமார் கூட்டணி காட்.'.பாதர் படம் மூலம் வெற்றிக்கொடி நாட்ட வருகிறது.

முதன் முதலாக இந்தப் படத்தில் மூன்று வேடங்களில் நடிக்கிறார் அஜீத்.

இதில் மூன்று கேரக்டர்களுமே சிறப்பாக வந்திருக்கிறது. படத்தின் டிரெய்லர் பார்த்த பலரும் 'காட்.'.பாதர்' படம் பற்றியே பேச...அஜீத்திடம் கேட்டோம்.

"டிரெய்லர் பார்த்த பலரும் சிறப்பாக இருப்பதாகப் பாஸிடிவ்வாகச் சொன்னார்கள். இரசிகர்களைப் போலவே, மீடியாக்களைப் போலவே நானும் காட்.'.பாதர் படம் மீது மிகுந்த ஆவலோடு இருக்கிறேன்" என்றார்.

அப்பா வேடத்தில் கறுப்பு - வெள்ளை தாடியுடன் சுருட்டு பிடித்தபடி அஜீத் தோன்றும் காட்சிகள் அசரடிக்கும்.

இதைவிட ஆச்சரிய அதிர்ச்சி கலந்த இன்னொரு கேரக்டரும் உண்டு. அது அரவாணி சாயலில் ஒரு கேரக்டரில் நடிப்பில் பிரமாதம் பண்ணியிருக்கிறாராம் அஜீத்.

தம்பி மனைவியை அடையத் துடிக்கும் பாத்திரத்தில் 'வாலி'யில் நடித்தார். கொஞ்சம் பிசகினாலும் ஆபாசமாகிவிடக்கூடிய இந்தக் கேரக்டரில் சாதுர்யமாக நடித்து சாதனை படைத்தவர் அஜீத்.

இப்போது அரவாணித்தன்மையுடைய ஒரு கேரக்டரில் நடித்து பரபரப்பை உண்டுபண்ணப் போகிறார்.

## பார் டான்ஸராக நயன்தாரா

'சந்திரமுகி' படம் ரிலீஸான சமயத்தில் கேரளாவுக்குப்போய் தன் அப்பா, அம்மாவைப் பார்த்துவிட்டு வந்தார் நயன்தாரா. அதன்பிறகு கிட்டத்திட்ட 10 மாதங்களுக்கு மேலாகிவிட்டது தன் அப்பா, அம்மாவைப் பார்த்து. தமிழ், தெலுங்கு என அம்மணி பிஸியோ பிஸியாக இருப்பதால் எங்கேயும் போகமுடியவில்லை. சென்னையிலேயே ஒரு வீட்டை வாங்கி அப்பா - அம்மாவை குடிவைக்கலாம் என நயன்தாரா விரும்பியபோதும், சென்னையில் தங்க நயன்தாராவின் பெற்றோர் விரும்பவில்லை. இதனால் போனில் பேசுவதோடு இருந்த நயன்தாரா, சமீபத்தில் அப்பா அம்மாவைப் போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்.

அந்த ஆனந்தத்தில் இருந்த நயன்தாராவிடம் 'ஈ' படத்தில் பார் டான்ஸராக நடிக்கிறீர்களாமே? இப்போதுதான் பார் டான்ஸர்களுக்குத் தடை விதித்த விவகாரம் மும்பை அரசியலையே கலக்கிக்கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு தீவிரவாதிகளோடும் பார் டான்ஸர் ஒருவருக்குத் தொடர்பு இருந்ததாகச் சர்ச்சைக்குரிய விஷயங்கள் வந்து கொண்டிருக்கிறது. கூடவே கிளுகிளுப்பு செய்திகளும் வருகிறது.

அப்படியானால் இந்தச் சர்ச்சைக்குரிய கேரக்டரில்தான் 'ஈ' படத்தில் நடிக்கிறீர்களா? என்று கேட்டோம்.

"பார் டான்ஸராக நடிப்பது உண்மைதான். ஆனால் அதை தயவு செய்து வெளியே சொல்லாதீங்க. இப்போது நீங்கள் கேள்வி கேட்பது மாதிரியே இரசிகர்கள், அந்த கேரக்டரின் மீது ஏகப்பட்ட கிளுகிளு கற்பனைகளோடு படம் பார்க்க வருவார்கள். அது இல்லையென்றால் ஏமாந்துபோவார்கள். இந்தப் படத்தில் எனது பார் டான்ஸர் கேரக்டர் மிக வித்தியாசமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது" என்றார் நயன்தாரா.


தலைமகன் படத்தில் பத்திரிகை நிருபராக நடிக்கிறீர்களாமே? அந்த அனுபவம் எப்படி?

"பத்திரிகையாளர் சம்பந்தப்பட்ட கேரக்டர்னு சொன்னாங்க. ஆனா இதுவரை என்னை வைத்து டாக்கிபோர்ஷன் எதுவும் எடுக்கல. பாடல் காட்சிகள் மட்டும் எடுத்திருக்காங்க. டாக்கிபோர்ஷன் எடுக்கும்போது சொல்லி அனுப்புறேன். உங்களோட பத்திரிகை நிருபர் அனுபவங்களை சொல்லுங்க" என்றார் நயன்.

நயன் பற்றி இப்போது பரபரப்பாகப் பேசப்படும் இன்னொரு செய்தி... முக்கியமான டைரக்டர்களுக்கு அவ்வப்போது மது விருந்து தருகிறார் என்பதுதான். சமீபத்தில் கூட கிரீன்பார்க் ஹோட்டலில் டைரக்டர்ஸ் ஸ்பெஷல் பார்ட்டி நடத்தியதாகச் சொல்லப்படுகிறது.

நடிகை அஸின் புத்தாண்டையொட்டி டைரக்டர் பேரரசுக்கு ஒரு பார்ட்டி கொடுத்தார். அஸின் என்ன செய்தாலும் அதற்குப் பதிலடி என்பதைப் பாலிஸியாக வைத்திருக்கும் நயன்தாராவும் இப்போது பார்ட்டி கொடுத்திருக்கிறார்.

பார்ட்டியைப் பற்றி நயன்தாராவிடம் கேட்கலாம் என்றால்.... பார்ட்டி டென்ஷன் ஆயிடிச்சின்னா...அதனால் எஸ்கேப் ஆனோம்.



சரத்குமார் - நயன்தாரா
தலைமகன்

## த்ரிஷாவின் இதயத்திருடன் யார்?

**ஒரு** காலத்தில் தமிழகத்தில் நதியா ஜுரம் பரவியிருந்தது. திரும்பின பக்கமெல்லாம் நதியாமோகம்தான். நதியா செருப்பு, நதியா பேக், நதியா டிரஸ், நதியா பொட்டு...என பெரிய புரட்சியே ஏற்படுத்தினார் நதியா. இப்போது அதேபோல் ஒரு புரட்சியை த்ரிஷா ஆந்திரத்தில் ஏற்படுத்தியிருக்கிறார். பெரிய பெரிய ஹீரோக்கள் எல்லாம் த்ரிஷாவுடன் நடிக்கத் துடிக்கிறார்கள். தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவிகூட தனது 'ஸ்டாலின்' படத்திற்கு த்ரிஷாவைத்தான் ஒப்பந்தம் செய்திருக்கிறார். அந்தளவுக்கு ஆட்டிப்படைக்கிறது த்ரிஷா மோகம். இரசிகர்கள் மட்டுமின்றி தெலுங்கு திரையுலகின் பல ஹீரோக்களும் த்ரிஷா மீது ஒரு சிக்கிக்காக இருக்கிறார்கள். அத்தோடு த்ரிஷா என்னோட ஆளு...என தங்களுக்குத்தானே பித்தம் தலைக்கேறி பினாத்திக் கொண்டிருக்கிறார்கள். த்ரிஷாவை யார் வளைப்பது என ஒரு அறிவிக்கப்படாத யுத்தமே ஹீரோக்களுக்குள் நடந்துகொண்டிருக்கிறது.

சீக்கிரமே த்ரிஷாவை என் வலையில் வீழ்த்துவேன் என ஆ.'.ப்த ரெக்கார்டாக சவால் விட்டுக்கொண்டிருக்கிறாராம் பவன்கல்யாண்.



ஜீவன் - நாவ்யாநாயர்
அமிர்தம்




## காதல் கைதி....!

உன்
விழித்த
விழிக்குள்
என் விழி
விழுந்து
படுத்துறங்கி
நகர்ந்த
நிமிடம்....

உன்
செவ்விதழ்
மடித்து
மலரும்
புன்னகையால்
சிக்கனமின்றி
கொதித்தெழும்
ஆசைகள்
இலக்கில்லா
பீனிக்ஸ்
பறவைகளாய்...

உன்
தூண்டில்
பார்வைக்குள்
சிக்கி
செத்து
செத்து
உயிர்த்தெழும்
உணர்வுகளின்
அவஸ்தையால்
தினமும்
மரணக் கைதியாகி...

நீ
தந்துவிட்டகள்ந்த
எண்ணிக்கையில்லா
இதழ்வோர
இஸ்பரிசங்கள்....
துன்பமில்லா
இன்பந்தான்
ஒத்துக்கொண்டேன்...

கண் விழித்த
போது அதுவும்
கனாக்களாய்....

நவநாகரீக
உலகினில்
நவரசங்கள்
அத்தனையும்
அனாவசியம்!
நீ மட்டும்
எனக்கு
அதிசயம்!
உன்
காதல்தான்
என்றும்
எனக்கு
அவசியம்...

*—சுஜாஹ் முகைடீன், நிந்தவூர் – 18.*

## ஆட்சி

ஒரு சர்வாதிகாரி போல்
கைப்பற்றிக் கொண்டாய்
முரட்டுப் போர்வைக்குள்
துடிக்கும்
என் மிருதுவான
உள்ளத்தை.

அண்டவெளியெங்கும்
சஞ்சரிக்கும்
கற்பனைகளின்
சிறகொடித்தாய்
சுதந்திரம் களைந்து
சிறைப்பிடித்தாய்

ஒரு பறவையாய்
ஒரு தென்றலாய்
ஒரு மேகமாய்
அந்தரித்த என்
வாழ்க்கைச் சுவாசங்கள்
அடங்கிற்று
உன் ஒரே கண்
பார்வைக்குள்.

என் கனவுகளின் மூச்சுகளில்
கண்களின் வீச்சுகளில்
கடிவாளமிட்டாய்.


உன் நினைவு
நெஞ்சுறுத்தும் தகிப்பை
நெளிய வைக்கும்
அவஸ்தையை
வீசும் அனற் திரட்சியை
மிஞ்சிற்று.

கைகளில் விலங்கிட்டு
படுக்கையில் முட்பரப்பி
நெஞ்சில் ஆணி அறைந்து
கால்களைப் பிணைத்து
மூளையை அரித்து
அராஜகம் பண்ணிற்று
உன் கொடுங்கோன்மை.

ஆனாலும் -
உன் சர்வாதிகாரத்திலும்
உன்
கொடுங்கோன்மையிலும்
உன் அராஜகத்திலும்
எனக்குள்
ஒரு மகிழ்ச்சி பரவுகிறதே
ஒரு நிம்மதி நிறைகிறதே
அது ஏன் கண்மணி
நீ என்
காதலி என்பதாலா?


*—ஸபீர் ஹாபிஸ்.*

## சுயம்



என் சுயம்
இன்றும் செத்துவிடும்
நாளை உயிர் பெறும்.

அவள் வருவதெலாம்
என் சுயத்தை
கொல்வதற்காகத்தான்.



அவளின் வருகை
பிடிக்காத போதும்
புன்னகைத்தேன்.
இறைவா
என் சுயம்
வேர் விட்டு
கிளை பரப்பி,
நிழல் கொடுக்காதா
அவளுக்கும் சேர்த்து.

*—ஏ.எஸ்.ஷர்மிலா, அநுராதபுரம்.*

## காதல் தீயாய்!

கள்ளிக்காட்டு
இதிகாசம்
கேட்டாய் கொடுக்க
முடியவில்லை - சரி
மேத்தாவோடு
ஊர்வலம்
சரி போவோம்
என்றால் - நீ
ஒற்றை தீக்குச்சியாய்
உரச பார்க்கிறாய்....
அவட்டவெளியிலே
பற்றை
காடாய் நின்ற
என்னை
அக்கினி குச்சுகளை
என்னுள்ளே
அடைக்கலம்
வைத்துவிட்டாய்...நீ
என்னுள்ளே வைத்த
தீ
என்னையே எரித்து
கொண்டிருக்கிறது
காதல் தீயால்....

*—மணிவேல் ருத்ரா, சின்ன செல்வகந்தை.*

## ஏழையின் மடல்

உன் ஜன்னல் ஓரங்களில்
தொங்கியிருப்பது
மணிகளல்ல என் விழிகள்
அது எழுப்பும் ஒலிகள்
எந்தன் மானசீக மொழிகள்.

உந்தன் இமைக்கதவுகள்
அடிக்கடி ஹர்த்தால்
செய்து கொள்வதால்
நெஞ்சத்துள் அஞ்சல்
செய்யப்படாமலே
கிடக்கின்றது பல நினைவுகள்.

என் மனமாளிகைக்குள் நீ
கிரகப் பிரவேசம் செய்த
நாள் முதல்
என்னை நான்
தேடிக் கொண்டிருக்கிறேன்.

எந்தன் மார்பு தடவும்
எந்தன் பார்வை உமிழும்
பாசைக்குப் பரிசாக
அந்த மழை முத்துக்களை
பணி வைரங்களைப் பதித்து
வைத்திருக்கிறேன்.

ஏழையின் காதல்
ஏழையாகிவிடக்கூடாது...!

*—எஸ்.சளீம், மூதூர் – 01.*

## துரோகி

அண்ணன் பேச்சென்றால்
அத்தனையும் அமுதமென்பார்
விண்ணன் இவரெதிலும்
வேறெதிலும் நாட்டமில்லை
கண்ணல் குழல்போல
கானமழை பொழிந்திடுவார்
பண்ணான் நல்வினைகள்
படு துரோகி இவன்.

## விவேகம்

விற்பன்னர்கள் நிறைந்த நாடு
வீரர்கள் செறிந்த காலம்
கற்பனையில் அதிகம் கொண்ட
களம் பல கண்டநேரம்
விற்பனையில் அதிகம் கொண்டே
விவேகம் இழந்தேனோ.

## இம் மண்ணில்

வெண்புறாக்கள் வீதியிலே
வீரிட்டுத்தான் பறக்கின்றன
இன்புறா உள்ளங்கள்
எத்தனையோ இம்மண்ணில்.

## காத்து நிற்போம்

துன்னவர் வந்து நம்மை
துரத்தியே நாளும் சாட
என்னவர் இந்த மண்ணில்
என்ன பாவம் செய்தாரோ
அன்னவர் இழைக்கும் சூழ்ச்சி
அகிலமே அறியும் காணீர்
விண்ணவர் போற்ற வாழ்வோம்
விடுதலை காத்து நிற்போம்.

*—பொலிகை மறவன், திருகோணமலை.*

## காதல்

முதுகின் மேல் கல்லை
கட்டிக்கொண்டு
கிணற்றுக்குள் பாய்கின்றேன்
யாரோ தற்கொலை
செய்து கொண்டதாக கூறி
வேடிக்கை பார்ப்பவர்களுடன்
நானும் நிற்கிறேன்.

தலையைத் தண்டவாளத்துடன்
இறுகக் கட்டி
ரயில் வரும்வேளை
கண்களை இறுக
மூடிக்கொள்கிறேன்
சிதறிய மனிதத்துகளை
என் உறவினர்களுடன்
சேர்ந்து
நானும் பொறுக்கி
எடுக்கிறேன்.

இனிப்பு பண்டம் சேர்த்து
கிருமி நாசினி முழுவதும்
உட்கொண்ட நானோ
மோட்சரில் இருந்து
பாதி நித்திரையில்
எழும்பி வருகிறேன்.

அதி உயர்ந்த
மாடிக்கட்டத்தில்
இருந்து தலைகுப்புறக்
குதித்து
ஒரு ஓடும் பஸ்ஸில் இருந்து
இறங்கிப் போகிறேன்.

ஒரு புளிய மரக் கிளையில்
கயிறு சுருக்கிட்டு
தொங்கிப் பார்க்கிறேன்
கயிறு அறுந்து, மரம் சரிகிறது
நானோ பின்புற மண்ணை
தட்டி விட்டு
நடந்து செல்கிறேன்.

ஒரு யுத்தப் பிரதேசத்தில்
வருடக் கணக்காய்
நடந்து திரிகிறேன்
நான் மட்டும் மிஞ்சிப்
போகிறேன்.

இத்தனைக்கும்
என் உயிர் உன்னிடம்
இருப்பது தெரியாமல்
இன்னும் இன்னும்
இறப்பதற்கு முயற்சி
செய்கிறேன்.

*—உம்முஷல்மா பாறூக், அங்கமுகம – மாஹோ.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*உலக வலம் வரும் இணையங்களை எம்நாட்டு மற்றும் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் தமது உள்ளத்திலிருக்கும் உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துகிறார்கள் அந்த வகையில் இங்குள்ளவையும் தமது தாயக உறவுகளையும் தாங்கள் பட்ட துன்பங்களையும் மறக்கமுடியாமல் பல இளம் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வடித்த கவிதைகளின் சில துளிகள் இவ்வாரம் சிறப்புக் கவிதைகளுக்காக:*

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

### வாழ்க்கை

மீன் தொட்டிகள் அழகானவை
அதனுள் நீந்தும் தங்க மீன்
காண்பதற்குக் கொள்ளை அழகு

ஆனால்
திமிங்கலங்களுக்கு
மீனட தொட்டிகள் சரிப்பாடாது
அது சுதந்திரமாய்
நீலக் கடலில் நீளப்பாயும்
அயற்கை அழகோடு
கம்பீரமாய் நீந்தித் திரியும்.

சிலைகள் அழகானவை
செதுக்க செதுக்க அழகு கூடும்
செதுக்குவபன் கைகளில்
சிலிர்போடு பேசும்

ஆனால்
அந்த நீல மலைத் தொடரை
செதுக்குவதென்பது நடவாது
அது தானே நடைபோட்டு
நீண்டு வளர்ந்த நீல மலைகள்
இந்தச் சிலை அதன்
இயற்கை அழகின் முன்
காணாமல் போய்விடும்.

அந்த கூண்டு தங்கத்தால் ஆனது
அதனுள் அந்தக் கிளிக்கு
அத்தனை பராமரிப்பும் உண்டு.
இறகுகள் நீவிவிடப்படும்
பால்பழம் கொடுக்கபடும்
பன்னரில் குளிப்பாட்ட்ப்படும்
நாக்கை சுழற்றிப்
பேச்சு கற்றுத் தரப்படும்

ஆனால்.....
வேடந்தாங்கல் பறவை
சிறகின் சுதச்திரத்தை
அனுபவிக்கிறது
வானவெளியில் சிறகடிக்கிறது
நினைத்ததை உண்கிறது
நினைத்த இடம் பறக்கிறது
அதன் சுதந்திரம்
இந்தக் கூண்டுக்கிளக்கு வராது

ஒரு குரங்கைக் கண்டேன்
அழகழகாய் சட்டை மாட்டிக் கொண்டு
சிங்காரமாய்ச் சீவிக் கொண்டு
குச்சைப் பார்த்துக் குட்டிக்கரணம் போட்டது.
நிறைய சம்பாதிக்கிறது.

கைதட்டும் கூட்டம்
ஏராளம் ஏராளம் ஆனால்
அதன் தந்தை குரங்கு பற்றி
அதற்கு தெரியாமலேயே
போய் விட்டது.

குட்டைமரம் பார்த்திருப்பீர்கள்
ஜப்பானியர் கிள்ளிக் கிள்ளியே
ஒரு மாபெரும் மரத்தை
குள்ளமாக்கியிருப்பார்கள்
அதைப் பார்வையிட
உலகில் பல்லாயிரம் மக்கள்
அதைப் படைத்துவிட்ட
பெருமை ஆயுளுக்கும் போதும்

அந்த அரங்காட்சியகத்தில்
அணிவகுத்த கும்பலிடம்
காட்டு மரங்களும் இதற்கும்
என்ன வித்தியாசம் என்பதுமட்டும்
மறைக்கப்பட்டு
மறக்கடிக்கப்பட்டுவிடும்.

*கவிஞர் புகாரி*

### நிலவுகள் எப்போதும் கறுப்பு


தேசத்தின்
தொப்புள் கொடி
அறுத்து
காலத்தின்
கொடுவிரல்
தூக்கி
எறிந்தபோது
விழுந்த இம்
மண்ணில்
நிலவுகள்
எப்போதும் கறுப்பு
சிங்காரத்
தோட்டம்
விரியன் பாம்புகளி
ன்கோட்டையாய்க்
கிடந்தது.
கச்சையில்
இருந்து கண்ணீர்
வரை
மேல்நாட்டு
ஒப்பீடுகள்.
தொடுகை முதல்
தொடை தெரிதல்
வரை
விசித்திர
நியாயங்கள்;
பசித்த போது
ஆக்கிப்
போடுதலும்
காமம் கசிந்த
போது
அவிழ்த்துப்
போடுதலும்
எங்கேயும்
எவரோடும்
நியாயமாகக்
கொள்ளலாம்
என்ற புதிய
விஞ்ஞாபனம்
ஓஸ மொழிக்
குழப்பமற்ற
இந்த மனிதர்கள்
இன்னமும் ஏன்
பாபேல் கோபுர
வேலையை
முடித்துவிடவில்லை
என்பதற்கு
கடவுளே!
ஆபிரகாமின்
மனசாட்சியை
உறுத்திய
உனது
ஒன்பதாவது
கட்டளையை
மறு பரிசீலனை
செய்யப்பார்.

*சாம்*

### தேய்பிறைக் கோலம்!


அற்றைத் திங்கள்
அவ்வெண் ணிலவில்
முற்றுப் பெறாத
தேனாறு மீது,
சுற்றி வந்தோம்
சொர்க்கப் படகில்!
வளர்பிறைக் காலம்!
வசந்த காலம்!
எமக்குள் முளைத்த
ஒற்றுமை வேர்களைக்
கற்றுக் கொண்டு
கதைகள் பேசினோம்!
வெண்திரைப் படம்
பார்த்து
கண்ணால் கவி பாடி,
மண்ணில் கால்
படாது,
தாகம் மிகுந்து
மோகம் தெப்பத்தில்
மூழ்கினோம்!
விதியின் ஆசியால்
முடிந்த தெங்கள்,
அதிசயத் திருமணம்!
தேனிலவில்
தடம்வைத்து,
சொர்க்க புரியில்
உச்சயில் ஏறிய பின்
தர்க்க புரியில்
இறங்கினோம்!
கரு நிலவில் நிழல்
காலைச் சுற்றிக்
கொண்டது!
எமக்குள் தீ மூட்டும்
வேற்றுமைத்
தேனீக்கள்
சீறிக் கொண்டு
போரிடக் கிளம்பின
சேயிழைக்கும் காயம்!
நாயகனுக்கும் காயம்!
தேய்பிறைக் கோலம்!
முறிந்த தெங்கள்
பாலம்!
இவற்றைத் திங்கள்
இவ்வெண் ணிலவில்
முற்றுப் புள்ளி
உதயம்!
அத்தமிக்கும்
கருவானில்
தொத்தி வரும்
புதுநிலவு!

*சி.ஜெயபாரதன், கனடா*



## குறுகிய கால யுத்தம்

யுத்தங்களில் கூட குறுகிய காலம் நீண்ட காலமென வகைப்படுத்திவிட்டார்கள். மிகக் குறுகிய காலம் நடந்த யுத்தம் அமெரிக்காவுக்கும், தன்சானியாவுக்குமிடையிலான யுத்தமாகும். இவ் யுத்தம் காலை 9.45 மணிக்கு ஆரம்பமாகி வெறும் 45 நிமிடங்களே நடைபெற்றதாம்.



## மிகக் கூடிய கால யுத்தம்

மிகக் கூடிய காலம் நடைபெற்ற யுத்தமாக ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான யுத்தம் கருதப்பட்டுவருகிறது. அண்ணளவாக இது 30 வருடங்கள் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இவ் யுத்தமானது 1618இல் தொடங்கி 1648இல் முடிவடைந்ததாம். பல நாடுகள் பங்குபற்றிய இவ் யுத்தத்தின் முடிவு பூச்சியமே.



## மிகப் பழைமையான விமானப்படை

இங்கிலாந்தின் ரோயல் விமானப்படை எனப்படும் அதி நவீன விமானங்களைக் கொண்ட RAF விமானப்படையே உலகில் அதி பழமையான விமானப்படையாக கருதப்படுகிறது. 1878ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்விமானப்படை இன்றும் செயற்பாட்டில் உள்ளதாம். சுனாமி நிவாரணத்தின் போதுகூட இப்படை இலங்கைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

# தூக்கத்தைக் கெடுக்கும் உணவுப் பழக்கம்

மனித வாழ்க்கையில் தூக்கம் என்பது அத்தியாவசியம். ஒருவரின் தூக்கம் அவரது வேலையில் பிரதிபலிக்கிறது.

குறைவான அல்லது இடையூறான தூக்கம் என்றால் அது வேலையைப் பாதிப் படையச் செய்யலாம். அல்லது மற்றவர் களுடன் நீங்கள் பேசும் உரையாடலானது தூக்கமின்மையால் பாதிப்புக்குள்ளாவதோடு, கவனத்தையும் சிதறச் செய்யும்.

தூக்கத்தின் போது உடலுக்கும், மூளைக்கும் ஓய்வு கிடைக்கிறது. இதன் காரணமாகவே தூங்கி எழுந்ததும் காலையில் ப்ரஷ் ஆகவும், களைப்பின்றி கண்காணிப்புடனும் இருக்கிறோம்.

தூக்கத்தின் தேவை என்பது ஒருவருக் கொருவர் வேறுபடுகிறது. சராசரியாக சுமார் 7 மணி முதல் 8 மணி நேரம் வரை தூக்கம் அவசியமாகிறது.

நீங்கள் உரிய அளவு தூக்கத்தை மேற்கொண்டீர்களா என்பதை அடுத்த நாள் உங்களின் வேலை மற்றும் நீங்கள் உணர்வதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

அதிக அளவு தூக்கமும், மிகவும் குறைவான அளவு தூக்கமும் மிகவும் களைப்பையும், எரிச்சலையும் தரும். தூக்கத்தின் போதுதான் வளர்ச்சிக்கான ஹார்மோன் சுரக்கும் என்பதனால், குழந் தைகள், சிறியவர்கள், டீன் - ஏஜ் வயதுடை யோருக்கு பெரியவர்களைக் காட்டிலும் அதிக நேரம் தூக்கம் தேவைப்படும்.

வயதானவர்களுக்கு அதிக நேரம் தூக்கம் தேவையில்லை என்பது போன்ற தோற்றத்தை உருவாக்கி உள்ளனர்.

வயது வந்த பெரியவர்களுக்கு நிலையான நீடித்த தூக்கம் என்றால், வயது



முதிர்ந்தோரின் தூக்கத்தின் அளவு மாறுபடு கிறது. வயதானவர்களைப் பொறுத்தவரை இரவில் அடிக்கடி விழித்துக் கொள்ளும் வழக்கம் கொண்டவர்களாக உள்ளனர்.

பொதுவாக தூக்கம் உடலில் ஏற்படுவதற்கான சரியான காரணங்கள் என்று எதுவும் அறிவியல்பூர்வமாக தெளிவுபடுத்தப் படவில்லை.

நம் உடலில் கடிகாரம் போன்று சுழற்சி முறையின் அடிப்படையிலேயே தூக்கமும் ஏற்படுகிறது.

உடலில் நிகழும் சில இரசாயன மாற்றங் களாலும் தூக்கம் தூண்டப்படுகிறது.மேலும் நாம் உண்ணும் உணவும் ஒரு முக்கிய காரணமாகிறது.



தூக்கத்தைப் பாதிக்கும் உணவு முறைகளும் வகைகளும்

தூங்கச் செல்லும் முன்பாக லேசான ஸ்நாக்ஸ் எடுத்துக் கொள்வதால் அமைதியான தூக்கம் ஏற்படும். அதே நேரத்தில் அதிக அளவு உணவு சாப் பிடும் பட்சத்தில் அது அஜீரணப் பிரச் சினையாகி தூக்கத்தைப் பாதிக்கிறது.

குறைந்த அளவிலான ஆல் கஹால் எடுத்துக் கொள்வதால் ஆழ்ந்த உறக்கம் ஏற்படும். ஆனால் அதுவே பழக்கமாகி விடும் பட்சத்தில் தூக்கத்தைக் கெடுக்கும் பிரச்சினை யாகி விடுவதும் உண்டு.

உங்கள் உடலில் ஆல்கஹால், தண் ணீரை இழக்கச் செய்யும் என்பதால் அடுத்த நாள் முழுவதும் உடல் களைப்படைய காரண மாகிறது.

எந்த உணவிலும் காபீன் இருந்தால் அது தூக்கத்தைப் பாதிக்கிறது. என்றாலும் இது அனைவருக்கும் பொருந்துவதில்லை. காபீன் எடுத்துக் கொள்வது உங்களுக்கு ஒவ்வாது என்றால் அவற்றை வயது முதிர்ந்தோர் தவிர்க்கலாம்.

அதிக கொழுப்பு கொண்ட உணவுகளை மாலையிலோ அல்லது இரவிலோ நீங்கள் சாப்பிட்டால், ஜீரணம் பாதிப்புக்குள்ளாகி இருதயத்திற்கும் பாதிப்பு ஏற்படும். உங்களின் தூக்கமும் தடைப்படலாம்.

இருதய நோய் அல்லது அமில சுரப்பு உள்ளவர்கள் இரவில் வெகுநேரமாகி உண்பதைத் தவிருங்கள். வெறும் வயிற்றுடன் இருந்து அதிகமாகச் சாப்பிட் டாலோ அல்லது நன்றாகச் சாப்பிட்ட பின்னரும் இரவில் மீண்டும் சாப்பிட்டாலோ தூக்கத்தின் போது பாதிப்பைத் தரும்.

இரவில் சாப்பிட்ட பின்னர் திரவ உணவு வகைகளை அருந்துவதைத் தவிர்க்கவும். சாப்பிட்ட பின் திரவப் பொருட்களை எடுத்துக் கொண்டால் அது சிறுநீருக்காக உங்களை இரவில் எழுந்திருக்கச் செய்யும்.

அமினோ அமிலம் அடங்கிய பால் மற்றும் சிறிதளவு தேன் போன்றவை உங் களின் தூக்கத்தை மேலும் ஊக்கப்படுத்தும். இயற்கையான தூக்கத்தைக் கட்டுப்படுத் தாதீர்.

பொதுவாக வீட்டுப் பிரச்சினைகளையோ, அலுவலகப் பிரச்சினைகளையோ மனதில் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்காதீர்கள். எது நடந்தாலும் நாம தூங்காம இருந்து என்ன ஆகப்போகிறது?


நடப்பவை நன்மைக்கே என்று நினைத்து குறித்த நேரத்தில் தூங்குங்கள். குறித்த நேரத்தில் எழுந்து விடுங்கள்.



# லேடிஸ் ஸ்பெஷல்

## ஆப்பிள் எனும் அருமருந்து


**ஆப்பிள்களை** தினமும் சாப்பிட்டு வருவது நல்லது. நோய்க் காலங்களில் ஆப் பிள்கள் சாப்பிடுபவர்களையும், மருத்துவர்கள் ஆப்பிள் கொடுங்கள் என்று கூறுவதையும் நாம் பார்த்திருக்கிறோம்.



ஆனால், குறிப்பாக அதன் மருத்துவப் பயன்கள் என்ன என்பதோ, அதன் ஒரு சில குறைவான தீமைகள் பற்றியோ அறிந்த தில்லை என்றே தோன்றுகிறது.

கலோரிகளில் குறைவானது ஆப்பிள். மேலும் கரைபடக்கூடிய நார்ச்சத்துக்கள் ஆப்பிள்களில் அதிகம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனால் கொலஸ்ட்ரோலைக் குறைக்க ஆப்பிள் பெரிதும் உதவுகிறது.

ஆப்பிள்களில் ஃபைட்டோ கெமிக்கல்ஸ் அதிகம் காணப்படுகிறது. அதாவது குறிப்பாக குவர்செடின் அதிகமாக இருப்பதால், இருதய நோயையும், புற்றுநோயையும் தடுக் கிறது.



ஊட்டச்சத்துகள், பிற பழவகைகளை ஒப்பிடும்போது ஆப்பிளில் குறைவு. அத்துடன் ஆப்பிளின் தோலில் பூச்சிக்கொல்லி மருந்துகளின் எச்ச சொச்சங்கள் இருக்கும்.

ஒரு புதிய ஆப்பிள் அருமையான ஆரோக்கிய உணவு. 140 கிராம் எடை கொண்ட ஒரு ஆப்பிளில் 90 கலோரிகளே உள்ளன. ஆப்பிளை அப்படியே எடுத்துக் கொள்வதும் உண்டு. சமைத்து உண்பதும் உண்டு. நறுக்கி வேகவைத்தும் உண்ணலாம். வறுத்து மொறுமொறுவென்றும் உண்ணலாம்.

ஆப்பிள் கொண்டு செய்யப்படும் பலா காரம், ஆப்பிள் சாலட்கள், ஆப்பிள் சாறு போன்றவற்றையும் உண்ணலாம். ஆப்பிள் சாற்றை சூடேற்றி பிறகு குளிரவைத்து தினமும் அருந்தி வரலாம். ஆப்பிள் சாறு அருந்தும் பழக்கம் பெரும்பாலும் மேலை நாடுகளில் இருந்து வருகிறது. என்றாலும் தோலில் பூச்சிக்கொல்லி படலங்கள் இருக்கும் என்பதால் தோலை நீக்கிவிடுவது நல்லது.

ஒரு நாளைக்கு ஒரு ஆப்பிள் உண்டால் அது மருத்துவர் தேவையை அகற்றும் என்பது முதுமொழி. ஆனால் ஒரு ஆப்பிளுக்கும் மேல் தேவைப்படும் என்பதே நவீன ஆய்வு. ஒரு சராசரி ஆப்பிள் 8 மி.லி.கிராம் வைட்டமின் சி மட்டுமே கொடுக்கும். இது உடல் ஆரோக்கி யத்திற்குப் போதாது. ஆனால் ஆப்பிளின் ஊட்டச்சத்து வேறுவிதமானது. இதில் பெக்டின் அதிக அளவு இருக்கிறது. கரைபடக்கூடிய இந்த நார்ச்சத்து, இரத்த நாளங்களை சிதைக்கும். கொலஸ்ட்ராலைக் குறைப்பதில் உதவுகிறது.

ஆனால் ஆப்பிளின் சிறப்பம்சம் என்ன வெனில், இதில் உள்ள வைட்டமின்களின் வகைகள் குவர்செடின், L.D.L. கொலஸ்ட்ரால் ஆக்ஸீகரணமயமாகும் அபாயத்திலிருந்து தடுக்கிறது.

தினம் ஒன்றரை டம்ளர் ஆப்பிள் ஜூஸ் அருந்தினால் L.D.L. கொலஸ்ட்ரால் ஆக்ஷீ கரணமாவது பெரிதும் குறைக்கப்படும்.

மேலும் நாளொன்றுக்கு 100 கிராம் ஆப்பிளை தோலுடன் சாப்பிட்டு வருவதால் 1,500 மி.லி.கிராம் வைட்டமின் சி அளிப்பதற்கு சமமான கான்சர் எதிர்ப்பு சக் தியையும் வைட் டமின் சத்தையும் அளிப்பதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

ஆப்பிள் சாஸ் சுலபமாக ஜீரணமாகக் கூடியதால் குழந்தைகளுக்கு இதைச் சிறந்த உணவாக மருத்துவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். இயற்கையின் டூத் பிரஷ் ஆப் பிள்கள் என்று நீண்டகாலமாக வர்ணிக்கப் படுகின்றன. இவை உடனே பற்களை சுத்தம் செய்யும் என்று எண்ண வேண்டாம். பற்களின் ஆரோக்கியத்தை ஆப்பிள்கள் பாதுகாக்கின்றன.

ஆப்பிள் கடித்தல் மற்றும் மெல்லுவதால் ஈறுகள் பலமடைகின்றன. அதன் இனிப்பு உமிழ்நீரை அதிகம் சுரக்கச் செய்கிறது. வாயில் பாக்டீரியா அளவுகளை குறைப்பதன் மூலம் பற்சிதைவையும் தடுக்கிறது.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

14

பெயர் : ..............................

முகவரி : ..............................
..............................
..............................

தே-அ- அட்டை இல : ..............................

கையொப்பம் : ..............................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
21.03.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போது மானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 14**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 12
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

**எஸ்.வரதராஜன்,**
**மணிமேகலை இல்லம், வந்தாறுமூலை.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது -ஷோபா-*

## தேங்காய்ப்பால் போண்டா

*தேவையான பொருட்கள்:*

உளுந்தம் பருப்பு - 1 கோப்பை
அரிசி மா - 1 தேக்கரண்டி
உப்பு - தேவைக்கேற்ப
எண்ணெய் - சிறிதளவு

*செய்முறை:-*

ஒரு மூடி தேங்காயைத் துருவி, பிழிந்து பாலெடுத்துக் கொள்ளவும். சர்க்கரை தேவைக்கேற்ப, ஏலக்காய் பொடி செய்து போட்டு கலந்து வைத்துக்கொள்ளவும். உளுந்தம் பருப்பை ஊறவைத்து அரைமணி நேரம் கழித்து கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். அத்துடன் உப்புக் கலந்து எண்ணெயில், பெரிய நெல்லிக்காய் அளவு உருண்டைகளாக உருட்டி எண்ணெயில் போட்டு பொன்னிறமாகப் பொரித்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

இவற்றை தேங்காய்ப்பாலில் போட்டு சிறிது நேரம் ஊறியவுடன் பரிமாறலாம்.

# ஒரு தாயின் மகள் 71

**ஜோ**க்கைக் கேட்டுச் சிரிக்கலாம் கதைப் புத்தகம் படிக்கலாம். படித்ததைப் பிறரிடம் சொல்லலாம்'' என்று விவரித்துக் கொண்டே போனாள் பேஜ்.

''ஒரு மாதம் முன்பு வரை ஆலிஸன் பிழைக்கவே மாட்டாள் என்று எண்ணியிருந்தோம். இரண்டு மூன்று வருடத்தில் இந்த அளவுக்கு நார்மலாகி விடுவாள் என்று டாக்டர் சொல்கிறாரே! எவ்வளவு பெரிய விஷயம்!'' என்று அவள் கூறியபோது -

''அப்பப்பா! உன் முகத்தில் இத்தனை சந்தோஷத்தை இப்போதுதான் பார்க்கிறேன்'' என்று தாரென்ஸன் சொல்ல, ஆம் என்று பேஜ் ஒப்புக் கொண்டாள்.

''எனக்கு என்ன குறை? உலகத்தில் ஒரு பெண்ணுக்கு என்னவெல்லாம் வேண்டுமோ அவ்வளவும் கிடைத்திருக்கிறது. இரண்டு அற்புதமான குழந்தைகள். என் மீது கொள்ளைப் பிரியம் கொண்ட ஒரு அற்புதமான மனிதர். அவருடைய அற்புதமான மூன்று குழந்தைகள்...''

''வீட்டில் நிறைய இடம் இருக்கிறது. இன்னும் கூடப் பெற்றுக் கொள்ளலாம்'' என்றான் தாரென்ஸன்.

மேலும் இரண்டு வாரமானதும் ஆலிஸனால் எழுந்து, பிறர் கையைப் பிடித்துக் கொண்டு நடக்க முடிந்தது. பேஜ் வந்ததும், 'ஹாய் அம்மா! எப்படி இருக்கிறாய்?' என்று கேட்கலானாள். க்ளோவையும் ஆண்டியையும் அடிக்கடி வரச் சொல்லிக் கொண்டிருந்தாள். தாங்கள் சென்றிருந்த வெளியூரைப் பற்றி ஆண்டி சொன்னபோது, 'ஐய! அந்த இடமா? அது ரொம்ப நாற்றம்!' என்று சிரித்தாள்.

''உனக்குக் குணமாகட்டும். நல்ல வாசனையான ஊருக்கு அழைத்துப் போகிறேன்'' என்று சொல்லித் தாரென்ஸன் அவளைப் பரிவோடு அணைத்துக் கொண்டான்.

விபத்து நடந்ததால் ஏற்பட்ட காயம் எதுவுமே ஆலிஸனிடம் இப்போது தெரியவில்லை. எல்லாம் ஆறிவிட்டது. உண்மையான சேதம் உள்ளுக்குள்... அதுவும் விரைவில் ஆறிவிடும்.

அந்த வாரத்தின் இறுதியில் ஆஸ்பத்திரியில் நர்ஸ்களின் பொறுப்பில் ஆலிஸனை ஒப்படைத்துவிட்டு, விடுமுறைக்காக வெளியூர் சென்றார்கள் தாரென்ஸனும், பேஜும், க்ளோவும், ஆண்டியும், பிஜானும்.

தங்கியிருந்த வீட்டில் குழந்தைகள் சமையலைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, தாரென்ஸனுடன் வெளியே சென்றாள் பேஜ்.


அஸ்தமிக்கும் சமயம் ஏரிக்கரையில் உட்கார்ந்திருந்தபோது, ''வாழ்க்கை எப்படியெல்லாம் மாறுகிறது! ஆச்சரியமாயில்லை?'' என்றாள் பேஜ். ''ஐந்து மாதங்களுக்கு முன் என் வாழ்க்கை வேறே எங்கேயோ, வேறே எந்த விதமாகவோ இருந்தது. இப்போது பாருங்கள். என்னவெல்லாமோ கஷ்டங்கள் அனுபவித்து விட்டு இங்கே வந்து சேர்ந்திருக்கிறேன்.''

ஆனால் முன்னைக் காட்டிலும் செழிப்பான, பசுமையான வாழ்க்கையையே அடைந்திருக்கிறோம் என்று இருவருக்குமே தெரிந்தது. அதற்கு என்ன விலையெல்லாம் கொடுக்கும்படி நேர்ந்து விட்டது!

''விபத்து நேர்ந்த அந்த ராத்திரியை நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது'' என்றான் தாரென்ஸன். ''ஆஸ்பத்திரியிலிருந்து கூப்பிட்டதும் ஓடி வந்தேன் ஆஸ்பத்திரிக்கு. அங்கே பார்த்தால் நீ! க்ளோவும் ஆலிஸனும் உன்னோடு வெளியே போவதாகச் சொல்லியிருக்க, ஆஸ்பத்திரியில் நீ இருக்கிறாய்! அந்தச் சமயம் எனக்கு

**சென்ற வாரம்**

**டாக்டர் அவளுக்கு முற்றாக குணமடைய சில நாட்கள் தேவை என்று கூறியிருந்தார். எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தும் ஆற்றல் அவளுக்கு குறித்த சமயத்தில் இல்லை என்றார். பிராடுக்கு தகவல் சொன்னதும் ஓடி வந்து பார்த்தவன் பெரும் ஏமாற்றம் அடைந்தான். ஆலிஸன் அவனை குழப்பத்துடனேயே பார்த்துக் கொண்டிருந்தாள்......**



ஏற்பட்ட அதிர்ச்சி...!''

''எனக்கும் எப்படிப்பட்ட அதிர்ச்சி! காரை ஓட்டிச் சென்றவர் இறந்துவிட்டார் என்று சொன்னார்கள். அது நீங்கள்தான் என்று நினைத்திருந்தேன். ஆனால் ஆஸ்பத்திரியில் நீங்கள்பாட்டுக்குப் பத்திரமாக வருகிறீர்கள்! கடவுளே!

எழுதியது: **டேனியல் ஸ்டீல்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**


அன்றிரவு பதினொன்றரை மணிக்கு ஆலிஸன் இன்னும் வரவில்லையே, வரவில்லையே என்று நான் தவித்த தவிப்பு!'' என்றாள் பேஜ்.

அதற்கு மேல் அவர்கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. தாரென்ஸன் குனிந்து அவளை முத்தமிட்டான். பேஜ் அவன் தோள் மீது சாய்ந்துகொண்டாள். 'அபாயகரமான சுழல்களைக் கடந்து எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்! எனக்கு இவரும் இவருக்கு நானும் கிடைத்தது எத்தனை பெரிய அதிர்ஷ்டம்!' என்று நினைக்க நினைக்க, அவள் நெஞ்சம் நெகிழ்ச்சியடைந்தது.

(முற்றும்)




# மதுபோதையில் செய்த வேலை



**பஸ்சுக்கு** காத்திருந்த மதுபான விடுதி பெண்ணை, மெர்சிடிஸ் காரில் ஏற்றிக்கொண்டு, காரிலேயே நள்ளிரவு முழுக்க கற்பழித்தும், தாக்கியும் மதுபான மயக்கத்தில் வெறித்தனமாக நடந்து கொண்ட கோடீஸ்வர மில் அதிபர் மகன், இப்போது கம்பி எண்ணுகிறார்.

மும்பையில் ஸ்ரீராம் மில்ஸ் என்பது பிரபலமான மில். அம்புஜ் காஸ்லிவால். அவர் மகன் அபிஷேக் காஸ்லிவால். வயது 27. வொர்லி பகுதியில் பெட்டார் ரோட்டில் இவர் பங்களா உள்ளது. லோயர் பரேல் பகுதியில் மில் உள்ளது. பிரமாண்ட வளாகத்தைக் கொண்டது இந்த மில்.

அபிஷேக் தினமும் இரவானால், மதுபான விடுதிக்குப் போய்விட்டு, நள்ளிரவு தாண்டிய நேரத்தில் தான் வீடு திரும்புவார். அப்படித்தான் ஒரு வெள்ளியன்று நள்ளிரவில் மதுபான விடுதியில் மது குடித்துவிட்டு, அங்கிருந்து தன் மெர்சிடிஸ் காரில் கிளம்பியுள்ளார்.

கொலாபா பகுதியில் உள்ள அந்த மதுபான விடுதியில் பணிப்பெண்ணாக வேலை செய்யும் 52 வயதான பெண் மீது அபிஷேக்குக்கு ஒரு ஈர்ப்பு உண்டு. அன்று நள்ளிரவு நெருங்கிய நேரத்தில் ரீகல் சினிமா தியேட்டர் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த அந்தப் பெண்ணுக்கு தன் காரில் லிப்ட் கொடுத்தார். முதலில் ஏற மறுத்த அந்தப் பெண், அபிஷேக்கின் வற்புறுத்தலால் காரில் ஏறினார்.

அந்தப் பெண்ணை மும்பை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இறக்கி விட வேண்டும். ஆனால், அபிஷேக்கோ, தன் காரை நேராக மில்லுக்கு விட்டார். அங்கு மில் வளாகத்தில் ஒரு ஒதுக்குப்புறத்தில் காரை நிறுத்தினார். அங்கு அந்தப் பெண்ணை, தன்னை விட கிட்டத்தட்ட இரு மடங்கு வயதானவர் என்றும் கூட பார்க்காமல், திடீர் என்று மிரட்டி தவறாக நடக்க முயன்றார்.

காலையில் ஏழு மணிக்குத் தான் அவர் அந்தப் பெண்ணை ரீகல் தியேட்டர் முன் பஸ் நிறுத்தத்தில் விட்டுச் சென்றார். அந்தப் பெண் நேரடியாக வொர்லி பொலிஸ் நிலையத்துக்கு சென்று விஷயத்தைச் சொல்லி கதறினார். அவர் உடல் முழுக்க நகக்கீறல்கள், இரத்தக் காயங்கள் இருந்தன. அந்தப் பெண்ணை பொலிஸார், உடனே நாக்படா பகுதியில் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அவர் பலமுறை கற்பழிக்கப்பட்டது தெரியவந்தது. அந்தப் பெண் எழுத்துமூலம் வாக்குமூலம் தந்தார். ''வழக்கமாக நான் வேலை பார்க்கும் மது பாரில் தான் அவர் மது குடிப்பார். அதனால், என்னை பஸ் நிறுத்தத்தில் பார்த்து காரில் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் விடுவதாகக் கூறினார். வேண்டாம், பஸ் வந்து விடும் என்றேன். ஆனால், அவர் விடவில்லை. 'என்ன ஆன்டீ, நான் சென்ட்ரலில் விடுகிறேன்' என்று வலுக்கட்டாயமாக என்னை காரில் ஏற்றி அழைத்துச்சென்றார். ஆனால், அவர் கார் மில்லுக்கு நுழைந்ததும் தான் பயந்தேன். அதற்கேற்ப அவர் என்னை தாக்கியதில் மயக்கமடைந்தேன். அப்புறம்தான் தெரிந்தது அவர் என்னை கற்பழித்துவிட்டார் என்று. பல முறை என்னை 'கொன்று விடுவேன்' என்று கூறி கற்பழித்தார்'' என்று வாக்குமூலம் தந்தார் அந்த பெண்.

இதைத்தொடர்ந்து பெட்டார் ரோடு பங்களாவில் தூங்கிக் கொண்டிருந்த அபிஷேக்கை வொர்லி பொலிஸார் கைது செய்து, சிறையில் அடைத்தனர். அவரை டி.என்.ஏ.டெஸ்டுக்கு அழைத்துச்செல்ல முடிவு செய்துள்ளனர். இந்தச் சம்பவம் மும்பையில், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கருணை தந்த விருது

**ஹாலிவுட்** அழகி ஏஞ்சலீனா ஜோலி நடிப்பில் மட்டுமல்ல மனிதாபிமானத்திலும் தனக்கு நிகர் தான்தான் என்பதை நிரூபித்து இருக்கிறார். இவருக்கு ஐக்கிய





நாடுகள் சபையின் அசோசியேஷன் மூலம் (அமெரிக்கா) மிக உயரிய விருதான ''மனிதாபிமானம் மிக்கவர்'' எனும் விருது கிடைத்துள்ளது. நடிகை ஏஞ்சலீனா ஜோலி உலக அளவில் எத்தனையோ அனாதைகள் விடுதிகளில் ஐ.நா.சபையின் குட்வில் அம்பாஸிடராகச் சென்று பார்வையிட்டு இருக்கிறார். இவர் இதியோப்பியாவில் இருந்து பிறந்து சில மாதங்களே ஆன குழந்தை 'ஜஹரா'வை தத்தெடுத்து வளர்த்து வருகிறார். தற்போது இரண்டு குழந்தைகளைத் தத்தெடுத்து பராமரித்து வரும் ஏஞ்சலீனா மூன்றாவது குழந்தையையும் தத்தெடுக்க தன் மனம் ஆவலாக இருப்பதாகச் சொல்கிறார். சமீபத்தில் மன்ஹட்டனில் நடைபெற்ற 'வோல்டு வைட் அற்பன் பவுன்டேஷன் பெனிபிட்' நிகழ்ச்சியில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

உலகம் முழுவதிலும் உள்ள அனாதைகளுக்கு உதவி செய்ய தன்னால் இயன்றவரை பாடுபடுவேன் என்கிறார் இவர்.

ஒருவருக்கு மனிதாபிமானம் தான் உண்மையான அழகு என சொல்லும் ஏஞ்சலீனா ஜோலிக்கு இந்த விருது கிடைத்தது மிகவும் பொருத்தமானது எனப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

# சுவிற்சர்லாந்தின் சமஷ்டி முறைமை





### சமஷ்டி அரசாங்கம் அல்லது நிறைவேற்றமைப்பு

பகிரப்பட்ட ஆட்சியின் மற்றோர் இயல்பு சமஷ்டி அரசாங்கம் அல்லது நிறைவேற்று அமைப்பு கூட்டாட்சி சபை, 7 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவாகும். ஒவ்வொரு உறுப்பினரும் சமஷ்டிப் பாராளுமன்றத்தின் (தேசிய சபை) இரண்டு சபைகளினாலும் தெரிவு செய்யப்படுகிறார்கள். எனவே, அவர்கள், பெரும்பாலான கோட்டங்களினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் நிறைவேற்றுத் துறையினர் மாற்றப்பட முடியாது. அதனுடைய தீர்மானங்கள் யாவையும் பற்றிக் கருத்து ஒருமைப்பாடு எட்டப்படும். தலைவருக்கு உச்ச அதிகாரம் எதுவும் இல்லை. நிறைவேற்றுத் துறையின் தலைமைத்துவம் வருடாந்த அடிப்படைச் சுழற்சி முறையில் இடம்பெறும். நிறைவேற்றுத் துறையின் ஒவ்வொரு உறுப்பினரும், சமஷ்டித் திணைக்களம் ஒன்றின் தலைமைத்துவத்தை வகிப்பர்.

சமஷ்டி நிறைவேற்றுத் துறை வெளிநாட்டுக் கொள்கையைச் செயற்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ளது. இது ஏறத்தாழ சகல சட்டவாக்கங்களையும் தொடக்கி வைக்கும் மூல ஊற்றாகவும் உள்ளது. இரண்டாம் நிலைச் சட்டவாக்கத்தையும் (பிரமாணங்கள்) இது மேற்கொள்கின்றது. இந்த இரண்டாம் நிலைச் சட்டங்கள், பரந்த விதத்தில் உருவாக்கப்படும் அதிகாரச் சட்டங்களை விட மிகவும் குறிப்பானவையாகும். இப் பிரமாணங்களே பெரும்பாலும், பின்னர் கோட்டங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

செனட்டினூடாக, கோட்டங்கள், சமஷ்டி அரசுக் களின் சபையினூடாக, அங்கத்தவர்களுக்கு வாக்களிப்பதைத் தவிரச் சட்டவாக்கத்தில் பங்குபற்றுகின்றன வென்றால், அவை சமஷ்டி அரசாங்கத்துடன் (அல்லது நிறைவேற்றுத் துறையுடன்) நேரடியாகத் தொடர்புற்றவை அல்ல. சட்டத்தினாலன்றி, சம்பிரதாயத்தினால், பிரதான நான்கு அரசியற் கட்சிகளும் இச்சபையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன. மூன்று முக்கியமான மொழிக் குழுக்களினதும் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்து வதற்கும் முயற்சிகள் உண்டு. இம்முயற்சிகள் பல்வேறு கோட்டங்களிலும் இதை செய்ய முடியாதென்பது வெளிப்படை. பால்நிலை அடிப்படையிலும் செய்யப் படுகின்றன. கருத்தொருமைப்பாட்டு ஜனநாயகம் என்ற இயல்பு, உறுதிப்பாட்டிற்கு ஓர் ஊற்றாக அமைந்துள்ளது. எனவே,



கட்சிகள் இயங்கிச் செயற்பட சம்மதிக்கின்றன. இச்சம்மதம், மற்றொரு அரசியல் அல்லது மொழி இணைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களை ஆதரித்தல் என்று பொருள்படும். ஏனெனில், சட்டவாக்கம் தொடர்பான தொடக்கி வைக்கும் பணிகள், பரந்த அரசியல் ஆதரவைக் கொண்டிருக்காவிட்டால், அவை, அபிப்பிராய வாக்கெடுப்பினூடாக இது பின்னர் ஆராயப்படுகின்றது) அல்லது அரசுக்கள் சபையினால் (செனட்) நிராகரிக்கப் படும் வாய்ப்புகள் உண்டென்பதை அவை விளங்கிக் கொள்கின்றன.

வேறு விதமாகக் கூறினால், அரசியல் செயலிழப் பைத் தவிர்க்க வேண்டுமேயானால், சமஷ்டி நிறைவேற்றத் துறையில், ஆர்வங்கள் பரந்த விதத்தில் பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் அத்தியாவசியமாகும்.

### சமச்சீரற்ற தன்மைகள்


அரசியல் யாப்பு, தன்னளவில் சமச்சீரற்ற ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பதில்லை. எனினும், தமது சொந்த நிறுவனங்களை வடிவமைப்பதில், கோட்டங்கள் அனுபவிக்கும் தன்னாட்சி, தமது சொந்தத் தகுதிகளுள், அவை கைக்கொள்ளக்கூடிய சட்டங்கள், சமஷ்டிச் சட்டங்களை அவை நடைமுறைப்படுத்தக் கூடிய வழி என்பன, ஓரளவு வித்தியாசமான அரசியல் முறைமைகள், பொதுக் கொள்கைகள் என்பவற்றிற்கு வழிவகுக்கின்றன.

### நேரடி ஜனநாயகத்திற்கான நிறுவனங்கள்

குறிப்பான அரசியல் யாப்புப் பிரேரணைகள் அல்லது சட்டவாக்கப் பிரேரணைகள் பற்றியும் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காகச் செலவு செய்தல் என்பன தொடர்பாக, அபிப்பிராய வாக்கெடுப்பு முறையில் வாக்களிக்கும்படி சுவிஸ் பிரஜைகள் அடிக்கடி கேட்கப்படுகிறார்கள். சில விடயங்கள், விருப்பத்திற்குரிய அபிப்பிராய வாக்கெடுப்பாகும். (பொதுவாக, 50,000 பிரஜைகள் கோரினால்) ஏனையவை, கட்டாய மக்கள் வாக்களிப்பிற்கு உட்படுத்தப்படும். இது, குறிப்பாக, அரசியல் யாப்புத் திருத்தம் அல்லது பிரதான சர்வதேச அமையங்களில் சுவிற்சர்லாந்து பிரவேசித்தல் என்பன போன்றவற்றிற்குப் பொருந்தும். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், அடியெடுப்பைப் பெரும்பாலான கோட்டங்கள் ஆதரிக்க வேண்டும்.

*(தொடரும்)*

## கலாநிதி ஜீவன் கூலுக்கு எதிர்ப்பு ஏன்?



துணைவேந்தர் கலாநிதி ரட்னஜீவன் கூல்

**யாழ்.** பல்கலைக்கழகத் துணைவேந்தராகக் கலாநிதி ரட்னஜீவன் கூல் நியமிக்கப்பட்டமையை ஆட்சேபித்தும் ஆதரித்தும் பாரிய அச்சுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன. யாழ்.பல்கலைகழகத்தில் இயங்கும் ஒரு சில மாணவர் அமைப்புகளின் தலைவர்கள், ஆர்ப்பாட்டங்கள் வெடிக்குமென்று எச்சரிக்கை செய்துள்ளனர். தன் சொந்தப் பாவனைக்கெனச் சொகுசுக் கார் கேட்டு, அரசிடம் பல மன்றாட்ட விண்ணப்பங்களை அனுப்பிய ஈழவேந்தன் எம்.பி.யும் எச்சரிக்கை விடுத்துள்ளார். புலிகளின் முகவரமைப்புகளின் பிரதிநிதிகளே இவர்கள். இதேவேளை ரட்னஜீவன் கூலுக்கு ஆதரவாக யாழ்.கல்விச் சமூகம் சார்ந்த மாணவர்களும் கல்விமான்களும் அனைத்திலங்கைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் குரலெழுப்பியுள்ளன.

கலாநிதி ஜீவன் கூல் அமெரிக்க, பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் இலத்திரனியல் மற்றும் கணனித் துறையில் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர். ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணம், சுண்டிக்குளியோடு தனது பாரம்பரிய வேர்களைக் கொண்ட தமிழர். இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமாகப் போராடி வருபவர். யாழ்.பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த பேராசிரியர் ராஜன் கூலின் சகோதரர். யாழ்ப்பாணத்திலும் இலங்கையிலும் வெளி உலகிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய 'Broken Palmyrah' என்ற ஆங்கில நூலை இணைந்து எழுதியவர்களில் ஒருவர் ராஜன் கூல். புலிகள் உட்பட பல்வேறு தமிழீழ இயக்கங்களினதும் இலங்கை, இந்தியப் படைகளினதும் அடாவடித்தனங்களையும் அத்துமீறல்களையும் பக்கச் சார்பின்றி அம்பலப்படுத்திய நூலென 'முறிந்த பனை' பலரது பாராட்டையும் பெற்றது. மருத்துவப் பேராசிரியர் ரஜினி திராணகம, பேராசிரியர் தயா சோமசுந்தரம், விரிவுரையாளர் ராஜ்மோகன் உட்படப் பலர் இந்த நூலை இணைந்து எழுதினர். சுருங்கச் சொன்னால் டாக்டர் சிறீதரன் (தற்போது லண்டனில் வாழ்கிறார்) பொறியியலாளர் விசுவானந்ததேவன் (பாக்குநீரிணையில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் ஏனைய ஐவரோடு பலியானவர்) ஆகிய மனித உரிமைப் போராளிகள், குறிப்பாகப் புத்திஜீவிகள் அடாவடித்தனங்களுக்கெதிரான போராட்டத்தில் கிளர்ந்தெழுந்தனர். இவர்களில் ரஜினி திராணகம (நிர்மலா நித்தியானந்தனின் சகோதரி) புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். ஏனையவர்கள் புலிகள் இயக்கத்தின் மரண அச்சுறுத்தலுக்கு இலக்காகியதையடுத்து, தாம் பிறந்து வளர்ந்த யாழ்.மண்ணை விட்டு பாதுகாப்புத் தேடி வெளியேறி விட்டார்கள். இன்னமும் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்திவரும், 'மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழகப் போதனாசிரியர் சங்கம்' வெளியிட்டு வரும் அறிக்கைகள், 'முறிந்த பனையின்' முறியாத தொடர் முயற்சிகள். ஆயுதப் படைகளென்றாலென்ன புலிகளென்றாலென்ன அத்துமீறல்களில் யார் ஈடுபட்டாலும் அதனை அப்பட்டமாக அம்பலப்படுத்திவரும் வெகு சில அமைப்புகளில் இதுவுமொன்று. பிந்துனுவேவ திறந்த வெலிச் சிறையில் தமிழ் கைதிகள் கொல்லப்பட்டமையையும் இவ் அமைப்பு அம்பலப்படுத்தி வெளியிட்ட அறிக்கை இதற்குச் சான்று. ஆனால், இவற்றோடு சம்பந்தப்பட்டிருக்காத ஜீவன் கூலை, ஏன் புலிகள் எதிர்க்க வேண்டும்? ஜனநாயகம், பன்முகத்தன்மை, மனித உரிமை ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் அவரது நியமனத்துக்கு எதிராகக் குரல் கொடுக்காமல் இருக்கலாமல்லவா? ஜீவன் கூலின் வார்த்தையிலேயே கூறுவோம். "தெற்கில் என்னைப் பார்த்துப் புலி என்கிறார்கள். வடக்கில் புலிகளின் எதிரி என்கிறீர்கள். நான் இரண்டுமே இல்லை" இப்படிச் சொன்னார். சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடந்த வைபவமொன்றில். அதிதியாக அழைக்கப்பட்ட அவருக்கு ஆட்சேபனை தெரிவித்துப் புலிகள் நடத்திய எதிர்ப்பையடுத்து இப்படிச் சொன்னார் அவர்.

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 02

## மகாராணி கிறிஸ்டினாவும் அந்தப்புர நாயகர்களும்

**வரலாற்று** ஆரியர்களின் தகவல்படி அவ்வருடமே கிறிஸ்டினா பூப்பெய்தியதாகக் குறிப்பிடப் படுகிறது. ஆயினும் சுவீடன் தேச மக்களும் நாட்டு நிர்வாகத்தினரும் மன்னர் குடும்பத்தினை கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றி வந்ததனால் எவரும் மறுபேச்சில்லாமல் 12 வயதான கிறிஸ்டினாவை தமது மகாராணியாக ஏற்றுக்கொண்டனர்.

நாட்டின் அரச தலைமையைப் பொறுப்பேற்றுக்கொண்டாலும் சுவீடன் தேச நிர்வாகத்தில் அந்தந்தத் துறையினரை நிர்வகிக்கும் பொறுப்பை அனுபவமிக்க மூதவையினரிடமும் அதிகாரிகளிடமும் ஒப்படைத்த கிறிஸ்டினாவின் விருப்பம் வேறொரு பக்கமே திரும்பியது. தனது தனிப்பட்ட வாழ்வில் அதிக காம இச்சை உருவானவளாகவே அவள் காணப்பட்டாள். அவளது உடல் இச்சையினைத் தீர்த்து வைக்கப் பல ஆடவர்கள் தேவைப்பட்டனர். அரண்மனைப் போர் வீரர்களாக இருந்த கட்டிளம் காளையர் பலர் கிறிஸ்டினாவின் கட்டிலறைக்கு அழைக்கப்பட்டனர். இதன் உச்சக்கட்டமாக ஸ்டொக்கோம் அரண்மனை அந்தப்புரம் ஆடவர் மட்டும் தங்கும் கேளிக்கை விடுதியாக மாறியது. அங்கே எந்த வேலையும் வழங்கப்படாமல் வேளாவேளைக்கு நன்றாக உணவு வழங்கப்பட்டு, புஷ்டியான ஆடவர்கள் பலர் தங்க வைக்கப் பட்டிருந்தனர். கரும்பு தின்னக் கசக்குமா? எந்த நேரமும் மகாராணியிடமிருந்து அழைப்பை எதிர்பார்த்து காத்திருப்பதே



மகாராணி கிறிஸ்டினா அவரது அந்தப்புரத்தில்

அவர்களின் ஒரே வேலையாக இருந்தது. சில வேளைகளில் ஒரே நாளில் மட்டும் அடுத்தடுத்து 10 ஆடவர்கள் கூட கிறிஸ்டினாவின் படுக்கைக்கு அழைக்கப்பட்டது எந்த அளவிற்கு அவள் காம இச்சையின் உச்சத்தில் இருந்தாள் என்பதனை எடுத்தியம்பியது.

இப்படியாக இருந்த மகாராணி கிறிஸ்டினாவின் இச்சை திடீரென இளம் பெண்களின் மீது மாறியது. அந்தப்புரத்திலிருந்த நாயகர்கள் ஒரேயடியாக வெளியேற்றப்பட்டு சுவீடன் தேச இளம் பெண்கள் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டனர். காம இச்சையின் உச்சத்தில் இருந்த அவள், எப்படி தன்னினச் சேர்க்கையாளராக மாறினாள் என்பதுதான் புரியாத புதிராக இருப்பதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இறுதிவரை திருமணம் முடிக்காமலேயே ஆட்சி நடத்திய மகாராணி கிறிஸ்டினாவின் இறுதி 10 ஆண்டுகள் ஸ்டொக்கோம் அரண்மனை அந்தப்புரத்தில் விசேடமாக இளம் பெண்களுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியிலேயே கழிந்தது. அக்கால கட்டத்தில் ஆண்களின் மூச்சுக்காற்று கூட அரண்மனை அந்தப்புரத்தில் படக்கூடாது என அரண்மனை அதிகாரிகளுக்கு அவள் உத்தரவிட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இவ்வாறு இருக்கையில் தனது 28ஆவது வயதில் மகாராணி கிறிஸ்டினா எடுத்த முடிவு சுவீடன் நாட்டு மக்களையே திகைப்பிலாழ்த்தியது. 1654ஆம் ஆண்டு திடீரென தான் முடிதுறப்பதாக அறிவித்த மகாராணியார், தன்னுடன் உடன்பிறந்த சகோதரர்கள் எவரும் இல்லாததினால் தனது ஒன்று விட்ட சகோதரன் 10ஆம் சார்லஸிற்கு முடிசூட்டி விட்டு, கத்தோலிக்க மதத்தினைத் தழுவி, இத்தாலிக்கும் பின் ரோமாபுரிக்கும் சென்று தனது எஞ்சிய காலத்தைக் கழித்தாள்.

*(இரகசியங்கள் தொடரும்...)*

## முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

### புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இஸ்ரேலில் ஏக காலத்தில் பயிற்சி

**1980களின்** ஆரம்ப வருடங்களில் புளொட் இயக்கமே அதிகளவிலான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. புளொட் இயக்கத்தின் தளப் பிரதேசம் போலவே வவுனியா விளங்கியது. பின்னர் படிப்படியாக ரெலோ இயக்கமும் ஈரோஸ் இயக்கமும் வளர்ச்சி கண்டன. அதன் பின்னர் தான் படிப்படியாகப் புலிகள் இயக்கம் வளர்ச்சி பெற்றது.




தமிழீழக் குழுக்களுக்கு ஆயுதங்களேற்றி வந்த விமானமொன்று சென்னையில் இந்திய அதிகாரிகளிடம் சிக்கியது. 1985ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சென்னைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பலொன்றிலிருந்தும் பெருந்தொகையான ஆயுதங்களை இந்திய சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இந்த ஆயுதங்களும் தமிழீழக் குழுக்களுக்கே கொண்டு வரப்பட்டன என்று அப்போது இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியா, சமாதான மேசைக்குச் செல்லுமாறு புலிகள் இயக்கத்துக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியதும் அது மாற்று வழிகளைத் தேடத் தொடங்கியது. உலகின் பல பாகங்களில், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் தமது அரசியல், இராணுவ, பொருளாதார நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் ஆரம்பித்தது. நிதி சேகரிப்பு நடவடிக்கைகளும் ஆயுதக் கொள்வனவும் முடுக்கி விடப்பட்டன. ஆயுதப் பயிற்சிக்கென ஹமாஸ் இயக்கம் மற்றும் சிரியா, லெபனான், லிபியா ஆகிய நாடுகளிலுள்ள பாலஸ்தீனத் தீவிரவாதக் குழுக்களிடம் பயிற்சிபெறப் புலி உறுப்பினர்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர். ஏனைய தமிழ் தீவிரவாத இயக்கங்களும் இவ்வாறு வெளிநாடுகளில் பயிற்சி பெற்றிருந்தன.

இதில் வேட்டிக்கையான விடயமென்னவென்றால், இஸ்ரேலின் உளவு அமைப்பான 'மொசாட்' ஏக காலத்தில் இலங்கை அரச படையினருக்கும் புலிகளுக்கும் ஆயுதப்பயிற்சி வழங்கியது தான். விக்டர் ஒஸ்ரோவொஸ்கி என்பவரும் கிளாயர் ஹோய் என்பவரும் சேர்ந்து எழுதிய 'By way of deception' என்ற ஆங்கில நூலில் இதுபற்றிக் குறிப்பிடப்படுகிறது. இஸ்ரேலிய உளவு அமைப்பில் ஏஜன்டாகப் பணிபுரிந்தவர் ஒஸ்ராவொஸ்கி. இஸ்ரேலிய பயிற்சி முகாமொன்றில் ஏக காலத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த புலி இயக்க உறுப்பினர்களும் இலங்கை அரச படையினரும் நேருக்குநேர் சந்திப்பதைத் தவிர்ப்பதற்குத் தான் மேற்கொண்ட முயற்சிகள் பற்றி ஒஸ்ரோவொஸ்கி தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

(அரசியல் தொடர்)

ராஜிவ் காந்தி தனது சமாதான முயற்சிகளைத் தீவிரப்படுத்தியிருந்த நேரத்தில் புலிகள் இயக்கம் தனது சொந்தக் கப்பல்களைப் பயன்படுத்தி ஆயுதங்களைக் கடத்தத் தொடங்கி விட்டது. 1986ஆம் ஆண்டளவிலேயே கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட்டு, அவை வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன. இக் கப்பல்களில் கொண்டு வரப்பட்ட ஆயுதங்கள் நடுக் கடலில் வைத்து விசைப் படகுகளில் ஏற்றப்பட்டு முல்லைத்தீவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இக் காலகட்டத்தில் புலிகளின் தொடர்புகள் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளுக்கு விஸ்தரிக்கப்பட்டிருந்தது. பரந்த தமிழீழக் கோரிக்கையையும் இக் காலகட்டத்திலேயே புலிகள் இயக்கம் முன்வைத்தது. அதாவது இலங்கையின் வடக்கு - கிழக்கு, இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் தமிழர்களைக் கொண்ட மொரீஸியஸ் மற்றும் தென்கிழக்காசியாவிலுள்ள தமிழர் வாழும் பிரதேசங்களை உள்ளடக்கிய பரந்த தமிழீழமே அவர்களின் இலக்காக இருந்தது.

1986ஆம் ஆண்டில்தான் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவும் அவரது கணவர் விஜய குமாரதுங்காவும் தமிழகத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் சென்று தமிழீழக் குழுக்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்கள். இவர்களின் நன்முயற்சிகள் சிங்களப் பத்திரிகைகளின் கடும் விமர்சனத்துக்குள்ளாகின. இன சௌஜன்யத்தை விரும்பிய முற்போக்குவாதியான விஜய குமாரதுங்கா சில வருடங்களின் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வடமராட்சியைக் கைப்பற்றிய இலங்கை இராணுவம் மேலும் முன்னேறுவதைத் தடுப்பதற்காகவே இந்தியா, யாழ்ப்பாணத்தில் விமான மூலம் உணவுப் பொருட்களைப் போட்டமை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். கொழும்பில் இந்திய உயர்ஸ்தானிகராகப் பணியாற்றிய தீக்ஷித், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலிக்கு திட்டவட்டமாக எச்சரிக்கையொன்றினை விடுத்தார்.

அதாவது இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இந்தியா அனுமதிக்க மாட்டாதென்று தீக்ஷித் கூறினார். இதேநேரம் விமானங்களைத் தாக்கக் கூடிய சாம்-7 ஏவுகணைத் தாக்குதலில் 25 புலிகளுக்கு இந்தியா பயிற்சியளித்து வருகின்றதென்ற தகவல்களும் வெளிவந்தன. இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் கொடுத்த இந்தத் தகவல்கள் ஜே.ஆரை மேலும் ஆத்திரப்படுத்தியது. 'Surface To Air missiles' என்றழைக்கப்படும் தரையிலிருந்து வான் பரப்புக்கு ஏவக்கூடிய ஏவுகணைகளே Sam -7 ஏவுகணைகளென்று அழைக்கப்பட்டன. புலிகளிடம் சாம்-7 ஏவுகணைகள் இருக்குமானால் பலாலி இராணுவ முகாமுக்கும் ஏனைய இராணுவ முகாம்களுக்கும் உணவுப் பொருட்களை அனுப்ப முடியாமல் போகுமென்று இலங்கை விமானப் படையினர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் தெரிவித்தனர். இலங்கை ஜனாதிபதி மீது இந்தியாவின் அழுத்தம் அதிகரித்து வந்த இந்தத் தருணத்தில்தான் புலிகளுக்கு இந்திய நாணய பெறுமதியில் ஐந்து கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கப் போவதாகத் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன் அறிவித்தார். யாழ்ப்பாணத்தில் இந்தியா உணவுப் பொருட்களைப் போட்டுச் சரியாக ஒரு மாதத்தின் பின்னர் புலிகளின் முதலாவது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்திருந்த இராணுவ முகாம் 'மில்லர்' என்ற இயக்கப் பெயர் கொண்ட கரும்புலியின் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகியது. 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐந்தாம் திகதி இத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்குச் சில மாதங்கள் முன்னதாக அதாவது 1987ஆம் ஆண்டு மார்ச் மாதம் முப்பதாம் திகதி யாழ்ப்பாணத்தில் கந்தன் கருணைப் படுகொலைகள் இடம்பெற்றன. புலிகள் இயக்கம் பிடித்து வைத்திருந்த 53 ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் ஒரே இரவில் துடிக்கப் பதைக்கச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**



புலிகள் கொள்வனவு செய்தக் கப்பலையொத்த மாதிரி

(தொடர்ந்து வடியும்....)




லீவு எடுத்து விட்டு குமார் திருமேனி வீட்டிற்குச் சென்று நடந்தவற்றை எல்லாம் கூறுகிறான். திருமேனியும் எதிரியின் பலத்தைப் பலவீனப்படுத்த ஏதோ செப்புத்தகட்டில் யந்திரம் கீறி அதனை எடுத்துச் செல்ல இரவானதால் திருமேனி வீட்டிலேயே ஸ்ரீகுமார் இரவு தங்கியிருக்கிறார்.....

சற்று நேரத்துக்குள் திறந்திருக்கும் ஜன்னல் பக்கமிருந்து என்னவோ சத்தம் கேட்டது.

சட்டென்று கண்களைத் திறந்த குமார் அந்தப் பக்கமாகத் திரும்பினார்.

ஜன்னலுக்கு வெளியே யாரோ நின்று கொண்டிருப்பதாகத் தோன்றியது.



"யாரது?" - குமார் மிகவும் உரத்த குரலில் கேட்டார்.

"நான்தான்!" - ஒரு பெண்ணின் குரல் பதிலளித்தது.

முன்பின் பழக்கமில்லாத ஒரு குரல். நிச்சயமாக அது ஸ்ரீதேவியின் குரல் அல்ல!

"ரேணுகா... இந்த இல்லத்தைச் சேர்ந்தவள்தான்!"

"இந்த இல்லத்தைச் சேர்ந்த பெண்தான்னா, ஏன் வெளியில நிற்கணும்?" -குமார் கேட்டார்.

"முன் பக்கமாக வந்தா அப்பா பார்த்துடுவார். வாசலை ஒட்டியிருக்கிற அறையிலதான் அவர் படுத்திருக்கிறார்." - அவள் பதிலளித்தாள்.

**எழுதுவது**
**சிவன்**

"சரி, இப்ப எதுக்காக வந்திருக்கீங்க?" -குமார் கேட்டார்.

"அப்பாவுக்கு எங்களைப் பத்தின எந்தக் கவலையும் இல்லை. நாங்க மொத்தம் ஏழு பேரு. நான்தான் எல்லோருக்கும் மூத்தவள்."

"ரேணுகா, உங்க வயது என்ன?"

"இருபத்தேழு, கடைக்குட்டிக்குப் பதினெட்டு வயசு."

"அவங்கள்லாம் எங்கே இருக்காங்க?"

"தானிய அறையில படுத்திருக்காங்க. அவங்களுக்குத் தெரியாம நான் மட்டும் எழுந்து வந்திருக்கேன்."

குமார் தீப்பெட்டியை எடுத்து உரசி, மேஜை மேல் வைத்திருந்த நிலவிளக்கைக் கொளுத்தினார்.

அதன் வெளிச்சத்தில் அவர் ரேணுகாவைக் கவனித்தார்.

மிகவும் அழகாக இருந்தாள்.

"உங்க அப்பா ஏன் இன்னும் உங்களுக்கெல்லாம் கல்யாணம் பண்ணி அனுப்பாம இருக்கிறார்?"

"அவருக்கு அதுக்கெல்லாம் ஏது நேரம்? எப்பப் பார்த்தாலும் உங்களை மாதிரி யாராவது வந்துட்டே இருப்பாங்க. அவர் கவனம் பூராவும் அதிலதான்." - ரேணுகாவின் வார்த்தைகள் துயரம் தோய்ந்து வெளிவந்தன.

உண்மையிலேயே குமார் அவள் சொன்ன கதையைக் கேட்டு கவலையடைந்தார்.

ஒரு லெக்சரராக இருப்பினும் அவருக்குள் இருந்த தார்மீக உணர்வு விழித்தெழுந்தது.

இவ்வளவு புகழ்பெற்ற மாந்திரீகரான தேவதத்தன் தனது பெண்கள் யாரையும் இன்னும் கல்யாணம் செய்து அனுப்பாமல் வீட்டிலேயே வைத்திருக்கிறாரே!

குமாருக்கு அந்தச் செய்தியே வியப்புக்குரிய ஒன்றாக இருந்தது.

ரேணுகா சொன்னது உண்மையாகவே இருக்கும் என்று தோன்றியது.

தன்னுடைய சொந்தத் தொழிலின் மீதுள்ள கவனத்தால் பெற்ற குழந்தைகளையே மறந்துவிட்டிருக்கிறார் அவர்.

'இப்போது என்ன செய்யலாம்?' - குமார் சுற்று முற்றும் பார்த்தார்.

அறைக்கதவைத் திறப்பதானால், தேவதத்தன் நம்பூதிரி படுத்திருக்கும் அறைவழியாகத்தான் வெளியே போகவேண்டும்.

தான் இந்த நேரத்தில் வெளியே போவதைப் பார்த்தால் அவர் என்ன நினைப்பார்?

அதைப் பார்த்தால் ரேணுகா சொன்னதை அப்படியே காற்றில் விட்டுவிட வேண்டியதுதானா? குமார் சற்று நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தார்.

கடைசியில், கொஞ்ச நேரமாவது அவளிடம் பேசி, அவளது துயரத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். அவளுக்கும் அது ஓர் ஆறுதலாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்.

உட்புற வராந்தாவுக்கு வந்தார்.

தேவதத்தன் நம்பூதிரியிடமிருந்து எழுந்த குறட்டைச் சத்தம், அவர் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறார் என்பதை உணர்த்தியது.

வெளிப்புறக் கதவைத் திறந்த போதும் அவர் விழித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஒருவேளை கண்விழித்து அவர் ஏதாவது கேட்டால், ஏதாவது ஒரு காரணம் சொல்ல வேண்டியதுதான்.

வீட்டைவிட்டு வெளியே வந்தவர் முற்றத்தைக் கடந்து தென்புறமாக நடந்தார்.

அவள் இன்னும் அங்கேயேதான் நின்று கொண்டிருந்தாள்.

"ரேணுகா, இங்கயேவா நின்னுட்டிருக்கீங்க???" குமார் கேட்டார்.

"நான் காத்துக்கிட்டிருக்கிறேன்." - அவள் குமாரை நெருங்கினாள்.

அவள் நெருங்கியபோது இலஞ்சிப் பூக்களின் மணம் அவரைச் சூழ்ந்தது.

பிளவுஸும், வேட்டியும் உடுத்திருந்தாள். கடுமையான நீண்ட தலைமுடி பின்புற இடுப்புப் பகுதியையும் தாண்டிக் கீழிறங்கியிருந்தது.

ஒரு மோகினியைப் போல மிகவும் அழகாகத் தோற்றமளித்தாள் ரேணுகா.

"அங்க உட்காரலாமா?" - அவள் தெற்கு திசையில் சற்றுத் தொலைவிலிருந்த குளத்தின் கல் படிக்கட்டுகளைச் சுட்டிக் காட்டியபடி கேட்டாள்.

படிகளின் மீது படிந்திருந்த பாசி, ஈரம் உலர்ந்திருந்ததால் செதில்களைப் போல் மேற்புறமாக உயர்ந்திருந்தது. குளம் எத்தனையோ நூற்றாண்டுகளைத் தாண்டியிருக்கிறது என்பது புரிந்தது.

அசைவற்றுக் கிடந்த குளத்து நீரில் நிலவு ஒரு வெள்ளி அரிவாள் கிடப்பது போலத் தோன்றியது.

(வாசனை வீசும்....)

## மனதுக்கு நிம்மதி

# நம்மை நாமே மதிப்போம்


**மனிதனது** பெரிய குறைபாடு தன்னைத் தானே அறிந்து கொள்ளாததுதான். நம்மை நாமே மதிக்காததுதான். நம்மிடம் நாமே அன்பு செலுத்தாதது தான். ஒரு சிறு தவறு நேர்ந்துவிட்டால் அதற்காகப் பலர் ஏங்கிப் போகிறார்கள். ஒரு தவறு நேர்ந்துவிட்டால் அதற்காகத் தங்களைத் தாங்களே பலர் சவுக்கடி கொடுத்துக் கொள்கிறார்கள். அடிக்கடி அதையே எண்ணிப் பொருமுகிறார்கள், தாங்கள் ஏதோ வாழ லாயக்கில்லாதவர்களாகத் தங்களைப் பற்றித் தீர்ப்புக் கூறிவிடுகின்றனர். இதனால் நமக்கு நாமே தீமை செய்து கொள்கிறோம். உடல் அளவில் தீமை நேர்கிறது. உள்ள அளவில் விளையும் தீமை ஆயுள் பூராகவும் நாவினால் சுட்ட வடு. வாய் நம்முடன் வாழ்கிறது. நமது நல்ல வாழ்வை நம் நினைவு, கறையாய் நின்று பாதிக்கிறது.

நம்மை நாம் மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்மை நாம் கண்ணியமாக நடத்தவும் நினைக்கவும் பழகிக் கொள்ள வேண்டும். நம்மை நாம் பெரு மனிதனாக மதிப்புக் கொடுத்து நடத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பிறர் நம்மை மதிப்பார்கள். நம்மை நாம் எப்படி மதிப்புப் போட்டு வைத்திருக்கிறோமோ அப்படித்தான் உலகம் ஏற்றுக் கொள்ளுகிறது.

அஞ்சி, கூனிக் குறுகி நிற்கும் ஆளை வேலைக்காரனாகத்தான் நடத்துவார்கள். மாமனார் வீட்டிலும் கூடப் பயந்துகொண்டு, ஆசிரியர் கேள்வி கேட்பாரோ என்று அஞ்சி, கடைசி பெஞ்சில் உட்காரும் மாணவர்களை, "என்னருமை கடை மாணாக்கர்களே" என்று தான் ஆசிரியர் கூப்பிடுவார், நடத்துவார். "எனக்கு அதிகம் தெரியாது இதைப்பற்றி" என்று முன்னுரை கூறிவிட்டுத் தன் கருத்தைச் சொல்பவனின் சொல்லுக்குச் சபையோ, பிறரோ அதிகம் மதிப்புத் தரமாட்டார்கள். "நான் உடையைப் பற்றி லட்சியம் செய்வதில்லை" என்று கூறிக்கொண்டு நடந்துகொண்டால் நமது உடை எந்தவித உணர்வைப் பிறர் மனத்தில், எழுப்புமோ அந்த மரியாதையுடன்தான் உலகம் நம்மை நடத்தும். நாம் நம்மை எப்படி ஏற்றுக்கொள்கிறோமோ அப்படித்தான் உலகம் ஏற்றுக்கொள்ளும்.

பிறரைத் திருப்தி செய்வதற்காகவோ, பிறர் வலுக்கட்டாயம் செய்கிறார்கள் என்பதனாலோ ஒரு காரியத்தைச் செய்ய முயலும் ஒருவனை, 'அவனை எதையும் செய்யச் சொல்லலாம்' என்றுதான் உலகம் நம்பும். குழந்தைகள் வயதாகிய பின்னும், தாய் குழந்தைகளின் துணியைத் துவைத்துப் போட்டுக் கொண்டிருந்தால், "ஏன் இன்று துணியைத் துவைக்க வில்லை?" என்று கோபப்படுவார்களே தவிர, "அடடா! அம்மா நமக்காகத் தினமும் துணி அல்லவா தோய்த்துத் தருகிறாள்" என்று நன்றி தெரிவிக்க மாட்டார்கள்.

ஆகவேதான் நாம் நம்மை எப்படி நடத்துகிறோம் என்பது மிக முக்கியமானது. நான் புத்திசாலி, திறமைசாலி, என்ற நினைவுடன் ஒரு சந்தர்ப்பத்தில் நடந்து கொண்டு அதற்குக் கிடைக்கும் வரவேற்பையும் 'எனக்கு அதிகம் தெரியாது' என்ற சந்தேகம் பயம் கலந்த நினைவுடன் ஒரு சந்தர்ப்பத்தில் நடந்து கொண்டு



அதற்குக் கிடைக்கும் வரவேற்பையும் கற்பனை செய்து பாருங்கள்.

உண்மையில், நம்மில் பலர் நம்மையே தாழ்த்திக் கொண்டு வாழ்வது தெரியவரும்.

உடலும் அப்படித்தான். உடல் ஆத்மா தங்கியிருக்கும் அற்புதமான கோயில். அதை எப்படிச் சரியாகக் கவனிக்காது உதாசீனம் செய்கிறோம், கண்டதை உள்ளே போட்டு அதைப் பாழ்படுத்துகிறோம் என்பது தெரியவரும். வெகு சிலரே உடலின் மேன்மையை அறிந்து அதைக் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துகின்றனர். சரிவரக் கண்காணிப்பு இல்லாத உடல் நாளடைவில் அதன் பலனைத் தோற்றுவிக்கிறது.

அந்திம காலத்தில் ரமணர் உடல் நோய்வாய்ப்பட்டார். ஊரிலுள்ள சந்தேகவாதிகள் அவர்தான் யோகியாகிற்றே, முனிவராயிற்றே, எப்படி இதெல்லாம் - உடல் நோயெல்லாம் வரக்கூடும் என்று கேட்டார்கள். ரமணர் அவர்களுக்குப் பதில் சொல்லவில்லை; ஆனால் தன் உடலைப் பார்த்துக் கூறினார். "நீ என்ன செய்வாய்? உன்னை இளவயதில் பசி என்றும் பட்டினி என்றும் எத்தனை சித்திரவதை செய்தேன்" என்று அங்கலாய்த்தார்.

எதைப் போற்றுகிறோமோ அது வளரும். எதைத் தூற்றுகிறோமோ, உதாசீனம் செய்கிறோமோ அது தாழும். இது உலக உண்மை. அன்பு காட்டி வளர்க்கப்படும் குழந்தைகளுக்கும், தாயின் அன்பும் பரிவும் அரவணைப்பும் இல்லாது வளரும் குழந்தைக்கும் அதன் வளர்ச்சியில் விளைந்த மகத்தான மாறுபாட்டை - குறைபாட்டை விஞ்ஞானிகள் பரீட்சித்திருக்கின்றனர்.

அதே போலத்தான் உள்ளமும் உள்ளம் ஒரு சிறு சக்தி நிலையம். அதன் சக்தியை அதிகப்படுத்தலாம்; குறைக்கலாம். எல்லாம் நம் கையில் இருக்கிறது. நாம் உள்ளே போடும் எண்ணங்களின் தன்மையைப் பொறுத்து இருக்கிறது.

நான் சொல்ல விரும்புவது; பலர் பயம், சந்தேகம், என்னால் முடியாது, அவனைப் போல் நானில்லை என்ற பல எண்ணங்களால் உள்ளத்தைச் சின்னா பின்னப்படுத்தி வருகிறார்கள்; சித்திரவதை செய்து வருகிறார்கள். இதன் விளைவாக உள்ளம் அந்தச் சந்தேகங்களில் ஊறி ஊறி அதை நம்பத் தொடங்குகிறது. அதையே உண்மையாக்குகிறது. அவர்கள் போட்ட மதிப்பினால் அவர்களையே தாழ்த்தி விடுகிறது.

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 159க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ந.நாகலிங்கம், 22. தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. வி. சுதர்சினி, 142/23, கொண்டானவ, நாவலப்பிட்டிய.
2. எம்.எச்.எம். ஜவ்பர், 145, கல்பொக்கை வீதி, வெலிகாமம்.
3. பத்மாவதி, புலத்கம, பலாங்கொடை.
4. பெ. ரதிமலர், 209, மார்க்கண்டு வீதி, பாண்டிருப்பு, கல்முனை.
5. எம். ஜே. பெர்னாண்டோ, புனித லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை.
6. காமில் ஜாவித் பாத்திமாஹனா, 33, காட்டுப்பள்ளி குறுக்கு வீதி, ஏறாவூர் - 03.
7. கே.எம்.எஸ். ஆப்தீன், 36, போல்ஸ் வீதி, நகரசபை விடுதி, புத்தளம்.
8. எம். சாந்திகுமார், அரசகால்நடை மருத்துவ நிலையம், மஸ்கெலியா.
9. எம்.எப்.எம். ரிம்ஸாத், மாஞ்சோலைச்சேனை, சின்னக்கிண்ணியா, கிண்ணியா - 03.
10. எஸ்.வரதராஜன், மணிமேகலை இல்லம், வந்தாறுமூலை.

## குறுக்கெழுத்துப் போட்டி 161

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | ■ | 11 | 12 |
| ■ | 14 | 15 | ■ | 17 | 18 |
| 19 | ■ | ■ | 22 | 23 | ■ |
| 25 | 26 | ■ | 28 | ■ | 30 |
| ■ | 32 | 33 | ■ | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. புகழ் பெற்ற போர் வீரர்களில் ஒருவன். (குழம்பியுள்ளது).
7. இரவு என்பதன் எதிர்பதம் (குழம்பியுள்ளது).
11. மாதங்களில் ஒன்று (திரும்பியுள்ளது).
14. விக்ரம் நடித்து வெளியாகிய திரைப்படம் ஒன்று (திரும்பியுள்ளது).
17. ஈரம் என்றும் பொருள்படும். (திரும்பியுள்ளது)
22. மாம்பிஞ்சினை இப்படியும் அழைப்பர் (திரும்பியுள்ளது).
25. மாங்கல்யம்
32. நீரை உறுஞ்சிக் குடிக்கும் பறவை
35. ஆறு.

## குறுக்கெழுத்துப் போட்டி 159 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜெ (1) | னி (2) | வா (3) | ■ | ச (5) | டை (6) |
| ய (7) | தெ (8) | ம் (9) | ■ | ம் (11) | ■ |
| ம் (13) | ■ | ம (15) | க (16) | ற (17) | ம் (18) |
| ■ | கா (20) | ன (21) | ம் (22) | ■ | ண (24) |
| லை (25) | வ (26) | ■ | ம (28) | ணி (29) | ற (30) |
| வி (31) | ல் (32) | ■ | ன் (34) | கெ (35) | ச (36) |

### மேலிருந்து கீழ்

1. தானியங்களில் ஒன்று.
2. குறி சொல்லும் வீடுகளில் உள்ள உயிரினம் (குழம்பியுள்ளது).
3. குருடன். (குழம்பியுள்ளது)
5. மாந்திரீக விடயங்களில் இதுவும் ஒன்று (குழம்பியுள்ளது
6. உயிர். (குழம்பியுள்ளது)
19. பெருங்கொடையாளன்.
22. நட்சத்திரம் (தலைகீழ்)
26. கொடிய மிருகங்களில் ஒன்று (தலைகீழ்)
30. ஒழுக்கம் அல்லது இடம் என்று பொருள்படும் (தலைகீழ்)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 21.03.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-161
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

**- வழங்குவது றாஹில்**

## நீ அடைகின்ற பேறு!

ஒரு கூடையளவு வாழ்த்துச் சொல்!

பல வாளி ஆறுதல் ஊற்று!

புதைந்து கிடக்கும் புன்னகையைத் தோண்டி எடுத்துக் கொடு!

உறங்கிப் போன இதயத்தை இயங்கச் செய்!

முடமாகிப் போன நினைவுகளைச் சுகமாக்கி வை!

இவ்வாறு முதுமைகள் வயதில் அன்பு மழை செய்!

அவர்கள் கடந்து வந்த பாதையில் பல்லாயிரம் மெழுகுவர்த்திகள் ஏற்றி வை!

முதுமை வயதுகளுக்கு உன் மனதால் இள வயது படை!

இருண்டு போன அந்த மனதுகளை வானமாக்கி நிலா நடு!

மனிதச் சங்கிலியை நீளமாக்கிய மனதுகள் அவை.

உறவுகளைப் பாலமாக்கிய ஆழமான இதயங்கள் அவை.

காதல் பருகி...

காமம் செய்து...

சந்ததி பெருக்கிச் சாதனை வளர்த்தவர்கள்

அனுபவ வானில் நட்சத்திரங்கள் பதித்தவர்கள்.

பெரு மழை அளவு கண்ணீர் சிந்தி கரைந்து போன வயதான மனதுகள்.

துன்பங்களின் பிடியில் அகப்பட்டுத் தப்பித்துத் தப்பித்து ஆயுள் எல்லையை அண்மித்துக் கொண்டிருக்கும் முதுமைக்காரர்கள்.

சோலை அளவு சந்தோசம் பூத்து நறுமணம் சுவைத்த இதயங்கள் இவர்கள்.

வாழ்க்கை பழுத்திருக்கிறது. இனி, உதிரும் காலம் வந்து கொண்டிருக்கிறது.

முதுமை விழிகளில் ஈரம் சுரந்ததால் இதயம் சோகம் சுமந்திருக்கிறது.

அந்த ஈரத்தைத் துடைப்பதற்கு நீ கைகள் கொடு!

அந்த சோக இருள் அகற்ற விளக்கு வை!

ஆயுள்; முதுமை முகவரி அடையும்போது மூச்சுக் கூடத் தள்ளாடுகிறது. பேச்சும் தளம்புகிறது. என்றாலும்; முதுமை ஒரு தகைமை.

வாழ்க்கையின் முழுமையும் அதுதான்.

நீ முடிவில் நின்று உன் ஆரம்பத்தை ஞாபகப்படுத்தும் போது ஒரு கனவுப் பதிவு மட்டுமா மிஞ்ச வேண்டும்?

முதுமை எல்லையை நீ அண்மிப்பதற்கு முன்னதாக உன் முகவரி நிலைக்க வை!

உன் பெயரை உன் எச்சங்கள் மட்டும் அச்சடித்தால் போதுமா?

உன் முகத்தை உன் இரத்தங்கள் மட்டும் உச்சரித்தால் திருப்தியா?

இந்த உலகம் உன்னைப் பற்றிப் பேச வேண்டும்.

இந்தப் பூமி உனது தகுதி பற்றி எழுத வேண்டும்.

நீ ஒரு பாதையாகு!

உன் பின்னாடி பல இளமைகள் பயணம் வரவேண்டி இருக்கிறது.

முதுமை உன்னைக் கைப்பற்றினால் கலங்காதே!

உனது கண்ணீருக்கு விடுமுறை கொடுத்துவிட்டு, இறுதி வரை கற்கண்டு மனம் செய்!

வாழ்க்கைக் கடலில் தத்தளித்து முதுமைக் கரையில் ஒதுங்குபவர்களுக்கு முள் வைப்பவன் மிருகமாகிறான். அவர்களுக்குக் கைகொடுத்து சந்தோச நாட்கள் கொடுப்பவன்தான் மனிதனாகிறான்.

உன்னை இந்த உலகத்திற்குக் கொண்டு வந்த முதுமைகளுக்கு நீ சந்தோச முகம் வழங்கு!

அவர்கள் கண்ணீருக்கு இன்னும் நீ வாய்க்கால் வெட்டினால், உன் கண்ணீர் பாய்வதற்கு ஒரு நதியே தேவைப்படும்.

அவர்கள் புன்னகையை உனதாகப் பிரகடனப்படுத்து!

நீயும் முதுமைச் சிறைக்குள் நுழைவதற்குமுன் உன் முன்னாடி உலவும் முதுமைகளுக்கு மனது வை!

முதுமை நாட்கள் தீரும் தருணம்... அது தீர்வதற்கு முன்னாடி கடவுள் ஆசி வாங்கு!

கடவுள் துணையுடன் நீ உன் ஆயுள் கடக்கும் போது... முதுமை நீ அடைகின்ற பெரும் பேறாகும்.

# சமாதானக் காதல்

**முத்துக்கள்** விளைந்ததாலும், சேனைப் பயிர் செய்ததாலும் இவ்விரு ஊருக்கும் காரண இடுகுறியாய்யமைந்த பெயரே முத்தூர், சேனையூரெனக் கூறலாம். இங்கே வெளிநாட்டவர்கள் கண்டால் பொறாமைப் படுமளவுக்கு படர்ந்தடர்ந்த காடுகளும், விரிந்த வயல் வெளிகளும், வானம் போன்ற கடலும், முகடு போல் மலையுமாக பல்லாயிரக்கணக்கான இயற்கைக் காட்சிகள் காணப்படுகின்றன.

இத்தனையும் ஏமாந்து போகும் அளவுக்கு அத்தி பூத்த முகத்தழகியான 'கதீஜா' என்பவளை ரமேஷ் மனதால் விரும்பினான். அவளுக்கும் இவன் மேல் ஓர் கண்தான். ஆனால் வெட்கத்தால் பொய்யே கூறிக் கொண்டாள்.

இவர்கள் இருவேறு ஊரில் வாழ்ந்தாலும் ஒரே வகுப்பறையில் அக்கம் பக்கமாகவே இருப்பார்கள். அன்றும் வழமை போல் அவள் வீதியிலே வருகிறாள். அவன் பேசத் தொடங்கினான்.

கதீஜா, 'நீ பேசமாட்டியாமா?....நானும் எத்துன நாளாப் பேசிப்பாக்கிறன்.

நீ உன்னோட பாட்டுக்குப் போய்ட்டேயிருக்கியே.

என இவன் பேசிய போது,' அவள் அதற்கு, போங்க ரமேஷ்.

'தயவு செஞ்சி இந்தச் சேட்டைய இன்றையோட விட்டுடுங்க.'

இல்லாட்டி என்னோட அண்ணன்ட்ட கம்ளைன் பண்ணிடுவன்.

என்று விரட்டியவளின் வார்த்தையைக் கேட்ட ரமேஷ்.

ஒன்னக் காதலிக்கிறதுக்காக வேண்டி அடி, இடி, அற, ஒத, வெட்டுக் குத்து எல்லாமே நா...நா..வாங்கிடத் தயார்.

'ஆனா ஒண்ணு மட்டும் நெனப்பா வெச்சுக்க' அதுதான் என்னத் தவிர, நீ யாரையுமே அவசரப்பட்டுக் காதலிக்காத என்று இருவருக்கும் வாக்குவாதம் நிகழ்ந்ததைக் கவனித்த 'பலாக்கொட்டை' வியாபாரி கதீஜாவைப் பார்த்து.

புள்ள அடம் புடிக்காம அவனையே காதலிமா?

எனக் கூறியதும், வெட்கத்தில் சட்டென சந்தியில் மடங்கி மறைந்து விட்டாள்.'

அன்றிரவு கதீஜா தன்னையே மறந்து ரமேஷுடைய நினைவுகளால் தூக்கத்தைப் பறிகொடுத்துக் கொண்டே இருந்தாள். அழகிய இனிய கலர்க்கனவுகளால் ஆகாயத்திலே காதல் கோட்டையே கட்டினாள். இப்படி இவளின் இளமைக் கனவுகள் பல கோடி சிறகடித்துக் கொள்கிறது.

ரமேஷிற்கு ஏக்கம் அடை மழையாகி விட்டது. அவனாலியன்றளவு கண்ணீரைத் தலையணையில் துடைத்துக் கொண்டு 'கதீஜா நான் உன்ன விரும்புறன், ஆனா நீ என்னக் கொஞ்சமும் விரும்பாமயிருக்கியே!...'

'நா இனிமேலும் உன்னோட பேச மாட்டன்.'

'பார்க்க மாட்டன்'

'என்னால இனிமேலும் ஒனக்கு எந்தத் தொல்லையுமே வராது.'

எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டு அவளுக்காய் ஒரு சிறிய கவிதையை மனம் தாங்காமல் எழுதுகிறான்.

அதுதான்....

"நீ.....வா!
செம்பருத்தியில் நீ யொருத்தி
என் கண்ணில் இளம் பூ நீ
அதைச் சொல்லப் போறேன்
வா!..வா!!..வா!!!...நீ"

என்ற கவிதையும் தினமுரசில் பிரசுரமானது. அதையும் படித்து விட்டாள். சா!...எனக்காகவா? நீ கவிதை எழுதியிருக்கா! என அளவில்லாத சந்தோசத்தோடு எழுந்த போது, அவளின் கொப்பிக்குள் இருந்து ஒரு மடல் விழுந்தது. அதைப் பிரித்துப் பார்த்தாள் சில வரிகள் மட்டும்.

அன்பின் கதீஜாவிற்கு!

எழுதுவது ரமேஷ். நிஜமாக நீ நிலவேதான் எனக் கண்டு கொண்டேன். அதன் பிறகுதான் தெரிந்து கொண்டேன் நிலவை யாரும் பார்க்கலாம்...ரசிக்கலாம்... ஆனால் பிடித்துக் கேட்க முடியாதென்று.

அதை விடவும் நானொரு வறியவனென்பதாலும் உன்னை விரும்ப முடியாது. இதை விடவும் நான் தமிழினத்திலே சைவக்காரனாகவும் நீ முஸ்லிம் இனத்தவளாக இருப்பதாலும் உன்னை எந்த வகையிலும் காதலிக்க முடியாதென...

'ரமேஷ்' எழுதிய மடலில் ஒரு பகுதியைப் படித்ததும் நஞ்சையுண்டாற் போல பதறினாள். அப்போது வானொலியில்... "காதலுக்கு ஜாதி இல்லை மதமுமில்லையே!..கங்கை நதி பொங்கி வரக் கடலில்லையே!..."

என்ற பாடல் கதீஜாவின் காதைத் துளைத்தது.

"இன்டக்கி நம்ம ரமேஷைப் பார்க்கனும்" ரெண்டு வார்த்தையாவது சந்தோசமாப் பேசனும். ஏதாவது கிப்ட் கொடுக்கனும் என வந்தாள். அன்று தான் எல்லாமே வழமைக்கு மாற்றமா நடக்கிறது. இதுதான் அவனைக் காண முடியாத முதற் கட்டமாகும் அவன் தான் மறைந்து வாழ்வதால் எப்படி இவளால் காணமுடியும். அவனும் இவளைப் பார்க்க ஆவலுடன் ஒளிந்திருப்பான். ஆனால் இவ ளின் நிழல்கூட காணமுடியாது போய்விடும். இந்த நிலையில் ஏதோ ஒரு கவிதையை சற்று நீளமாக வரைகின்றான்.

காணாத ஏக்கத்தில் கல்லறைகளை
ஓடியோடித் தேடினேன் - அவளுடல்
மறைந்த மண்ணறையும் காணேன்
சதியால் வந்த விதியே! நீ
அவளை சுரங்க அகழிக்குள்
அமிழ்த்தி மறைத்து விட்டாயா?

எத்தனையோ சிந்தனைகள் மனதில் வந்தும் கூட ஒன்று மட்டுமே மனதிலே உறுதியாய் பட்டதும் வீதிக்கு வருகின்றான்.

பலாக்கொட்டை' வியாபாரியை பார்த்து "ஐயா! பெரியவரே அந்த மைதானத்துல விளையாட்டுப் போட்டி நடக்குதாமே!"

அங்க போனிங்களென்றா எல்லாச்சாமானையுமே பாத்திருக்க வித்திடலாமே!...

என்றதும் அக்கிழவர் போய்விட்டார்.

அவளைக் காண்பதற்காக வேண்டி

அக்கிழவனின் வேசத்திலே பலாக்கொட்டை வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றான்.

அன்றொரு நாள் தன்னைப் பார்த்து... புள்ள அடம் புடிக்காதமா? அவனையே காதலி...

என்று கிழவர் சொன்ன வார்த்தை பல முறையுள்ளத்திலே நினைவுக்கு வந்து கொண்டே இருந்தது. இனிமேலும் தாமதிக்க முடியாது. தன் காதல் யாருக்குமே தெரியாது. தனக்குதவிடுவோருமில்லை. எதற்கும் கிழவனுக்கிட்டத்தான் போக வேண்டும் என்று நினைக்கவே கோகுல ராணி நடையோடு கிழவரையடைந்து விட்டாள்.

கதீஜாவிற்கு பயத்தால் மூக்கு நுனி வியக்கிறது. தன்னை மறந்து விடுகிறாள். வெட்கத்தை இழந்து வாய்திறந்தவள் பெரியரே!

எனக்குப் பின்னால என்னையே சுத்திவருவானே அந்தப் பொடியனைக் கண்டிங் களா?... எனக் கெஞ்சிக் கேட் டாள்.

அதற்குக் கிழவரோ!... ஓ..அந்த விசயமா? இனியுனக்குத் தொல்லை இல்லையே!...

அது எல்லாமே முடிந்த கதையாச்சே!... என்று நீட்டிக் கொண்டு போனார் கிழவர். அதற்கு இவள் காரணத்தைக் கேட்டாள்.

அதற்குக் கிழவர் வாய் திறந்து அந்தப் பொடியன என்னோட பேத்திப் புள்ளக்கி மாப்பிள்ள கேட்டு...கேட்டு சம்மதப் பேச்சே முடிஞ்சி போச்சே1...


என்று சொல்லியபோது அவள் அவரைப் பெரியவரெனப் பாராமல் என்னடா! நரைத்தலையா?...

"என்னோட ரமேஷ் தானாடா! உன்னோட பேத்திக்கு மாப்பிள்ளை யாவரனும்..."

அதையும் என்ன தைரியத்தோட எனக்கிட்டச் சொல்லுவா?....

என்ற ஆத்திரத்தின் ஆவேசத்தில் தாடியைப் பிடித்தாள் ரெண்டு கன்னத்தில் போடவேணும் என்று. அப்போது தாடியும் மீசையும் கையில் வந்தது. அதுதான் ரமேஷ் என அறிந்து வெட்கப் பட்டாள். உள்ளத்தின் அன்பால் தன் தோளோடு தோள் சேர்த்து அணைத்து முத்தமிட்டாள்.

இருவரும் காதலில் உறுதியானதும் தங்களின் வாழ்க்கையும் ஒரு சினிமாவை போலவே அங்குமிங்கும் சுற்றித் திரிந்தார்கள். இப்படி ஒருநாள் கடற்கரையில் இருந்து பேசியபோது ரமேஷ் உங்ககிட்டப் பேசிரப்போ என்னமோ! வானத்த அளக்கிற மாதிரி, பூமிய மடிக்கிறமாதிரி, நிலவுல தூங்கிற மாதிரி, காத்தில பறக்கிற மாதிரி ரொம்ப ரொம்ப சந்தோசமா இருக்குதெனக்கு என்றவள், அவனைப் பார்த்து உங்களுக்கு எப்படி எனக் கேட்டாள். கேட்ட போது ரமேஷுடைய கண்ணில் சொட்டுச் சொட்டாக



-அ.கா.மு.நிஸ்வின்,
மூதூர் - 01.

கண்ணீர் வடிந்தது.

கதீஜா ஒங்கட ஊர்க்காரர்களும் எங்கட ஊர்க்காரர்களும் அடிக்கடி பிரச்சினைப் படுறாங்க...

இதுக்குள்ள வந்து ஜாதி மத பேதச் சண்டைக்கு அளவேயில்லாமயிருக்கு....

நம்மலோட காதல் உள்ளத்தால மட்டுந்தானே தவிர உடலுக்கில்லமா? என்றான். அதற்கவள்,

"இல்ல ரமேஷ் இல்லவே இல்ல"

"அப்படிச் சொல்லாதிங்க நம்மோட காதல் நிச் சயமா?...சத்தியமா!!... நெஜமா!!!... நிறைவேறத்தான் போகுது."

"ஏனென்றா!...சமாதானம் வரப் போகுது தானே!..."

"இதுக்குள்ள ரெண்டு பேரும் ரெண்டு இனத்தையுமே ஒன்று சேர்ப்போம்...

இந்த உலகத்தில..."

"நம்மோட காதலயும் நாட்டுச் சமாதானத்துக்காக நிலை நாட்டுவோமே...

இதுவும் உலகப் புகழ் பெற்ற காதலாகட்டுமே..!"

என்றதும் ரமேஷ் தமிழினத்தையும், கதீஜா முஸ்லிம் இனத்தையும், ஒன்று சேர்க்கப் போராடுகிறார்கள்.

"உங்க ஊரும் எங்க ஊரும் ஒன்று சேரும் நாள் நம்மோட சமாதானக் காதல் நிறைவேறும் நாள்.."

*(யாவும் கற்பனை)*

---

# லீவ் லெட்டர்

**காலையில்** பாடசாலைக் கடமைகளை முடித்து, பதிலதிபரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு வீதிக்கு வரவும் பஸ் வரவும் சரியாய் இருந்தது.

பாடசாலை சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க கல்வித்திணைக்களம், மாகாணசபை என எல்லா இடங்களுக்கும் ஏறி இறங்குவதற்குள் படாத பாடாகிவிடும். அதிகாரிகளுக்கெல்லாம் குட்மோர்னிங் சொல்லி, போதாக்குறைக்கு பியோன்களுக்கும் குட்மோர்னிங் போட்டு காரியங்களை முடித்துக் கொண்டு திரும்புவதற்குள் நரக வேதனையாகிவிடும்.

நான் பஸ்ஸில் ஏறுவதற்குமுன் ஓடிவந்த நபர், 'சேர் இந்த லீவு லெட்டரை புஸ்பா டீச்சர் உங்களிடம் கொடுக்கச் சொன்னாங்க' என்றவாறு கடித உறையைக் கொடுத்தார்.

அதை வாங்கி பைல் பேக்கினுள் திணித்த படி பஸ்ஸில் ஏறினேன். அந்த நபரும் பஸ்ஸில் ஏறி, நான் கேட்பதற்கு முன்பே, 'பசறைக்குப் போகின்றேன் சேர்' என்றார்.

பஸ் செல்லும் வழியில் தான் புஸ்பா டீச்சர் தங்கியுள்ள வீடு உள்ளது. வீட்டின் முன் அவர்களது வானும், மேலதிகமாக இன்னுமொரு வானும் நின்றது. அத்தோடு பட்டுச் சேலைகளுடனும், பட்டு வேட்டிகளுடனும் ஒரு கூட்டமும் காணப்பட்டது.

'டீச்சர் வீட்டில் என்ன விஷேடம் என்றேன்' பஸ்ஸில் ஏறிய நபரிடம். புஸ்பா டீச்சருக்கு இன்று ரெஜிஸ்டர் சேர். லுணுகலைக்குப் போக ஆயத்தமாகிறார்கள் என்றார் அந்த நபர்.

நேற்றுவரை பாடசாலையில் யாருக்கும் தெரியாமல் புஸ்பாவுக்கு பதிவுத் திருமணம் நடப்பதை எண்ணி ஆச்சரியப்பட்டேன்.

லீவு லெட்டரை பார்க்க எண்ணிப் பிரித்தேன். எனக்கொரு ஷாக்... 'கடிதத்தை யார் உங்களிடம் கொடுத்தது? என்றேன். மேசையிலுள்ள கடிதத்தை எடுத்துக்கொண்டு போய் அதிபரிடம் கொடு' என்றார். நான் தான் சேர் எடுத்து வந்தேன் என்றார்.

எங்கோ தவறு நடந்து விட்டது. நல்லவேளை இக் கடிதத்தை அந்த நபர் பாடசாலையில் கொடுத்திருந்தால் நிலைமை என்னவாகியிருக்கும்.

கடிதத்தை மனதுக்குள் வாசித்தேன்.

அன்புக்குரிய சேகர்,

நான் நலம், உங்கள் நலத்துக்காக சதா இறைவனை இறைஞ்சுகின்றேன். புதிய பாடசாலை பிடித்துக் கொண்டது. சக ஆசிரியர்கள் அன்போடு பழுகுகின்றார்கள். அதிபரும், எனது சித்தப்பாவும் நல்ல நண்பர்கள். ஆதலால் அவரும் என்னுடன் அன்பாகப் பழகுகிறார். ஆனாலும் உங்கள் நினைவு என்னை சதா வாட்டுகிறது.

நான் தங்கியுள்ள வீட்டிலிருக்கும் மூத்த பையனுக்கு என்னை முடித்து வைக்கத் திட்டம் போடுகிறார்களாம். வசியம் செய்வதிலும் கெட்டிக்காரர்களாம். எனக்கும் வசியம் செய்து சாப்பாட்டில் போட்டுக் கொடுத்து விடுவார்களோ என பயப்படுகிறேன்.

எனவே எனக்கு மீண்டும் பழைய பாடசாலையில் நியமனம் கிடைக்க ஆவன செய்யுங்கள். என்னைச் சந்திக்க நீங்கள் பாடசாலைக்கு வருவதில் அதிபர் சந்தேகப்படுகிறார். எனவே பாடசாலைக்கு வர வேண்டாம். வீட்டுக்குச் செல்வதாகக் கூறி சனிக்கிழமை பதுளைக்கு வருகிறேன். பஸ் நிலையத்தில் காத்திருக் கவும் பிளீஸ்.

உங்கள்
புஸ்பா.



-சி.கிட்ணசாமி
(சாமிஜீ)

கடிதத்தை மடித்து பைல் பேக்கினுள் திணித்தேன்.

பதுளை பஸ் நிலையத்தில் இறங்கியதும் தேநீர் குடிக்க வேண்டும் போலிருந்தது.

பக்கத்திலுள்ள ஹோட்டலுக்குச் சென்றேன். எனக்குப் பின்னால் ஓர் உருவம் ஓடி வந்தது. நின்று அவதானித்தேன். வேறு யாருமில்லை. சேகரே தான்.

'குட் மோர்னிங் சேர்' என்றார். நானும் பதிலுக்குக் 'குட்மோர்னிங்' என்றேன்.

வாங்க சேர் டீ குடிக்கலாம் என்றார்.

இருவரும் ஹோட்டலுக்குள் நுழைந்து எதிரெதிராக அமர்ந்து கொண்டோம். அவரே சிற்றுண்டிகளுக்கும், தேநீருக்கும் ஓடர் கொடுத்தார்.

நான் ஒரு வடையை எடுத்துக் கடித்தபடி தேநீரைக் குடித்தேன். சேகர் விடயத்தை ஆரம்பித்தார். 'சேர் உங்கள் பாடசாலையில் படிப்பிக்கும் புஸ்பவதி டீச்சரை நான் தான் திருமணம் செய்யவிருக்கின்றேன். கூடிய சீக்கிரம் நடக்கும்' என்றார்.

தேநீரை குடித்து முடித்து விட்டு கோப்பையை வைத்தேன். எனக்கு முன் அவர் எழும்பிச் சென்று பணத்தைக் கொடுத்தார்.

அவரது பேரவா என்னால் சிதறடிக்கப்படக் கூடாதென்றெண்ணி நன்றி கூறி அவரிடமிருந்து விடை பெற்று கல்வித் திணைக்களத்தை நோக்கி நடக்கின்றேன். பாவம் சேகர்.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

# சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

இரப்பவருக்கு மட்டுமல்ல, இரவாமலே இல்லாதவருக்குக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்போடு வாழ்ந்து கொண்டிருக்கும் எத்தனையோ குணக்குன்றுகளும், உலகில் இல்லாமலில்லை. ஆனால், இருந்தும், எஞ்சியதைக் கூடக் கொடுக்க மனமில்லாமல் குப்பையில் போடுகின்றவர்களின் மனங்கள் தூய்மையாகிவிட்டால் குப்பையில் போடும் பருக்கைக் கூட குடிப்பெருமையை உயர்த்திவிடுமே! மற்றவரின் மகிழ்ச்சியைக் கண்டு மகிழ்வதில் மனிதன் திருப்தி அடைவானாயின்; மனித சமுதாயமே மகிழ்ச்சிக்கடலில் மூழ்குவதற்குத் தடையேது?

*"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்*
*குலனுடையான் கண்ணே யுள"*

கேட்காமலே தேவை அறிந்து கொடுத்துதவும் பண்பு உயர்ந்த நற்குணமுடையவர்களிடத்திலே இயல்பாகவுள்ளது. எனினும் மலராக இல்லாவிட்டாலும் நாராகவாவது இருக்கலாமல்லாவா?

# தூதுரைக்க வல்லாயோ?

**தருவது கற்பகன்**

செண்பகவல்லியின் நிலைமையைக் கண்டு பூங்கொடி வருந்தினாள். 'அன்புத் தோழி'யின் துன்பம் அவளுக்கும் துன்பமாகவே இருந்தது. ஆயினும், அவளால் ஆகக் கூடிய காரியமாக இருந்தால், அவள் துயருற்ற மாத்திரத்திலேயே உதவிக்கு முன்வந்திருப்பாள். ஆனால், இது அவளால் ஆகக் கூடிய விடயமல்ல என்பதால், செண்பகவல்லிக்கு ஆறுதல் சொல்லியாவது அவளைத் தேற்ற நினைத்தவளாய், "செண்பகவல்லி! காதலென்பது கடுவழியில் நடப்பதைப் போன்றது என்று, கவிஞர்களும் சொல்லியிருக்கிறார்கள். காதலென்றால், அது தேன் கூட்டிலிருக்கும் தேனுக்கு ஒப்பானது. அதை எடுக்க நினைத்தால் தேனீக்கள் கொட்டும் என்பதைத் தெரிந்து கொண்டாலும், தேன் குடிக்கும் ஆசையில் அதை மறந்துவிடுவது அனுபவத்தில் பலர் கண்ட உண்மை. நீ இதை அறிந்திருக்கச் சந்தர்ப்பம் இல்லைத்தான். இப்போதாவது அறிகிறாயா?"


அவளை இடைமறித்தாள். செண்பகவல்லி. "பூங்கொடி! உன் புத்திமதிகளால் போனவர் திரும்பி வந்துவிடப் போகிறாராக்கும்? என் நிலைமை தெரியாமல், எதை எதையோ பேசுகிறாயே!" என்றவளின் முகத்தில் சற்றுக் கடுமை தோன்றியதைக் கவனித்த பூங்கொடி, "அம்மாடி காதலுக்குக் கண்ணில்லை என்று சொன்னதைக் கேட்டிருக்கிறேன். ஆனால் நல்லதொரு தோழியைக் கூட உதறித் தள்ளுமளவுக்குக் கொடுமையானது என்பதை இப்போதுதான் உணர்கிறேன்." என்றார். இந்த வார்த்தையைக் கேட்டவுடன் செண்பகவல்லிக்கு அவளை அறியாமலே கண்கலங்கிவிட்டது. "பூங்கொடி ஏனடி இப்படியெல்லாம் பேசுகிறாய்? நான் என் நிலைமையைக் கூறினேனல்லாது உன்னை நான் வெறுப்பேனா?" என்று கேட்ட போது அவள் குரலின் இனிமைதான் என்னே!

தாயின் மடியில் தவழ்ந்திருக்கும் மழலையின் கெஞ்சல் போலல்லவா இருக்கிறது. பூங்கொடியின் முகத்தில் புன்முறுவல் தோன்றி மறைந்தது. அதில் செண்பகவல்லி தன்மேல் வைத்திருக்கும் அன்பின் ஆழத்தைக் காட்டி நிற்பதை பூங்கொடியால் அலட்சியம் செய்ய முடியவில்லை. அதனால் ஏற்பட்ட மன நிறைவு காரணமாக அவன் முகம் மலர்வதை செண்பகவல்லி கவனிக்கத் தவறவில்லை.

மறுவினாடியே செம்பகவல்லியின் மலரனைய முகத்தில் வாட்டமும், விரக்தியும் படர்வதாயிற்று. அதையடுத்து அவளை அறியாமலேயே எழுந்ததோர் நெடுமூச்சு அருள்வர்மனின் காதலை நினைத்து, அவள் நெஞ்சில் ஏற்பட்ட ஏக்கத்தைப் பறை சாற்றி நின்றது!

சிறிது நேரம் இருவரும் மௌனம் காத்தனர். இறுதியில் பூங்கொடியே ஆரம்பித்தாள். "இப்படியெல்லாம் நீ வீணாக வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதால் நடக்கப்போவதென்ன?" என்னால் உனக்கு உதவி செய்ய முடியுமென்றால் அதையாவது நான் செய்வதற்கு நீ வாயைத் திறந்தால்தானே! என்றாள் பூங்கொடி.

"இதைக் கேட்டதும் ஏது? நீயே தூது போய் விடுவாயாக்கும்? என்றவள் முகத்தில் தோன்றிய மாற்றத்தில் சற்று ஏளனம் தோன்றியதை அவதானித்த பூங்கொடிக்கு; அவமானமாகத் தோன்றினாலும், அதை அவள் பொருட்படுத்தாது, "ஏன் எனக்கு அந்த உரிமை இல்லையா?" என்று வினவ, "ஏனில்லை? இருக்கிறது. ஆனால், உன்னால் முடியாது என்பதைத்தான் சொல்ல வந்தேன்" என்றதும், பூங்கொடி முகத்தில் ஓர் உற்சாகம் தென்படுவதைக் கண்ட செண்பகவல்லி "என்னடி இப்போதே புறப்படப் போகிறாயா?" என்றாள் கிண்டலாக. "ஆமாம், புறப்படத்தான் போகிறேன். எங்கே என்று கேட்கிறாயா? என் வீட்டை நோக்கி என்றவாறு கலகலவென்று சிரித்தாள். செண்பகவல்லிக்குப் பொத்துக்கொண்டு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்: மனித வர்க்கத்துக்கு இதயம் ஒன்று இருக்கிறதா? என்பது என் போன்ற பல பேருக்கு கேள்வியாக இருந்து வருகிறது. உன் விடயத்தில் இல்லை என்றே முடிவாகிவிட்டது" என்றாள்.



இதைக் கேட்டதும் பூங்கொடி சற்று நிதானத்தோடு கேட்டாள்.

"நீ என்ன சொல்கிறாய்?"

"புரியவில்லை? எருதுக்கு நோவு; காக்கைக்குக் கொண்டாட்டம் என்று சொல்வார்களே! அது இந்த நிலையில் எங்கள் இருவருக்கும் மிகப் பொருத்தமாயிருக்கிறது" என்று சொல்கிறேன்.

"அப்படியோ? மனிதர்களைப் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்துக்கொண்டிருக்கும் தாங்களென்ன அஸ்பரசோ? அல்லது தங்கள் காதல் மன்னன் என்ன கந்தருவனோ? அதைச் சொல்லிவிட்டால் தங்களுக்குச் செய்ய வேண்டிய அனைத்து ஆராதனைகளும் ஏன்? அபிஷேகங்கள் வேண்டுமானாலும் செய்துவிடலாம்.

"போடி மண்டு! உன் கேலிக்கும், கிண்டலுக்கும் நேரங்காலமே தெரியவில்லை" என்று அலுத்துக் கொண்டாள் செண்பகவல்லி....

"இது ஒன்றும் கேலியல்ல. என் அண்ணா உன்னுடைய காதல் தேவனைப் பற்றி எல்லாவற்றையும் சொல்லி இருக்கிறார்" என்று பூங்கொடி முடிப்பதற்குமுன், செண்பகவல்லியின் முகம் 'அன்றலர்ந்த செந்தாமரை' என்று சொல்வார்களே! அதைக் கூட விஞ்சிடும் அளவிற்கு மலர்ந்து, விரிந்தது. இதைக் கண்டாலும் காணாதவள் போல் பூங்கொடி இருந்த போதிலும், தாயைக் கண்ட பசுக்கன்று தாவி ஓடுவது கூடத் தாமதமாகலாம், செண்பகவல்லி பூங்கொடி அருகில் சென்றவிதம் அதைவிட வேகம் என்று சொல்லிவிடலாம்.

"பூங்கொடி என்னடி சொல்கிறாய்? உன் அண்ணா அவரைக் கண்டவர் என்றா சொல்கிறாய்?" செண்பகவல்லியின் தவிப்பை அறிந்துகொண்ட பூங்கொடி "நான் இப்போது என்ன சொல்விட்டேன் என்று என்னை உலுப்புகிறாய்?" என்னடி அதற்குள் பக்கத்தை புரட்டுகிறாய்? அவரை உன் அண்ணா கண்டதாகச் சொல்லவில்லை?"

"நீ சதா அவரையே நினைத்துக் கொண்டிருப்பதால், யாரையும் அவராகவே நினைத்துக் கொண்டிருக்கிறாய்" என்றாள் பூங்கொடி. இதைக் கேட்டதும் செண்பகவல்லியின் முகம் கருகிவிட்ட மலராவதைக் கண்ட பூங்கொடி, அவளை இன்னமும் வேடிக்கை பார்க்க நினைத்தால் அழுதே விடுவாள். போலிருக்கிறது என்று உணர்ந்தாள்.

"தூது செல்லப் போகிறாயா? என்று கேட்டாயே? உனக்குத் தெரியாமலே தூது போயாகிவிட்டது. உன்னைப் பற்றிய அனைத்தும் அவர் காதில் ஒலித்திருக்கும். போதுமா?" என்றவளை நன்றிப்பெருக்கோடு பார்த்தாள் செண்பகவல்லி.

"போடி என்னைத் துன்பப்படுத்துவது உனக்கு விளையாட்டாகிவிட்டது. நான் படும் பாடு எனக்கல்லவா தெரியும். உனக்கும், அனுபவப்பட்டால்தான் புரியும்." அதுக்குள்ளாகவா அப்படியொரு அனுபவம் கிடைத்துவிட்டது? உன் அவர் அவ்வளவு பெரிய மன்மதனா? பிடித்தாலும், புளியங்கொம்பைத்தான் பிடித்திருக்கிறாய். என்றவள் ஜாடையாகக் கண்ணைச் சிமிட்டினாள். இதைக்கேட்ட செண்பகவல்லியின் முகம் வெட்கத்தால் சிவந்து கொண்டு வருவதைப் பார்த்த பூங்கொடி, "அவரைப் பற்றிச் சொன்னதும், உன் மாதுளைக் கன்னம் செம்மை பூத்து விடுகிறதே!" என்றான் கிண்டலாக. இதைக் கேட்டதும் செண்பகவல்லி தலையைக் குனிந்து கொண்டாள். நாணம் அவள் முகத்தில் மட்டுமல்ல, அவளின் உடலெல்லாம் பரவியிருப்பதை உணர்ந்தாள். ஆயினும் அருள்வர்மனின் நினைவிலேயே அவள் திளைத்திருப்பதைப் பூங்கொடியால் புரிந்து கொள்ள அவ்வளவு நேரம் பிடிக்கவில்லை. இதை நினைவுபடுத்துகிறது இந்தக் குறள்.

***"கரத்தலும் ஆற்றேன் இந் நோயை நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணுத் தரும்."***

அதிகாரம்: 117 - குறள்: 1162.

# சிந்தியா பதில்கள்

**பிஸியாக இருப்பதாகக் காட்டிக் கொள்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-ஏ.என்.எம்.ஜவாத், புத்தளம்.

புத்திசாலித்தனமாக ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்று தான்.

**சிந்தியா, ஏற்கனவே தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்திருந்தால் தமிழருக்குப் பிரச்சினைகள் வந்திருக்குமா?**

-ஆர்.பாலா, ஹட்டன்.

தமிழருக்கு வந்திருக்குமா என்பது ஒருபக்கமிருக்கட்டும். தமிழருக்குள் வந்திருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

**தொடரும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள், மற்றுமொரு யுத்தத்தைத் தோற்றுவிக்க காரணமாகுமா?**

-க.அல்.ஆஸாத், ஏறாவூர் - 03.

தொட்டதுக்கெல்லாம் யுத்தம் என்றால் பூமி தாங்காது. முதலில் தாக்குதல் நடத்தும் இனந்தெரியாத நபரை இனம் காட்டுங்கள் பிறகு யோசிக்கலாம்.

**அழவைக்கக் கூடிய ஒரு நகைச்சுவை சொல்லமுடியுமா?**

-சிஹ்னாஸ் தௌபீக், ஹுஸைனியா புரம்.

டாக்டர் :- ஒப்ரேஷன் சக்சஸா முடிந்துவிட்டது. ஆனால் சின்னத் தவறு நடந்து விட்டது.




நோயாளி :- சின்னத் தவறுதானே விடுங்க டாக்டர். மனிசன் உயிர் தப்பினதே பெரிய விஷயம்... அது சரி என்ன சின்னத்தவறு?

டாக்டர் :- உங்கட இதயத்துக்குப் பக்கத்தில கத்தரிக்கோளை வைத்ததை மறந்து தைத்துவிட்டேன் அதுதான் என்றாராம்.

**தென்னாபிரிக்காவின் உலக சாதனை நிகழ்த்தப்பட்ட அந்த உலக மகா ஒரு நாள் போட்டியைப் பார்த்தீர்களா? எப்படி இருந்தது?**

-ஏ.எம்.றிஷ்வான், குறுஞ்சாக்கேணி.

ஈ.எஸ்.பி.என். தொலைக்காட்சியூடாக அந்த ஆட்டத்தைப் பார்க்கக் கிடைத்தவர்கள் பாக்கியம் செய்தவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். உலகின் ஒட்டு மொத்த கிரிக்கெட் இரசிகர்களையும், கிரிக்கெட் ஆட்டக்காரர்களையும் பிரமிக்கச் செய்த அந்தப் போட்டியைப் பற்றி சொல்லிக் கொண்டேயிருக்கலாம். அப்படி ஒரு போட்டியைப் பார்க்கும் சந்தர்ப்பம் இனி எப்போது வருமோ கூற முடியாது. நான் பிரமித்துப் போன விஷயங்களில் அந்தப் போட்டியும் ஒன்று.

**மலையகத்தில் நேரடி தபால் விநியோகம் இன்று நாளையென இழுபடுகிறதே?**

-எம்.மதுஷிகா, கண்டி.

உள்ளூராட்சித் தேர்தல் முடியும் வரை பொறுத்திருங்கள்.

**வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு த.தேசியக் கூட்டமைப்புக் கோருகிறதே?**

-வி.கோபி, மதுரங்கேணி.

நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் நடைபெற வாய்ப்பு இல்லையென்று அரசு தரப்பு நினைப்பதற்கும் த.தேசிய கூட்டமைப்பு கூறுவதற்குமிடையில் ஒற்றுமையிருக்குமாக இருந்தால் த.தேசியக் கூட்டமைப்பினர் தமது தேசியத் தலைமை மீதே மண் அள்ளிப் போடுகிறார்கள் என்பது தானே உண்மை.

**ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்புகள் நடக்கிறதே ஒப்பிட்டுப்பார்த்தால் சதாமே மேல் என்று தோன்றுகிறது. உங்களுக்கு?**

-எம்.எல்.கமால்டீன், நிந்தவூர்.

அமெரிக்காவின் தவறை நியாயப் படுத்த மேலும் மேலும் தவறிழைக்கப் படுகிறது. எங்கும் பாதிக்கப்படுவது மக்களென்பதுதான் கவலை.

**அடுத்தடுத்து ஒவ்வொரு பிரதேச சபைகளுக்குமான தேர்தல்களும் ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறதே; எதிர்வரும் முப்பதாம் திகதி தேர்தல் நடத்த கால அவகாசம் போதுமா?**

-பீ.எம்.பாரூக், சின்னக் கிண்ணியா.

தேர்தலை ஒத்திவைக்க முடிகிறது. நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீள ஏற்றுக்கொள்ள முடிகிறது என்றால் திகதியையும் வசதிக்கேற்ப ஏன் ஒத்தி வைக்க முடியாதென்று நினைக்கிறீர்கள்.

**மீண்டும் யுத்தம் தொடங்கினால் கிழக்கில் தமது பலம் என்னவென்று புரியும் என்று புலிகள் சொல்லியிருக்கிறார்களே?**

-கே.ஜெயராஜ், உப்புவெளி.

பாம்பின் கால் பாம்பறியும் என்பார்கள். இதற்கெல்லாம் நாம் ஏன் குழம்பவேண்டும்.

**சிந்தியா விண்வெளிக்குப் போக ஆசை உண்டா?**

-கே.பிரதாபன், சுன்னாகம்.

நிலவில் காணி பிடிக்கிறார்களாம் என்ற செய்தி வந்த நாளிலிருந்து இந்த ஆசை உண்டு. விலை குறையும் போது வாங்கிக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன்.

**தீர்க்க தரிசனமாக ஏதாவது முக்கிய விடயமொன்றைக் கூற முடியுமா?**

-எஸ்.பகீரதன், தம்பலகமம்.

வசதியான நாடுகள் விசா வழங்கினால் வடக்கு - கிழக்கு மக்கள் வாழ்ந்த பூமியாக மாறிவிடும்.

**காலையில் எழுந்ததும் மனதில் பதித்துக் கொள்ளவேண்டிய ஒரு சிந்தனை கூறுவீர்களா?**

-ரி.லூசியா, மருதமுனை.

புதிதாய் பிறந்துவிட்டோம் என்று நம்பிக்கை கொள்வதே நல்லதுதான்.

**தம்பி, கலாபக்காதலன், இதயத்திருடன் பார்த்து விட்டீர்களா, எது கொஞ்சமாவது பரவாயில்லை?**

-மா.கீதாஞ்சலி, கந்தரோடை.

'கோவை பிரதர்ஸ்' கொஞ்சம் சிரிப்பு
'தம்பி' - கொஞ்சம் இரசிப்பு
'கலாபக்காதலன்' - இதயத்திருடன் பசப்பு

விடுமுறையும், பணமும் இருந்தால் பார்க்கலாம். எனக்குத்தான் முன்னது இல்லையே.

**லண்டனிலிருந்து மூவாயிரம் பேரைத் திருப்பி இலங்கைக்கு அனுப்பப்போகிறார்களாமே! அதைத் தடுக்க முடியாதா?**

-சீ.ஹரிஹாலன், வவுனியா.

லண்டன் மட்டும் உலகமில்லையென்பதை நம்மவர்கள் தெரியாதவர்களில்லை. லண்டன் பிரஜைகளை இலங்கையில் அத்துமீறிக்குடியேற அனுப்பினால் தடுக்கலாம். இதை எப்படி நிறுத்துவது?

**சிந்தியாவுக்கு வாசகனையா, வாசகியையாப் பிடிக்கும்?**


-து.பொன்மணி, வெள்ளவத்தை.

வாசிப்பவர்களையே பிடிக்கும். புத்திஜீவிகளில் நான் ஆண் - பெண் பேதமெல்லாம் பார்ப்பதில்லை.

# ஸ்போர்ட்ஸ்


ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

**உலக** சாதனை வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடத்தை அமைத்து வைத்துக் கொண்டிருக்கும் முரளிதரன் அண்மையில் நடைபெற்ற



டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக சாதனைக்குரிய ஒருவராக மாறிவிட்டார். 600 டெஸ்ட் விக்கெட்டுகளை சாய்த்த இவர், உலகில் அதிக டெஸ்ட் விக்கெட்டுகளை சரித்த அவுஸ்திரேலிய அணியின் சுழற் பந்து வீச்சாளர் ஷேன் வோர்னுக்கு அடுத்த இடத்தில் இருக்கிறார் முரளிதரன். இவருக்கு அடுத்த இடத்தில் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் கிளேன் மெக்ராத் 542 விக்கெட்டுகளுடன் இருக்கிறார். இவருக்கு அடுத்ததாக அதாவது நான்காவது இடத்தில் மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப் பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஸ் 519 விக்கெட்டுகளுடன் இருக்கிறார். ஐந்தாம் இடத்தில் இந்திய அணியின் சுழல் பந்து வீச்சாளர் அனில் கும்ளே 498 விக்கெட்டுகளுடன் இருக்கிறார்.

அது மட்டுமல்ல முரளிதரன் முதல் முதலில் 50தடவை 5 விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமையை இவர் தன்வசமாக்கியுள்ளார். இவருக்கு அடுத்ததாக அவுஸ்திரேலிய அணியின் சிர்சி ஹன்டிலி 36 தடவை 5 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். இப்படி சாதனை மேல் சாதனை



புரிந்து வரும் 34 வயதாகும் இவர் மணம் முடித்துக் கொண்டது சென்னையைச் சேர்ந்த மதிமலர் எனும் பெண்ணை என்பதும் குறிப்பிடத்தக்கது. சாதனை என்றாலே வெளிநாட்டவர் தான் என்றிருந்த நிலையை மாற்றி நம் நாட்டவரும் அதுவும் ஒரு தமிழர் உலக வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாய் இருப்பது எமக்கும் பெருமை தானே..

## ஒரு மூத்த போராளியின்....

09 ஆம் பக்கத் தொடர்ச்சி..

நம்பிக்கை ஊக்கம் தருகிறதென்றால், மருந்துகள் வாட்டி வதைக்கின்றன. நோயாளியாக இருக்கிறோம் என்கிற உணர்வே ஒரு படபடப்பை ஏற்படுத்துகிறது. எனக்கு ஏற்கனவே பைபாஸ் சர்ஜரி நடந்திருக்கிறது. இப்போது மாற்றுக் கல்லீரல் அறுவை சிகிச்சை செய்வதற்கான முயற்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. அதற்கு என் உடம்பு ஒத்துழைக்குமா என்று தெரியவில்லை.

ஈழத்தில் ஆயுதப் போராட்டத்தைத் துவக்கி வைத்தவர்களில் நானும் ஒருவன் என்கிற முறையில், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களிலிருந்து புலிகள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஈழத்தின் அருகில் இருந்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டிய இந்தியா, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்க்கிறது. இதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, இலங்கை பிரச்சினையில் அமெரிக்கா தலையிட்டு, ஆக்கிரமிக்க முயலும். எப்போதும் அந்நிய சக்திகளைவிட, ஈழப் பிரச்சினையில் இந்தியா நேர்மையுடனும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் தலையிடுவதைத்தான் போராளிகள் விரும்புவார்கள். என் விருப்பமும் அதுதான்!'' என்கிறார் புஷ்பராஜா.

கடைசியாக, புஷ்பராஜாவுக்கு மாற்றுக் கல்லீரல் பொருத்தும் முயற்சியையும் அவர் உடம்பு தாங்காது என்பதால் மருத்துவர்கள் வைவிட்டு, அவரது கடைசி நாட்களை சொந்த மண்ணிலேயே சென்று கழிக்கும்படி சொல்லிவிட்டார்கள்.

''எனக்கேது சொந்த மண்? நான் எங்கே செல்ல முடியும்? நாளை அமையவிருக்கும் தமிழ் ஈழத்தைக் காண நான் உயிரோடிருக்க மாட்டேன். நான் பிறந்த மண்ணே... நான் வாழ முடியாத மண்ணே... ஒரே ஒரு கேள்வி உன்னிடம்... வெடி மருந்து வீச்சமில்லாத உன் தெருக்களில் எம் பிள்ளைகள் நடக்கின்ற நாள் என்று வரும் எம் மண்ணே?'' அவர் கூறியது போல் மார்ச் 10ஆம் திகதி அவர் பிரான்சில் காலமானார் என்பது குறிபிடத்தக்கது.

## வட - கிழக்கும் அபிவிரு........

5 ஆம் பக்கத் தொடர்ச்சி..

அரசின் நிதி உதவிகளை சுருக்கமாகப் பார்க்கும் சில வரைபடத் தரவுகளையும், தொண்டு நிறுவனங்களின் விபரங்களையும் பார்க்கலாம்.

### ஜனாதிபதி நிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

### தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

ரூபா 179,91 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் குறுகிய கால தொழிற் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமைச்சினால் கூட்டிணைக்கப்பட்டன. ஆரம்ப நிதி ஏற்பாடுகளாக ஜனாதிபதி நிதியத்திலிருந்து 40 மில்லியன் ரூபா ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. மாவட்டம் ஒவ்வொன்றிலும் மதிப்பீடப்பட்ட மொத்தப் பணத் தொகை பின்வருமாறு :

| மாவட்டம் மதிப்பீடப்பட்ட நிதி | ரூ.மி |
|---|---|
| யாழ்ப்பாணம் | 22.33 |
| கிளிநொச்சி | 22.33 |
| முல்லைத்தீவு | 23.27 |
| மன்னார் | 23.02 |
| வவுனியா | 19.86 |
| திருகோணமலை | 22.82 |
| மட்டக்களப்பு | 22.99 |
| அம்பாறை | 23.39 |
| *மொத்தம்* | *179.91* |

இக் கருத்திட்டம், தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் அமுல்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் 6,514 இளைஞர்கள் பயனடைவர்.

### சுனாமி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்லாறு கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக 100 வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகள் அரசாங்கத்தால் இனங் காணப்பட்டுள்ளன. இதன் வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து 45 மில்லியன் ரூபா பணத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 100 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் மணற்காடு, கொட்டடி கிராமங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 100 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து 45 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### மழைநீரைச் சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

வட பகுதியின் 05 மாவட்டங்களிலும் 100 சீமெந்து பெரோ தாங்கிகளை அமைத்து பொருத்துவதற்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

### திருகோணமலை மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளை வழங்கல்** | **12** | **22.40** | **22.40** |
| அணுகுபாதை | 10 | 21.80 | 21.80 |
| நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு | 2 | 0.60 | 0.60 |
| **உற்பத்தி பிரிவு** | **1** | **6.30** | **6.30** |
| நீர்ப்பாசனம் | 1 | 6.30 | 6.30 |
| **பொருளாதாரம் உட்கட்டமைப்பு வசதிகள்** | **1** | **5.70** | **5.70** |
| மின்வலுச்சக்தி | 1 | 5.70 | 5.70 |
| **சமுதாயம், அபிவிருத்தி, கலாசார விளையாட்டு மற்றும் சமூக நலன்புரி** | **6** | **5.30** | **5.09** |
| கலாசார மற்றும் சமய அலுவல்கள் | 4 | 3.60 | 3.60 |
| ஏனைய சமூக நலன்புரி வசதிகள் | 2 | 1.70 | 1.49 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | **1** | **0.30** | **0.30** |
| உபகரணங்கள்/தளபாடங்கள்/வாகனங்கள் வழங்குதல் | 1 | 0.30 | 0.30 |
| முழு மொத்தம் | 21 | 40.00 | 39.79 |

### வவுனியா மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல்** | **11** | **2.15** | **2.15** |
| நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாடு | 11 | 2.15 | 2.15 |
| **உற்பத்தி பிரிவு** | **1** | **0.50** | **0.50** |
| நீர்ப்பாசனம் | 1 | 0.50 | 0.50 |
| **பொருளாதாரம் உட்கட்டமைப்பு வசதிகள்** | **11** | **11.94** | **11.94** |
| மின்வலுச்சக்தி | 1 | 0.22 | 0.22 |
| பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் | 10 | 11.72 | 11.72 |
| **சமூக உட்கட்டமைப்பு வசதிகள்** | **4** | **6.71** | **6.71** |
| கல்வி | 3 | 0.71 | 0.71 |
| சுகாதாரம் | 1 | 6.00 | 6.00 |
| **மீள் அபிவிருத்தி, கலாசார, விளையாட்டுத்துறை மற்றும் நலன்புரி** | **4** | **1.85** | **1.85** |
| நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள் | 1 | 0.10 | 0.10 |
| கலாசார மற்றும் சமய அலவல்கள் | 1 | 0.60 | 0.60 |
| ஏனைய சமுதாய நலன்புரி வசதிகள் | 2 | 1.15 | 1.15 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | **1** | **0.13** | **0.13** |
| அலுவலக கட்டிடங்கள் மற்றும் அலுவலக வாசஸ்தலங்களை நிர்மாணித்தல் மறுசீரமைப்பு | 1 | 0.13 | 0.13 |
| மொத்தம் | 32 | 23.36 | 23.36 |

### கிளிநொச்சி மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளை வழங்கல்** | 1 | 1.70 | 1.70 |
| வீடமைப்பு | 1 | 1.70 | 1.70 |
| **உற்பத்தி பிரிவு** | **2** | **7.50** | **7.50** |
| விவசாயம், கால்நடை வளங்கள் | 1 | 5.00 | 5.00 |
| கைத்தொழில் மற்றும் வர்த்தகம் | 1 | 2.50 | 2.50 |
| **சமுதாயம் உட்கட்டமைப்பு வசதிகள்** | **2** | **7.64** | **7.64** |
| கல்வி | 1 | 6.84 | 6.84 |
| சுகாதாரம் | 1 | 0.80 | 0.80 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | **2** | **3.16** | **3.16** |
| அலுவலக கட்டிடத்தை நிர்மாணித்தல் மறுசீரமைப்பு மற்றும் அலுவலக விடுதிகள் | 2 | 3.16 | 3.16 |
| முழு மொத்தம் | 7 | 20.00 | 20.00 |

### மட்டக்களப்பு மாவட்டம்

| பிரிவு/உபபிரிவு | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்) | விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| **சனத் தொகையை மீளக் குடியமர்த்துவதற்காக பூர்வாங்க வசதிகளை ஏற்படுத்தல்** | **44** | **25.76** | **25.76** |
| வீடமைப்பு | 2 | 1.50 | 1.50 |
| அணுகுபாதை | 34 | 21.90 | 21.90 |
| நீர் வழங்கல், சுத்தகரிப்பு | 8 | 2.36 | 2.36 |
| **உற்பத்தி பிரிவு** | **1** | **2.00** | **2.00** |
| நீர்ப்பாசனம் | 1 | 2.00 | 2.00 |
| **பொருளாதாரம் உட்கட்டமைப்பு வசதிகள்** | **4** | **2.80** | **2.80** |
| மின்வலுச்சக்தி | 2 | 0.40 | 0.40 |
| வீதிகள் மற்றும் பாலங்கள் | 2 | 2.40 | 2.40 |
| **சமூக உட்கட்டமைப்பு வசதிகள்** | **1** | **1.80** | **1.80** |
| கல்வி | 4 | 1.80 | 1.85 |
| **சமுதாயம், அபிவிருத்தி, கலாசார விளையாட்டு மற்றும் சமூக நலன்புரி** | **4** | **3.10** | **3.10** |
| கலாசார மற்றும் சமய அலுவல்கள் | 2 | 2.00 | 2.00 |
| ஏனைய சமூக நலன்புரி வசதிகள் | 2 | 1.10 | 1.10 |
| **நிருவாகத்தை வலுப்படுத்தல்** | **3** | **4.5** | **4.5** |
| அலுவலக கட்டிடங்கள் மற்றும் அலுவலக விடுதியை நிர்மாணித்தல் மறுசீரமைப்பு | 3 | 4.5 | 4.5 |
| மொத்தம் | 57 | 40.00 | 40.00 |

# அடம் ஸ்மித்
## (கி.பி. 1723 - 1790- நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**பொருளாதாரக்** கோட்பாட்டு வளர்ச்சியில் மிகுந்த செல்வாக்கு, புகழ் வாய்ந்தவராகத் திகழ்ந்தவர் அடம் ஸ்மித். இவர் ஸ்கொட்லாந்திலுள்ள கிரிக்கால்டி நகரில் 1723ஆம் ஆண்டில் பிறந்தார். இளமையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் 1751 முதல் 1764 வரையில் ஒரு தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றினார். அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தபோது, "அறநெறி உணர்வுகள் பற்றிய கோட்பாடு" (Theory of Moral Sentiments) என்ற தமது முதலாவது நூலை வெளியிட்டார். இந்நூல் இவருக்கு அறிஞர்கள் வட்டாரத்தில் பெரும் புகழ் தேடித் தந்தது. எனினும், இவருக்கு அழியாப் புகழ் ஈட்டித் தந்தது "நாடுகளின் செல்வத்தின் தன்மை மற்றும் அவற்றுக்கான காரணங்கள் பற்றிய ஆய்வு" (An Enquiry info the Nature and Causes the of Wealth of Nations) என்ற நூலேயாகும். இந்த நூல் 1776ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியான உடனேயே பெரும் புகழ் பெற்றது. இதனால் கிட்டிய புகழும் மரியாதையும் இவரது இறுதிக்காலம் வரையில் நீடித்தது. இவர் கிர்க்கால்டில் 1790ஆம் ஆண்டில் காலமானவர். ஸ்மித் திருமணமே செய்து கொள்ளவில்லை. எனலே அவருக்கு குழந்தைகளும் இல்லை.

பொருளாதார கோட்பாட்டில் கவனம் செலுத்திய முதல் அறிஞர் அடம் ஸ்மித் என்று கூற முடியாது. அவரது புகழ் பெற்ற கொள்கையில் பல அவருடைய கற்சிந்தனையில் உருவானவை அல்ல. ஆனால், முறைப்படுத்தப்பட்ட விரிவான ஒரு பொருளாதாரக் கோட்பாட்டினை முதன் முதலில் அளித்தவர் இவர்தான் என்பதில் ஐயமில்லை. அவர் அளித்த இந்தக் கோட்பாடு, அத்துறையின் எதிர்கால முன்னேற்றத்திற்கு வலுவான அடித்தளமாக அமைந்தது. இந்தக் காரணத்தினாலேயே இவருடைய "நாடுகளின் செல்வம்" என்ற நூல் அரசியல், பொருளாதாரம் பற்றி நவீன ஆராய்ச்சிக்கு ஒரு முதற்படியாக அமைந்தது எனக் கூறுவது பொருந்தும்.

கடந்த காலத்தில் நிலவிய பல தவறான கொள்கைளைத் தெளிவுபடுத்துவதற்கு இந்த நூல் உறுதுணை புரிந்தது. அதுவே இந்நூலின் பெருஞ்சாதனையாகும். "பணம்தான் செல்வம்; ஓர் அரசு பெருமளவுத் தங்கத்தைத் தன்வசம் வைத்துக் கொள்ள வேண்டும்" என வற்புறுத்திய பழைய கோட்பாட்டினை ஸ்மித் இந்நூலில் வன்மையாக கண்டித்தார். அதேபோன்று, "நிலந்தான் முதன்மையான பொருள்வள ஆதாரம்" என்ற



கொள்ளையினையும் இந்நூல் மறுத்தது. மாறாக உழைப்புதான் (Labour) அடிப்படை முக்கியத்தும் வாய்ந்தென இது வலியுறுத்தியது உழைப்பு பகிர்வு (Division of Labour) வாயிலாக உற்பத்தியைப் பெருமளவுக்கு அதிகரிக்க முடியும் என ஸ்மித் உறுதியாகக் கூறினார். தொழில்துறைவிரிவாக்கத்துக்கு மட்டுக்கட்டை பொடுகிற காலங்கடந்தத் தாறுமாறான அரசுக் கட்டுப்பாடுகளை அவர் கடுமையாகத் தாக்கினார்.

"நாடுகளின் செல்வம்" என்ற நூலில் ஸ்மித் வலியுறுத்திய மையக் கருத்து இதுதான். தடையிலா அக்காடி (Free Market) மேற்போக்கில் ஒழுங்கற்றதாகத் தோன்றினாலும், உள்ளபடிக்கு அது தன்னையே முறைப்படுத்திக் கொள்ளும் ஒரு செயல்முறையைக் கொண்டிருக்கிறது. அதன்படி, அந்த அங்காடி, சமுதாயம் மிகுதியாக விரும்பக் கூடிய சமுதாயத்திற்கு மிகவும் தேவைக்கூடிய பொருள்களை, சமுதாயம் விரும்புகிற வகையிலம், சமுதாயத்திற்கு தேவைப்படுகிற அளவுக்கும் தானாகவே உற்பத்தி செய்ய முனைகிறது. எடுததுக்காட்டாக, மக்கள் விரும்பும் ஏதேனும் பொருள் பற்றாக்குறையாக இருக்கிறது எனக் கொள்வோம். அப்போது, அதன் விலை ஏறுவது இயற்கை. விலை ஏற ஏற, அப்பொருளின் உற்பத்தியாளருக்கு அதிக ஆதாயம் கிடைக்கிறது. இவ்வாறு அதிக ஆதாயம் கிடைப்பதைப் பார்த்து மற்ற உற்பத்தியாளர்களும் அதே பொருளை உற்பத்தி செய்ய வேல் கொள்கிறார்கள்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



**நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

வணக்கமுங்கோ,

**நான்** ஒவ்வொரு முறையும் சொல்லிற மாதிரித்தானுங்கோ இந்த முறையும் நடந்திருக்கு. பேச்சுவார்த்தையெண்டு வரேக்க அது நடக்குமோ, நடக்காதோ, அப்புடி நடந்தாலும் அது ஒழுங்கா நடக்குமோ, நடக்காதோ எண்ட ஒரு விதமான பதற்றத்தை ஏற்படுத்திப் போடுவினம். அதுபோலைதான் இப்பவும் வாறமாசம் பத்தொன்பதாம் திகதிகளில பேச்சு நடக்குமெண்டு செய்தி வந்ததில இருந்த ஆறுதலை, நாட்டில நடந்துகொண்டிருக்கிற சம்பவங்கள் கொஞ்சம் கொஞ்சமா குறைச்சுக் கொண்டு வருகுதுங்கோ. ஒரு பக்கத்தாலை மட்டக்களப்பில ஏதோ திகில் படம் எடுக்கிறவை மாதிரி ஒவ்வொரு ஆக்களா போட்டுத் தள்ளிக் கொண்டிருக்கினம். அதில சாகிறவன் யார் எண்டதில இருந்து கொண்டு அவைக்கு எதிர்த் தரப்புதான் உந்தக் கொலையைச் செய்திருக்கும் எண்ட முடிவுக்கு வர வேண்டியதுதான். இல்லையெண்டால் அவையே சொல்லிற மாதிரி இனந்தெரியாத யாரோ வந்துதான் உந்தக் கொலையைச் செய்துபோட்டுப் போயிருக்கினம் எண்டு ஒரு குத்துமதிப்பா நினைச்சுக்கொள்ள வேண்டியதுதான்.

உதே மாதிரித்தான் முன்னமும் திரும்புற பக்கமெல்லாம் ஒரு கொலை நடந்துது, அதை இனந்தெரியாதவை செய்துபோட்டிச்சினம் எண்டு ஊடகங்களும் கண்காணிப்பாளர்களும் ஒதுங்கிக் கொண்டதாலைதான் பிரச்சினை நாளுக்கு நாள் அதிகரிச்சு கடைசியில ஒரு நாளைக்கு குறைந்தது மூண்டு பேர் எண்ட கணக்கில ஆக்களைக் கொலை செய்துகொண்டிருந்திச் சினம். அந்த மூட்டம் தான் ஜெனீவாப் பேச்சு வந்து ஜெனீவாப் பேச்சுக்குப் பிறகு நாட்டில நல்ல நிலைமை ஏற்படும் எண்டு சொல்லிச்சினம். ஆனால் அதுக்கு முதலில உந்த ஜெனீவாப் பேச்சு ஒரு சுமுகமான முறையில நடந்து முடிய வேணும் எண்டு சனம் மன்றாடிச்சுதுகள். அது மட்டுமில்லாமல் ஜெனீவாவில பேச்சு ஆரம்பிக் கேக்க நாட்டில கூட்டுப்பிரார்த்தனையளும், வேண்டுதல்களுமா மன்றாடிச்சினம். கடைசியில முதல் நாள் பேச்சில முரண்பட்டுக் கொண்டா லும், உதவி வழங்கும் நாடுகள் பிரம்பைக் கையில தூக்கிக் காட்டவும் இரண்டாம் நாள் ஒழுங்காப் பேசிச்சினம். அதுவும் உருப்படியா நடக்கயில்லையெண்டதை பிறகு பிறகு நடந்த சம்பவங்கள் உணர்த்தின. இப்ப என்னடா வெண்டால் திரும்பவும் நிலைமை மோசமடையத் தொடங்கியிருக்கு. யாழ்ப்பாணத்தில படைத்தரப்புக்குத் தலையிடியைக் கொடுக்கும் விதமான போராட்டங்களை நடத்துறதும், கிழக்கில கொலைக்கு மேல கொலை விழுந்து கொண்டிருக்கிறதும் சனத்துக்கு நிம்மதியைக் கெடுத்திருக்கு. மறுபக்கத்தில புலிகளின்ர மாவட்டத் தளபதிகள் பழையபடி போர் முழக்கம் முழங்க ஆரம்பிச்சிட்டினம். அரசாங்கத்தை நம்ப ஏலாது; யுத்தந்தான் ஒரே வழி எண்டெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கினம். அதுக்கு உஷார் ஏத்திற விதமா தம்பி சு.ப.வும் தலைவர் பொறுமையின்ர விளிம்பில நிண்டு கொண்டு இந்த அரசுக்கு கடைசி வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார் எண்டு சொல்லிறார்.

அதுமட்டுமே, தமிழ் மக்கள் நினைக் கினமாம். இந்த அரசாங்கத்தை நம்ப ஏலாதாம். ஜெனீவாவில பேசினதுகளை இந்த அரசாங்கம் சரியா நடைமுறைப்படுத்தாதாம் எண்டும் சொல்லுறார். அப்புடியெண்டால் தமிழ் மக்கள் தான் நம்பினமில்லையெண்டு ஒரு வாதத்துக்கு ஒத்துக்கொண்டால் மறுவழத்தாலை யோசிக்கேக்க, புலிகள் நம்பினம், அவைக்கு உந்தச் சிங்கள அரசு மேலை நம்பிக்கை யிருக்கு, அவை சரியா நடக்கினமெண்டு நம்பினம். சனந்தான் சமாதானத்தில நம்பிக்கையில்லாமல் அரசாங்கத்தின்ர மேல சந்தேகப்படுகுதுகள் எண்டெல்லே சொல்லுறார். இவைக்கு ஒரு கொள்கை, கோட்பாடு இல்லை எண்டவிதமாச் சொல்லிறார். தொட்டதுக் கெல்லாம் சனத்தை இழுத்தால் நல்லா இருக்காதுங்கோ. சனத்துக்கு யுத்தமொன்றின் மேலே விருப்பமில்லையெண்டதையும், இடம்பெயர்ந்து அகதிகளாகத் திரியிறதில விருப்பமில்லையெண்டதையும் இவை எப்பவாவது வெளியால சொல்லி இருக்கினமோ? இல்லையே! உதில இருந்து என்ன தெரியுது, இவைக்குச் சந்தேகமெண்டதையும், யுத்தம் மீதான விருப்பத்தையும் தாங்கள் நேராச் சொன்னால் தங்கட பேர் கெட்டுப்போயிடும் எண்டதாலதான் சொல்ல வேண்டியதை தாங்கள் சொல்லிறதும் அந்தப் பலியை சனத்தின்ர தலையில போடுறதுமா இருக்கினம்.

உப்பிடி தங்கட விருப்பத்தையெல்லாம் சனத்தின்ர பெயரில சொல்லி, ஏதோ எங்கட சனம் உந்த அவல வாழ்வை நீடிச்சுக்கொள்ள விருப்பப்படுவது மாதிரியும், சும்மா இருக்கிற புலியளை வலுக்கட்டாயமா வாங்கோ தம்பிமார், வந்து சண்டை பிடியுங்கோ. எங்களுக்கு ஒரு இடத்தில நிம்மதியா இருக்க முடியாதடாப்பா. நாங்கள் அடிக்கடி காடு கரையெண்டு ஓடித்திரிய வேணும், அகதியாத் திரிஞ்சு, நிவாரணச் சாமா னுக்குக் கையேந்தித் திரிஞ்சு சாப்பிட்டாத்தான் கௌரவமா இருக்குமெண்டு பிடிவாதம் பண்ணுற மாதிரியெல்லோ இவை நினைச்சுக் கொண்டு கதை சொல்லினம். கடைசியில ரெண்டாம் கட்டப் பேச்சு நடக்குமோ, நடக்காதோ எண்ட சந்தேகம் ஏற்பட்டிருக்குது. உந்தப் பதற் றத்தை எங்கட ஊடகங்களும், புத்திஜீவிகளும் ஏப்ரல் மாசம் 18ஆம் திகதி வரையும் விவாதிக் கப்போகினம். அதுமட்டும் இல்லையுங்கோ, அவை கிளப்பி விடுகிற பரபரப்புகளுக்கு உயிர் குடுக்கிறதுக்கு பிரச்சினைகளையும் உண்டு பண்ணப் போகினம். பொறுத்திருந்து பார்ப்பம், என்ன நடக்குதெண்டு.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்
(16.03.2006 தொடங்கி 22.03.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மீனம் - சூரியன், இராகு. மேடம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். மகரம் - வெள்ளி. கும்பம் - புதன்.
சந்திரன் கன்னி, துலாம், விருச்சிகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், முயற்சியின்மை, பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, தேககசுகக் கஷ்டம், குடும்பப் பகை, வெளியார் தொல்லை, உத்தியோகப் பயம், மறைமுக எதிர்ப்பு, மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் அலைச்சல், மறைமுக எதிர்ப்பு, பணக் கஷ்டம், உறவினர் உபத்திரவம், பெரியோர் சகாயம், குடும்பக் கஷ்டம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, பண வரவு, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், உறவினர் உதவி, குடும்ப சுகம், உத்தியோக மகிழ்ச்சி, மேலதிகாரிகளால் நன்மை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பலிதம், பணியாளர் நன்மை, தூர இடப் பயணம், முயற்சி பலிதம், தேக சுகக் கஷ்டம், மனக் கவலை, குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் உயர்ச்சி, புதிய முயற்சி, பணக் கஷ்டம், உறவினர் உதவி, வெளியிட வாழ்க்கை, திடீர் சுகயீனம், குடும்பக் கலகம், உத்தியோகப் பற்று, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விச் சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் மேன்மை, பெரியோர் உதவி, பண வரவு, தேகசுகக் கஷ்டம், அந்நியர் நட்பு, தூர இடப் பயணம், எதிர்பாரா செலவு, குடும்ப மேன்மை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் மந்தம், மனக் கவலை, பண விரயம், கடன் தொல்லை, உறவினர் உதவி, சுபகாரிய மகிழ்ச்சி, குடும்பப் பாரம், உத்தியோக மாற்றம், மனப் பயம், மேலதிகாரிகள் கெடுதி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் நன்மை, பலவிதப் பேறு, புதிய முயற்சி, அந்நியர் நட்பு, கௌரவம், தேக சுகக் குறைவு, உறவினர் உதவி, குடும்பப் பகை, உறவினரால் கெடுதி, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்வி மாற்றம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் பயம், பணியாளர் தொல்லை, கோப மிகுதி, மனக் கலக்கம், உயர்ந்த எண்ணம், வீண் மனஸ்தாபம், பயனற்ற செயல், குடும்பச் செலவு, மனக்குறை நீங்கும், உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, பணவரவு தடை, மனக் கலக்கம், பெரியோர் உதவி, பிரயாண மிகுதி, வெளியிடத் தொல்லை, குடும்ப மகிழ்ச்சி, பிள்ளைகளால் கஷ்டம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் கஷ்டம், பரீட்சைகளில் தோல்வி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, கடன்படல், தேகசுகப் பயம், பெரியோர் பகை, மனக் கலக்கம், குடும்பப் பாரம், செலவு மிகுதி, உத்தி யோகத் தொல்லை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் நன்மை, காரியானுகூலம், பிரயாணக் கஷ்டம், பெரியோர் சகாயம், உறவினர் உபத்திரவம், கோப மிகுதி, குடும்பப் பகை, உத்தியோகச் சிக்கல், வெளியார் தொல்லை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்...
செய்திகளாய்...
நமது காதுகளில்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....


இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.

தொலை பேசி :- 0773114208

Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |

## அழகான ஆபத்து

**கடலுக்கடியில்** இருக்கும் அழகான விடயங்கள் பற்றி ஏதேனும் புத்தகத்திலோ, பத்திரிகைகளிலோ வாசிக்கும் போதுதான் மெய்சிலிர்த்துப் போகிறோம். அந்த வகையில் இங்குள்ளதும் ஒரு அபூர்வ மீனினமே. இந்தோபசுபிக், செங்கடல் பகுதிகளில் வாழும் இம் மீனினமானது கடலில் நீந்தும் போது, இவற்றின் உடல் பகுதிகளில் இருந்து விட்டு விட்டு ஒளிரும் வெளிச்சங்கள் உருவாகுமாம். கடலுக்கு அடியில் ஓடும் கப்பல்கள் எனச் செல்லமாக அழைக்கப்படும் இவை, பார்ப்பதற்கு மட்டும்தான் அழகானவை. ஆனால் அருகில் சென்று தொட்டால் உடனே மரணம்தான். இவற்றின் உடலில் காணப்படும் சிறிய முட்கள் விஷத்தன்மை வாய்ந்தனவாம். தொட்ட உடனே அதிகளவு விஷத்தை உடம்பினுள் பாயச்செய்யுமாம். டெற்ரோடொக்சைன் எனப்படும் இவ் விஷமானது கொழுப்பு வகையைச் சேர்ந்தது. இம் மீனின் முட்டைகள், இரத்தம், தோல், ஈரல் மற்றும் குடல் என்பன நச்சுத்தன்மை வாய்ந்தனவாம். மொத்தமாக 0.1 கிராம் விஷம் ஒரு மனிதனை 20 நிமிடத்தில் கொன்றுவிடுமாம்.



## நீளமான காது

ஒட்டுக் கேட்பவர்களுக்கு நீளமான காது உருவாகும் என்பது இலக்கியக் கதைகளில் வரும் ஒரு மரபு. ஆயினும், இங்குள்ள முயலாரும் ஏதோ ஒட்டுக் கேட்டுவிட்டார் போல. உலகிலேயே மிக நீளமான காதுகளை உடைய முயல் எனும் பெருமையைப் பெற்றுள்ள இம் முயல், அமெரிக்காவில் முயல் இனப் பெருக்கம் செய்யும் கழகத்தில் உள்ளதாம். இதன் காதுகள் கிட்டத்தட்ட 79 சென்ரி மீற்றர் (31.12 அங்குலம்) நீளமுடையதென அளக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இதன் உடம்பு முழுவதுமே காதினால் மூடப்பட்டிருக்குமாம்.



## கோப்பைக் கோபுரம்

**பைசா** கோபுரம்தான் சாய்ந்த கோபுரம் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இங்குள்ளதும் ஒரு சாய்ந்த கோபுரம்தான். ஆயினும் இது கண்ணாடி டம்ளர்களின் சேர்க்கையினாலான கோபுரம். சாதனை செய்வதற்காகவே 75 கண்ணாடி டம்ளர்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி, கோபுரம் போல் உருவாக்கி, அதனைத் தன் நாடியில் 10.6 செக்கன்கள் தாங்கி நின்றாராம் ஜமேய்க்கா நாட்டைச் சேர்ந்த பாக்கியாட் எனும் இளைஞர். ஹோட்டல் ஒன்றில் ஊழியராக இருக்கும் இவர், தனது வேலைக்கு ஏற்ற வகையிலேயே சாதனையையும் செய்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. சாதனை என்று வந்துவிட்டால் கண்ணாடி டம்ளர் கூட சாதனைக்கு உபகரணமாகும்.





## ஆறு

ஐந்து விரல் கொண்டிருப்பது இயற்கை. இங்கிருக்கும் இரட்டையர்களுக்கோ கையிலும் காலிலும் ஆறு விரல்கள் இருக்கின்றனவாம். இந்தியாவைச் சேர்ந்த த்ரிப்புகவான் மற்றும் த்ரிலோகியாதவ் எனும் இவர்களின் கையில் ஆறு விரல்களும், காலில் ஆறு விரல்களுமாக மொத்தம் 22 விரல்கள் உள்ளனவாம். உலக சாதனைப் புத்தகத்தில் கையிலும், காலிலும் ஆறு விரல்களைக் கொண்டவர்கள் என இவர்களின் பெயர்கள் பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## வாயழகு

பாம்பின் வாயை இவ்வளவு அண்மையில் சிலர் பார்த்திருப்பார்கள். வாயில் முன் இரண்டு பக்கமும் காணப்படுவது விஷப் பற்களே. இப் பாம்பு அதிக விஷமுடைய கரு நாக வகையைச் சேர்ந்தது. இது அநேகமாக ஆபிரிக்காவின் காடுகளிலேயே காணப்படுமாம். இது 1.83 மீற்றர் (6 அடி) நீளமுடையதாம். நாய் ஒன்றினுடைய வாய்க்கு சமனான வாயை உடைய இப் பாம்பின் விஷப் பற்கள் 2 அங்குலம் நீளமுடையனவாம்.





## சாதனையாளர்

**அண்மைக்காலமாக** சாதனை மேல் சாதனை செய்து வரும் எமது நாட்டு கிரிக்கெட் வீரரான முத்தையா முரளிதரன் அனைவராலும் பாராட்டத்தக்கவரே. ஏப்ரல் 17, 1972ஆம் ஆண்டு கண்டியில் பிறந்த இவர், 1992ஆம் ஆண்டு இலங்கை தேசிய கிரிக்கெட் அணியில் சேர்ந்து தனது முதலாவது ஒரு நாள் போட்டியினை இந்தியாவுக்கு எதிராக விளையாடினார். 1993களில் இலங்கை அணியில் இருந்த ஒரே ஒரு தமிழ் இளம் வீரர் எனும் பெருமையைப் பெற்ற இவர், தற்போது 600 டெஸ்ட் விக்கெட்டுகளை விழ்த்தி, அதிகூடிய விக்கெட் விழ்த்திய உலக வீரர்களின் இரண்டாம் இடத்தில் இருக்கிறார். அத்துடன் உலகில் முதலாவதாக 50 5 விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமையையும் முரளிதரன் பெற்றுள்ளார். முரளிதரன் பெண் எடுத்த ஊரான தமிழ் நாட்டில் இருந்து கருணாநிதி அவர்கள் கூட இவரின் இந்த சாதனையைப் பாராட்டியுள்ளார். என்ன இருந்தாலும் தன்னாட்டு குடிமகளை எடுத்தவர்தானே என்றுதான். ( மேலும் தகவல்களை அறிய 22ஆம் பக்கம் பார்க்க.)